வெளியீடு 7-4-2004 Issued 7-4-2004

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**புதன்கிழமை நவம்பர் 5, 2003—தொகுதி 53—எண். 1**

**Wednesday, the 5th November, 2003 —Volume 53—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

[Price Rs. 3.00

5-11-2003

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii - vii |
| Governor and Council of Ministers | ix - xii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xiii - xvi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகரவரிசைப்படி) | xvii - xxvii |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1 - 36 |
| **2. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| (அ) மது விற்பனையில் அரசு எடுத்துள்ள முடிவின் நிலை | 36, 41 - 74 |
| டாக்டர் க. பொன்முடி | 41 - 57 |
| திரு. சி. ஞானசேகரன் | 57 - 62 |
| திரு. ஜி.கே. மணி | 62 - 65 |
| திரு. லா. சந்தானம் | 65 - 67 |
| *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 43, 44, 50-51, 52, 53, 59, 61-62, 64, 67, 68-74 |
| (ஆ) பொது விநியோகக் குடும்ப அட்டை பெற தகுதியுடையோர் | 74 - 119 |
| *திரு. எ.வ. வேலு | 75 - 85 |
| திரு. சி. ஞானசேகரன் | 86 - 90 |
| திரு. ஜி.கே. மணி | 90 - 91 |

| | | பக்கங்கள் |
|---|---|---|
| 2. | சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி | |
| | செல்வி க. பாலபாரதி | 91 - 92, 94, 96 - 102 |
| | திரு. வை. சிவபுண்ணியம் | 104 - 110 |
| | *திரு. ப. அரசன் | 110 - 113 |
| | திரு. மு. அப்பாவு | 113 - 117 |
| | *மாண்புமிகு திரு. [illegible] | 76, 82, 83 - 84, 88, 89, 92 - 94, 98, 99 - 100, 111, 117 - 119 |
| 3. | தகவல் கோரல்— | |
| | உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 37 - 40 |
| 4. | கவன ஈர்ப்பு— | |
| | (அ) வேலூர் நகர் சைதாப்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் அரியூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல் | 119 - 122 |
| | (ஆ) வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகள் மற்றும் நியாய விலைக் கடைகளை யானைகள் சேதப்படுத்துதல் | 122 - 125 |
| 5. | அறிக்கைகள் அளித்தல்— | |
| | (அ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு | 126 |
| | (ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | 126 |
| 6. | அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— | |
| | (அ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2003 | 126 - 127 |
| | (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 127 - 128 |
| 7. | பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்— | 128 - 129 |


185-084



## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—திரு. பெ. ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. முதலமைச்சர் | .. | **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன். |
| 2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள். |
| 3. நிதி அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல். |
| 4. சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல். மின்சாரம் மற்றும் மரபு சாரா எரிசக்தி மேம்பாடு. |



D
V21 b,3 P03
P03.S3.1

5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**
இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

6. கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை:**
கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**
மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்,

8. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

9. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

10. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**
ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.



11. போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள், தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.

12. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**
தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

13. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**
குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

14. வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**
வணிக வரிகள், மற்றும் கூட்டுறவு.

15. உணவு துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. மோகன்:**
உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

16. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**
நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றி யங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

| | | |
|---|---|---|
| 17. **கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதரன்:** *கால்நடை பராமரிப்பு.* |
| 18. **வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.* |
| 19. **வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** *வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.* |
| 20. **பால் வளத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** *பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.* |
| 21. **கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** *கைத்தறி மற்றும் துணித் தொழில்.* |
| 22. **மீன்வளத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. எஸ். ராஜகிருஷ்ணன்:** *மீன்வளம்.* |
| 23. **சுற்றுலாத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. அ. மில்லர்:** *சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.* |
| 24. **பிற்படுத்தப்பட்டோர் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** *பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்* |



| | | |
|---|---|---|
| 25. **செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம் மற்றும் செய்தித்தாள் கட்டுப்பாடு. |
| 26. **விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** *விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.* |

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR—THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor Irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance** | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. **Minister for Law, Information Technology and Electricity** | .. | **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts, Information Technology, Electricity and Non-conventional Energy Development. |
| 5. **Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru P.C. Ramasamy:** Hindu Religious and Charitable Endowments. |

6. **Minister for Education** .. **The Hon. Thiru S. Semmalai:** Education, Technical Education, Science and Technology, Archaelogy, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees.

7. **Minister for Health** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:** Health, Medical Education and Family Welfare.

8. **Minister for Agriculture** .. **The Hon. Thiru R. Jeevanantham:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

9. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

10. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:** Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

11. **Minister for Transport and Labour** .. **The Hon. Thiru R. Viswanathan:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakf's.

12. **Minister for Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:** Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.



13. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru K. Pandurangam:** Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

14. **Minister for Commercial Taxes and Co-operation.** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:** Commercial Taxes and Co-operation.

15. **Minister for Food** .. **The Hon. Thiru P. Mohan:** Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Statistics.

16. **Minister for Local Administration** .. **The Hon. Thiru M.C. Sampath:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

17. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodhiran:** Animal Husbandry.

18. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:** Forests & Environment and Pollution Control.

19. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

20. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:** Milk and Dairy Development.

21. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:** Handlooms and Textiles.

22. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:** Fisheries.

23. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:** Tourism and Tourism Development Corporation.

24. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru P. Annavi:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

25. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru K.P. Anbalagan:** Information and Publicity, Film Technology, Cinematograph Act and Newsprint Control.

26. **Minister for Sports and Youth Welfare** .. **The Hon. Thiru Inbathtamilan:** Sports and Youth Welfare.



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

**பேரவைத் தலைவர்**

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

**பேரவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

**மாற்றுத் தலைவர்கள்***

திரு. சி. சிவசாமி

திரு. வி. ஜெயராமன்

திருமதி சி.எம். சூரியகலா

திரு. லா. சந்தானம்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. செ. கு. தமிழரசன்

**செயலாளர்**

திரு. வெ. இராசாராமன்

---

* 3-11-2003 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | - பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர். |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. ரவிச்சந்திர ராஜ், பி.ஏ., | - குழு அலுவலர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - குழு அலுவலர் |



| | |
|---|---|
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | - தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | - | பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ.,பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திருமதி சி. நிர்மலா, பி.காம். | - | தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - | தலைமை நிருபர் |



## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | - | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | - | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | - | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | - | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | - | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | - | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | - | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | - | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | - | புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | - | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சி. | - | பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | - | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | - | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | - | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | - | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | - | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | - | இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | - | வேடசந்தூர் |

20. ஆறுமுகம், திரு. கே. - செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே. ஆர். - திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
31. இராமு, திரு. ந. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே. பி. - பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி. ஜி. - ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே. என். - மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. - அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத்தமிழன், திரு. - ஸ்ரீவில்லிபுத்தூர்



42. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
48. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
51. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
52. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
53. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
54. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
55. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
56. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
57. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
58. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
59. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
60. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
61. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
62. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
63. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்

64. கார்த்தி, திரு. மு. - சேலம்-2
65. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்
66. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)
67. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)
68. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
69. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்
70. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
71. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
72. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
73. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
74. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
75. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
76. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
77. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
78. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
79. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
80. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
81. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
82. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
83. சந்திரசேகரன், திரு. எம்.எஸ்.. - இராணிப்பேட்டை
84. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
85. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை



86. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
87. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்
88. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆ.வா.)
89. சாமி, திரு. ஆர். - மேலூர்
90. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
91. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
92. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)
93. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
94. சிவசாமி, திரு. சி. - திருப்பூர்
95. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். - கரூர்
96. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
97. சிவபெருமாள், திரு. அ. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)
98. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
99. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
100. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
101. சுதர்சனம், திரு. கே. - கும்மிடிப்பூண்டி
102. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
103. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
104. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
105. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
106. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
107. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்

108. செம்மலை, திரு. செ. - ஓமலூர்
109. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி.
110. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி
111. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்
112. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்
113. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்
114. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
115. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்
116. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்
118. தமிழரசன், திரு. செ.கு. - நன்னிலம் (செ.வ.)
119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி - மேல்மலையனூர்
120. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்
121. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்
122. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி
123. தனபால், திரு. ப. - சங்ககிரி (செ.வ.)
124. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்
125. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
126. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்
127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
128. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். - காஞ்சிபுரம்
129. திருமாவளவன், திரு. இரா. - மங்களூர் (செ.வ.)



130. துரைமுருகன், திரு. - காட்பாடி
131. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
132. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு
133. நடராஜன், திரு. அ. - குத்தாலம்
134. நடராஜன், திரு. எஸ். - நாட்றாம்பள்ளி
135. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்
136. நடராசன், திரு. வது. - இளையான்குடி
137. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
138. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு
139. நளினி மனோகரன், திருமதி - போளூர்
140. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
141. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு
142. நீலமேகவர்ணம், திரு. லெ. - சாத்தான்குளம்
143. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. - குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)

151. பழனிப்பன், திரு. பெ. - மொரப்பூர்

152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி

153. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்

154. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு

155. பாப்பாசுந்தரம், திரு. அ. - குளித்தலை

156. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)

157. பாரிமோகன், திரு. இ. - தருமபுரி

158. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி

159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். - தொண்டாமுத்தூர்

160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்

161. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்

162. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி

163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி

164. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

165. புகழேந்தி, திரு. இ. - கடலூர்

166. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)

167. பூவராகமூர்த்தி, திரு. ஏ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)

168. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திகுளம்

169. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்

170. பொன்னம்பலம், திரு. ப. - சமயநல்லூர் (செ.வ.)

171. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு



172. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)

173. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)

174. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)

175. மகேஸ்வரி, திருமதி எஸ். - கோயம்புத்தூர் மேற்கு

176. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்

177. மணி, திரு. டி. - விளவங்கோடு

178. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்

179. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை

180. மல்லிகா சின்னசாமி, திருமதி - முசிறி

181. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி

182. மில்லர், திரு. அ. - கூடலூர்

183. முரளிதரன், திரு. கே.வி. - தளி

184. முருகவேல் ராஜன், திரு. க. - வந்தவாசி (செ.வ.)

185. முருகேசன், திரு. ஆ.கு. - ஆத்தூர்

186. முனுசாமி, திரு. கா.பூ. - காவேரிப்பட்டினம்

187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை

188. மோகன், திரு. ப. - சின்னசேலம்

189. யசோதா, திருமதி டி. - ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.)

190. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்

191. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை

192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிசெட்டிப் பாளையம்

193. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்

194. ராதாரவி, திரு. - சைதாப்பேட்டை

195. ராமசாமி, திரு. பி.சி. - மொடக்குறிச்சி
196. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்
197. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்
198. ராஜகோபால், திரு. ஆ. - சிவகாசி
199. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி
200. ராஜா, திரு. எச். - காரைக்குடி
201. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்
202. ராஜு, திரு. எச்.எம். - உதகமண்டலம்
203. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்
204. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. - பேரூர்
205. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு
206. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. - அரவக்குறிச்சி
207. வடிவேல், திரு. ஆர். - வாணியம்பாடி
208. வளர்மதி, திருமதி பா. - ஆலந்தூர்
209. வளர்மதி ஜெபராஜ், திருமதி - மதுரை மேற்கு
210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. - காட்டுமன்னார் கோவில் (செ.வ.)
211. வாசுதேவன், திரு. பெ. - மதுராந்தகம்
212. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
213. வில்வநாதன், திரு. இரா. - சோளிங்கர்
214. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. - பூங்கா நகர்
215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. - புதுக்கோட்டை
216. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. - பனமரத்துப்பட்டி



217. வீரபாண்டியன், திரு. ஜெக. - மயிலாடுதுறை
218. வெங்கடாசலம், திரு. அ. - ஆலங்குடி
219. வெங்கடாஜலம், திரு. செ. - சேலம்-1
220. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
221. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
222. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு
223. வேல் முருகன், திரு. தி. - பண்ருட்டி
224. வைதியலிங்கம், திரு. மீ.அ. - தாம்பரம்
225. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
226. ஜீவானந்தம், திரு. இரா. - நாகப்பட்டினம்
227. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. - ஆரணி
228. ஜெயக்குமார், திரு. கு. - நாமக்கல் (செ.வ.)
229. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
230. ஜெயராமன், திரு. வி. - பொள்ளாச்சி
231. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி
232. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
233. ஹக்கீம், திரு. எம்.ஏ. - மதுரை மத்தி
234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. - திருவட்டாறு
235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி - (நியமனம்)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் - தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஐப்பசி 19, சுபானு—திருவள்ளுவர் ஆண்டு 2034

## 2003 நவம்பர் 5, புதன்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"சூழாமல் தானே முடிவுவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு"

தம்மைச் சார்ந்த குடிகளை உயர்த்தும் செயல்களில் காலம் தாழ்த்தாமல் ஈடுபட்டு முயலுகிறவர்களுக்குத் தாமாகவே வெற்றிகள் வந்து குவிந்துவிடும்.

### 1. வினாக்கள்-விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 41, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**41—**

#### இலவச வீட்டுமனைப் பட்டா

**•16661—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், எடக்குடி, வடபாதி ஊராட்சியிலுள்ள பகத்சிங் நகரில் வாழும் பழங்குடி இருளர் இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

[2003 நவம்பர் 5

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியத்தைச் சேர்ந்த வடபாதி கிராமம், பகத்சிங் நகரில் வசிக்கும் 30 இருளர் குடும்பங்கள் தற்போது வேளாண்மைத் துறைக்குச் சொந்தமான இடத்தில் குடியிருந்து வருவதால் அந்த இடத்திற்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாத நிலையில் அருகிலுள்ள கொண்டத்தூர் கிராம புல எண் 47/4-ல் தருமபுரம் ஆதீனத்திற்குச் சொந்தமான கோயில் நிலத்தில் 0.40.5 எக்டேர் நிலம் கையகம் செய்யப்பட்டு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும் நிலையில் மேற்படி நிலத்தை குத்தகைக்கு எடுத்திருந்த நபர்கள் எதிர்ப்பு தெரிவித்து வழக்கு தொடுத்துள்ளதால் வீட்டுமனைப் பட்டா வழங்குவது தாமதப்பட்டுள்ளது.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோயில் அருகிலுள்ள எடக்குடி, வடபாதி ஊராட்சி, பகத்சிங் நகரில் எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாமல் வசித்து வரும் மலைவாழ் இனமான இருளர் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா இந்த ஆண்டிலேயே வழங்குவது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் குத்தகைக்கு எடுத்தவர்கள் தொடுத்த வழக்கை விரைவில் முடித்து வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 42, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.



2003 நவம்பர் 5]

42—

### பேருந்து வசதி

***17358—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், செட்டிக்குளம் ஊராட்சி, புதுமனை கிராமத்திற்குப் பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், செட்டிக்குளம் ஊராட்சி, புதுமனை கிராமத்திற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், நாகர்கோவில் மூலம் பொதுமக்களின் தேவைக்கேற்ப ஏற்கெனவே போதுமான அளவு பேருந்து வசதிகள் பெற்றிருப்பதால் புதுமனை கிராமத்திற்கு என்று கூடுதல் பேருந்து வசதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பகுதி மிக வறண்ட பகுதி. வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கின்றது. கூடங்குளம் அணு மின் திட்டப் பகுதிக்கு தற்போது அங்கே வேலை நடப்பதால் நாகர்கோவில், அஞ்சுகிராமம், விஸ்வநாதபுரம், மகாராஜபுரம், கண்ணங்குளம், செட்டிக்குளம், புதுமனை, பெருமணல், ஸ்ரீரங்கநாராயணபுரம் வழியாக கூடங்குளத்திற்கு கூலி வேலைக்கு சென்று வருவதற்கு அங்கே பேருந்து வசதி தேவைப்படுகிறது. ஏற்கெனவே இயக்கப்பட்ட பேருந்துகள்தான் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. புதிதாக கூடங்குளம் அணுமின் திட்டப் பகுதிக்கு—13,500 கோடி ரூபாய்க்கான திட்டம்—ஆயிரக்கணக்கான பேர்கள் கூலி வேலைக்காக சென்று வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அதை மனதில் வைத்து நாகர்கோவிலிலிருந்து மேற்சொன்ன ஊர்கள் வழியாக கூடங்குளத்திற்கு புதிதாக ஒரு பேருந்தும், அதேபோன்று வள்ளியூர், ராதாபுரம்,

பரமேஸ்வரபுரம் வழியாகவும், அதேபோல கூடங்குளம் அணுமின் திட்டப் பகுதிக்கு ஒரு பேருந்தும், அதேபோல் திசையன்விளை, பெட்டைகுளம், சீராத்திகுளம், ராதாபுரம் வழியாக கூடங்குளத்திற்கும் புதிய பேருந்து வசதியை நீங்கள் ஏற்படுத்திக் கொடுத்தால் அந்தப் பகுதி மக்கள் கூடங்குளம் அணுமின் திட்டப் பகுதியில் வேலை செய்து அதன்மூலம் வருகின்ற வருவாயைக் கொண்டு ஓரளவு காலம் கடத்த முடியும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வள்ளியூர், நாகர்கோவில், திசையன்விளையை மையமாக வைத்து 3 புதிய பேருந்துகளை கூடங்குளத்திற்கு புதிதாக வழித்தடங்கள் இயக்கப்படுமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10-05*

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், செட்டிக்குளம் ஊராட்சி, புதுமனை கிராமத்திற்கு பஸ் வசதி வேண்டுமென்று கேட்டிருக்கிறார். ஆனால், அதற்குப் பதிலாக, அவர் தொகுதியிலே இருக்கின்ற ஊர்களையெல்லாம், இங்கே குறிப்பிட்டு, அத்தனை ஊர்களுக்கும் பேருந்து வசதி வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அவர் கேட்ட அந்த ஊர், புதுமனை கிராமம் என்பது, அஞ்சுகிராமம், செட்டிக்குளம், கூடங்குளம் அந்த மெயின்ரோட்டில், பிரதான சாலையிலிருந்து 0.5 கிலோ மீட்டர் தொலைவில்தான் இருக்கிறது. அரை கிலோமீட்டர் தொலைவில்தான் அந்த ஊர் இருக்கிறது. ஆனால், அதேசமயத்தில், அந்த அரை கிலோமீட்டர் தூரம் உள்ள பக்கத்திலே இருக்கின்ற ஊர்களுக்கு, அஞ்சுகிராமம், செட்டிக்குளம், கூடங்குளம் பிரதான சாலையிலேயே அந்த வசதிகள், பேருந்து வசதிகள் கீழ்க்கண்டவாறு செய்யப்பட்டுள்ளன. தடம் எண் 3-ஜி, நாகர்கோவில்-பெருமணல் 10 சுற்றுகள் தடம் எண் 22, கன்னியாகுமரி-கூடங்குளம் 2 சுற்றுகள்; தடம் எண் இ-3, நாகர்கோவில்-புதுமனை 4 சுற்றுக்கள்; ஆக மொத்தம் 16 சுற்றுகள் அந்தக் கிராமத்திற்கு ஏற்கெனவே பேருந்து வசதி செய்யப்பட்டிருக்கிறது. தவிர, புதுமனை கிராம மக்கள் 0.5 கிலோமீட்டர் தொலைவில் பிரதான சாலையில் அமைந்திருக்கும் செட்டிக்குளத்திற்கு வந்துவிட்டால், அந்த 16 சுற்றுகள் அளவில் இருக்கின்ற பேருந்து வசதிகளையெல்லாம் பயன்படுத்திக்கொள்ள முடியும். மற்றொன்று, ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்கு உட்பட்ட எந்தக் கிராமமும்,





பேருந்து வசதி செய்யப்பட்ட கிராமம் என்ற கொள்கையைப் போக்குவரத்துக் கழகங்கள் கடைபிடிப்பதால், இந்த 0.8 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்ற இந்த ஊருக்கு போதுமான பேருந்து வசதி செய்யப்பட்டிருக்கிறது என்பதை அவருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அவர் சொன்ன மற்ற கிராமங்களுக்கு, நாகர்கோவில்-கூடங்குளம் என்று மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாமல் கேள்வி கேட்டிருந்தாலும்கூட, அதே கோரிக்கையை அந்த மாவட்டத்தின் அமைச்சர் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்களும் ஏற்கெனவே பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதோடு மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்களும் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதுகுறித்து, நாகர்கோவில்-கூடங்குளம் கூடுதல் பேருந்து இயக்குவதற்கு அரசு பரிவுடன் ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு, எங்களுடைய மாவட்ட அமைச்சர், மரியாதைக்குரிய பண்ணையார் அவர்களுக்கும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே, நயினார் நாகேந்திரன் என்றால்தான் தெரியும். ஊரிலேதான் பண்ணையார் என்றால் தெரியும்.

**திரு. மு. அப்பாவு:** அதேபோல், நம்முடைய போக்குவரத்து அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, வள்ளியூரிலே இருந்தும், அதேபோல் திசையன்விளையிலே இருந்தும், வேலைவாய்ப்புக்காக காலை, மாலை நேரங்களில் பேருந்து இயக்கப்படுமானால், அங்கே வேலைவாய்ப்புக்காகச் செல்கின்ற கூலி, விவசாயத் தொழிலாளர்களுக்கு அந்த வாய்ப்பு இருக்கும். ஆகவே, நாகர்கோவிலிலே இருந்து கூடங்குளத்திற்கு இயக்குவது போன்று, வள்ளியூர், திசையன்விளையிலே இருந்தும் கூடங்குளத்திற்குப் பேருந்து இயக்குவதற்குப் பரிசீலிக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கூடங்குளத்திற்கு வருகின்ற எல்லாப் பேருந்துகளும், அந்தக் கூடங்குளம் அணுமின் திட்டப் பகுதியைத் தொட்டு வருகின்ற வழியில், பை-பாஸ் ரோட்டையும், உள்ளூர் வழியாகச் செல்கின்ற இரண்டு சாலைகளின் வழியாக இணைத்துச் செல்வதற்கும் ஆணை வழங்கப்படுமா என்று நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலம் அன்போடு கேட்டு அமர்கிறேன்.

[2003 நவம்பர் 5

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கிராமங்களுக்கு அவருடைய கோரிக்கை குறித்து அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி. இது திரு. அப்பாவு தொகுதி.

**திரு. ஜி.கே. மணி:** பொதுவாகத்தான். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகரப் பேருந்துகள் மற்றும் வழித் தடங்களிலே இயங்குகின்ற பேருந்துகள், சாதாரணமாக இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய வழித் தடத்திலே ஒரு கிலோ மீட்டர், 2 கிலோ மீட்டர் அருகிலே இருக்கக்கூடிய கிராமங்களுக்குப் போக்குவரத்து வசதி இல்லாமல் இருக்கிறது. அந்தக் கிராமங்களுக்குப் போக்குவரத்து வசதி வேண்டுமென்று கேட்டால், அந்தப் போக்குவரத்துக் கழகங்களிலே, இதுவரையிலே, அவர்கள் அந்தப் பிரச்சினைகளையெல்லாம் தீர்த்து பேருந்து விடுவதற்கு ஆவன செய்தார்கள். அந்த அதிகாரத்தை இப்போது அரசே எடுத்துக்கொண்டிருக்கிறது. 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் தொலைவுகூட, பேருந்தை நீட்டித்து விடுவதற்கு—அந்த வழித் தடத்திலே நீட்டித்து விடுவதற்குக்கூட—அங்கே அனுமதி இல்லாமல் இருக்கிறது. இது மிகப்பெரிய சிக்கலாகவும், நெருக்கடியாகவும் இருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதைக் கவனத்திலே கொண்டு, மீண்டும் போக்குவரத்துக் கழகங்களுக்கு, நிர்வாக இயக்குநர் அளவிலே அந்த வழித் தடத்தை நீட்டித்துவிடுவதற்கு ஆவன செய்வார்களா? அதிலும்கூட பல்வேறு பிரச்சினைகள், தமிழ்நாடு முழுவதும் இருக்கின்றன. அவசிய அத்தியாவசிய தேவை கருதி, இதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கின்ற பேருந்து வழித் தடத்தில், ஒரு கிலோ மீட்டர் அல்லது 2 கிலோ மீட்டர் தூரம் நீட்டிப்புச் செய்வதற்கு எந்தத் தடையும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, முன்பு அந்த நிர்வாக இயக்குநரிடமிருந்த அந்த அதிகாரம் இப்போது அரசுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகச் சொல்கிறார். அதிலே சில நிர்வாகச் சீர்திருத்தம்



2003 நவம்பர் 5]

செய்வதற்காகவும், தேவையில்லாமல் ஏற்படுகின்ற சில நட்டங்களைத் தவிர்ப்பதற்காகவும் அந்த அதிகாரத்தை நிர்வாக இயக்குநரிடமிருந்து அரசுக்கு பெற்றிருப்பது உண்மைதான். இருந்தாலும்கூட, தேவையான அளவு என்று கருதினால், சட்டமன்ற உறுப்பினர் அந்தந்தத் தொகுதியிலே நீட்டிப்பு வேண்டும் என்று கேட்கிறார்கள் என்று சொன்னால், யார் கேட்டாலும், அதை ஆய்வு செய்து, தேவை என்று கருதினால், 30 கிலோ மீட்டருக்கு மிகாமல் அந்த விதிமுறைகளுக்குட்பட்டு நீட்டிப்புக் கேட்டார்கள் என்றால், உடனுக்குடன் நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டு வருகிறது என்பதை அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுமனை கிராமத்திற்கான கேள்வி. பல பழைய மனைகளுக்கு பேருந்து வசதி செய்யப்படாமல் இருக்கிறது. அதைப்பற்றி பல முறை கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. இருந்தாலும் பேருந்து வசதி என்கிறபோது, பழைய பேருந்துகள் நிறைய செயல்பட்டுக் கொண்டே இருக்கின்றன. அதனாலே, பல வழித்தடங்களிலே போக்குவரத்து தடைப்பட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, புதிய பேருந்துகளை வாங்குவதற்கான முயற்சி அரசிடத்திலே இருக்கிறதா? அதேபோல, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கும் புதிய பேருந்துகள் வாங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு பல முறை, பல நேரங்களில், தேவையான அளவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களும், நானும் பதில்களை சொல்லி இருக்கின்றோம். இப்படி பழைய பேருந்துகள் இன்றைக்கு அதிக அளவிலே ஓடிக் கொண்டிருப்பதற்குக் காரணம், சென்ற ஆட்சியிலே ஏற்பட்டுவிட்ட பல்வேறு நிலைமைகள் காரணங்களால் தொடர்ந்து அந்தப் பழைய பேருந்துகளை இயக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு இருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்குப் பிறகு, அந்தப் பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகள் வாங்குவதற்கு உத்தரவிட்டு, முதல் கட்டமாக, 1,310 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டன; இரண்டாவது கட்டமாக 534 பேருந்துகள் வாங்கப்பட்டு

இருக்கின்றன; மூன்றாவது கட்டமாக இப்போது 125 பேருந்துகள் வாங்குவதற்கு ஆணையிடப்பட்டு இருக்கிறது. இதன் அடுத்த கட்டமாக இன்னும் 600 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு இப்போது அரசின் ஆய்வில் இருக்கிறது. ஆக தேவைக்கு ஏற்ப, நிதிநிலைமைக்கு ஏற்ப, அப்போதைக்கப்போது புதிய பேருந்துகள் வாங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், இப்போது விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு புதிய பேருந்துகள் வாங்கப்படுமா என்று கேட்டு இருக்கிறார். விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கும் Hi-Tech Bus என்று சொல்வார்களே, அதாவது Air-suspension உள்ள சொகுசு பேருந்து வாங்குவதற்கும் இப்போது அரசு முடிவு செய்து இருக்கிறது என்பதை அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கிராமங்களுக்கு சாலை வசதி இல்லாத நிலையில், இந்தப் பேருந்து போக்குவரத்து இல்லாத நிலை இருந்தது. இப்போது பல திட்டங்களிலே—பிரதம மந்திரி வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் அரசு சார்பிலே நடக்கின்ற பல்வேறு திட்டங்களிலே—அந்தக் கிராமங்களுக்கெல்லாம் சாலை வசதி தற்சமயம் செய்து கொடுக்கப்பட்டு இருக்கிறது. எனவே, 2, 3 கிலோமீட்டர் நடந்து வந்து பேருந்தைப் பிடிக்கின்ற பயணிகள் வசதிக்காக, அரசு புது பேருந்துகளை இயக்குகின்ற நிலை இருக்கிறதா? அதோடுகூட, திரு. மணி அவர்கள் குறிப்பிட்டதுபோல, சில வழித்தடங்களிலே சிறு மாற்றங்கள் செய்வதற்குக்கூட அரசிடம் வரும்போது, அரசு நல்ல எண்ணத்தோடும், நல்ல நோக்கத்தோடும் தவறுகள் நடக்கக்கூடாது என்கின்ற நிலையிலே அதைத் தடுத்து நிறுத்தி இருந்தாலும்கூட, மிக காலதாமதம் ஆகின்ற ஒரு சூழல் இருக்கின்ற காரணத்தினால், அதையும் இலகுபடுத்துவது போல, அந்தந்த மாவட்டத்திலே இருக்கின்ற M.D., அவர்கள், போக்குவரத்துக் கழகங்களின் மேலாண்மை இயக்குநர்களுக்கு அந்த அதிகாரத்தை வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, அதாவது நிர்வாக நடைமுறைகளுக்காக, சில நிர்வாகச் சீர்திருத்தங்களை ஏற்படுத்த





வேண்டும் என்பதற்காகவும், போக்குவரத்துக் கழகங்களில் வீண ஏற்படுகின்ற, விரயமாக ஏற்படுகின்ற நஷ்டத்தைத் தவிர்ப்பதற்காகவும் சில அதிகார மாற்றங்கள் செய்யப்பட்டு இருக்கின்றன. இருந்தாலும்கூட பொதுமக்களுக்குத் தேவை என்று கருதுகிற எந்த ஒரு கோரிக்கையையும் அரசு உரிய நேரத்திலே பரிசீலித்து, உடனுக்குடன் அதற்கு வேண்டிய ஆணைகள் வெளியிட்டு, வழித்தடம் நீட்டிப்பதற்கு உடனுக்குடன் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதேனும் கோரிக்கை இருப்பதாக கொடுப்பார்களேயானால்—அவர்களுடைய கோரிக்கையில், இன்னும்கூட காலதாமதம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள்; காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக; —யாராவது வழித் தடத்தில் நீட்டித்துக் கேட்பார்கள் என்று சொன்னால், அவர்கள் கேட்ட கோரிக்கை நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள்ளாக அதற்குரிய பதில் அவர்களுக்கு உரிய முறையில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பழைய பேருந்துகளை அகற்றி, புதிய பேருந்துகள் வாங்கி விடப்பட்டதாக சொன்னார்கள். மேலும் புதிய பஸ்கள் வாங்க வேண்டுமென்று சொன்னார்கள். 15 ஆண்டு காலம் வயது முதிர்ந்த பஸ்கள் எல்லாம் இன்னும் ஓடிக் கொண்டிருக்கின்றன. எத்தனை ஆண்டுகாலம் ஒரு பஸ் ஓட வேண்டுமென்று அரசிடத்திலே, போக்குவரத்துக் கழகத்திலே நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது? புதிதாக வாங்கப்பட்டிருக்கிற பஸ்கள் எல்லா மண்டல போக்குவரத்துக் கழகங்களுக்கும் பிரித்து அளிக்கப்படுகிறதா? சில மாவட்டங்களுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து அளிக்கப்படுகிறதா? அப்படியென்று சொன்னால், எங்களுடைய நாகை மாவட்டம், திருவாரூர் மாவட்டம், தஞ்சை மாவட்டம் போன்ற இடங்களிலே 15 ஆண்டு காலமாக ஓடிக்கொண்டிருக்கிற பேருந்துகள்தான் இன்றும் ஓடிக் கொண்டிருக்கின்றனவே தவிர எந்த மாறுதலையும் நான் காணவில்லை. ஆகவே, ஏற்கெனவே ஓடிக் கொண்டிருந்த புதிய பேருந்துகள்கூட இன்றையதினத்திலே மாற்றப்பட்டிருக்கின்றன. அதிலிருந்து மாறுதல் செய்வதற்கு அரசு, அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பேருந்துகள் ஆண்டுக்கு ஆண்டு தொடர்ந்து வாங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி, பழைய பேருந்துகளை மாற்றி அமைப்பதற்கு இன்னும் எவ்வளவு கூடுதலாக பேருந்துகள் வாங்க முடியுமோ அந்த அளவிற்கு வாங்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல அந்தக் கும்பகோணம் கோட்டத்திற்கும் புதிய பேருந்துகள் வாங்கும்போது தேவையான அளவிற்கு அவர்களுக்கு உரிய விகிதாச்சாரத்திலே வழங்கப்பட்டிருக்கிறது. மற்றொன்றையும் அவருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே புதிய பேருந்துகளை போக்குவரத்துக் கழகங்களுக்கு என்று ஒதுக்கும்போது, அதிலே எந்த மாறுபாடுகளையும் அல்லது விருப்பு வெறுப்புகளையும் அரசு காட்டுவது இல்லை. ஆனால் தமிழ்நாடு அரசு, நமது அரசு அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்களினுடைய நிதிநிலைக்கேற்ப, அவர்களுக்கு ஏற்கெனவே இருக்கிற கடன் சுமை, இருக்கிற நிதி ஆதாரம் அதற்கு ஏற்றாற்போல், அவர்களுக்குப் பேருந்து வசதிகள் அளிக்கப்படுகின்றன. ஆகவே, இதிலே விருப்பு வெறுப்புக்கு இடமே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல, கும்பகோணம் போக்குவரத்துக் கழகத்திற்கு கடன் சற்று அதிகமாக இருப்பதால் பஸ் எண்ணிக்கை, புதிய பேருந்துகள் எண்ணிக்கை சற்று குறைந்திருக்கும். ஏற்கெனவே இருக்கிற நிதி ஆதாரத்திற்குத் தகுந்தாற்போலத்தான் இப்போது புதிய பேருந்துகள் ஒதுக்கப்படுகின்றன என்பதை அவருக்கு அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு வழித்தடங்களில் இயக்கப்பட்ட பேருந்துகள், சாலைகள் சரியாக இல்லை என்கிற காரணத்தையும், அதேபோன்று வருவாய் குறைவாக இருக்கிறது என்கின்ற காரணத்தையும் சொல்லி அந்தப் பேருந்துகள் எல்லாம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. சாலைகள் எல்லாம் புதிதாக போடப்பட்டும்கூட, அந்தப் பேருந்துகள் இன்னும்





அந்த வழித்தடங்களிலே இயக்கப்படாமல் இருக்கின்றன. அவற்றையெல்லாம் மீண்டும் இயக்குவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் நான் சொல்கிற பதிலை குற்றச்சாட்டாக எடுத்துக்கொள்ளக் கூடாது; அது குறித்து உண்மையான நிலவரத்தை, செய்தியைச் சொன்னதாகக் கருதிக்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இப்போது ஓடிக்கொண்டிருந்த பேருந்துகள் சில இடங்களிலே நிறுத்தப்பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அது உண்மைதான். உங்களுடைய ஆட்சிக் காலத்திலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேருந்துகள் நிறுத்தப்பட்டிருந்தன. இப்போது மாண்புமிகு அம்மா அவர்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பின்பு, பேருந்துகள் நிறுத்தப்பட்டதற்கு காரணம் என்னென்ன என்று கண்டுபிடித்து, அதிலே பாலம் இல்லை என்றால், பாலம் கட்டுகின்ற பணி, சாலை சரியில்லை என்று சொன்னால் சாலை போடுகின்ற பணி எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக இப்போது செய்துகொண்டு, சாலை வசதி செய்யப்பட்டிருக்கிற கிராமங்களுக்கு மீண்டும் அந்தப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. என்னென்ன காரணங்களுக்காக நிறுத்தப்பட்டதோ, அந்தக் காரணங்களையும் கண்டறிந்து, அதிலே இருக்கிற இடையூறுகளை எல்லாம் களைந்து, இப்போது படிப்படியாக, உங்களுடைய ஆட்சிக் காலத்திலே, அந்த ஆட்சிக் காலத்திலே நிறுத்தப்பட்ட பேருந்துகளை படிப்படியாக இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி இயக்கி வருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, புதிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளை அணுகிக் கேட்கும்போது அனைத்திற்குமே மேல் இடத்திலிருந்து எங்களுக்குத் தகவல் வரவேண்டுமென்று சொல்கிறார்கள். சிறிய சிறிய மாற்றங்களைச் செய்வதற்கும், இதுபோன்று வசதியான நல்ல சாலைகள் இருக்கக்கூடிய இடத்தில்கூட பேருந்துகளை இயக்க முடியாத நிலை தமிழகத்திலே

இருக்கிறது. இது அரசுக்குத் தெரியுமா? அவ்வாறு இருந்தால், அதைச் சரி செய்வதற்கு புதிதாக ஆணைகள் பிறப்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு சொன்னதுபோல, தேவையான இடங்களுக்கு, தேவையான கிராமங்களுக்கு புதிதாக சாலை அமைக்கப்பட்டதற்குப் பின்பு, தேவை ஏற்பட்டால் அவர்களுக்கு, உடனுக்குடன் அரசு ஆய்வு செய்து, தேவை என்று கருதினால், விதிமுறைகளுக்குட்பட்டு, 30 கிலோ மீட்டருக்கு மிகாமல் இருந்தால் உடனடியாக நீட்டிப்பு வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏதேனும் கோரிக்கை இருக்குமானால் அதைக் கொடுத்தால், ஆய்வு செய்து, தேவை என்று அரசு கருதினால், உடனடியாக அந்த வழித் தடங்களில் பேருந்தை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ராம்குமார்.

*முற்பகல் 10-20*

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பல்வேறு கேள்விகளுக்கு பதில் அளிக்கின்றபோது சொன்னார்கள். அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த பஸ்கள் கிட்டத்தட்ட 900-க்கும் மேல் அந்த பஸ்கள் இருக்கின்றன. 95 சதவிகிதத்திற்கும் அதிகமான விரைவுப் போக்குவரத்தைச் சார்ந்த அந்தப் பேருந்துகள் அவற்றின் காலத்தைத் தாண்டி அதிக நாட்கள் ஓடிவிட்ட காரணத்தினால் அவற்றையாவது போர்க்கால அடிப்படையில் மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களில் மிகவும் கடுமையான நிதி நெருக்கடிக்கு உள்ளாகி இருப்பது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம். இருக்கின்ற போக்குவரத்துக் கழகங்களில் இக்கழகம் மோசமான நிலையில் இருந்த காரணத்தினால் புதிய பேருந்துகளை அதிக



எண்ணிக்கையில் அதற்கு வாங்கமுடியாத சூழ்நிலை இருந்தது. இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்பு அந்த நிதிநிலைமையை சீரமைப்பதற்கான பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டதன் விளைவாக இப்போது ஓரளவு நிதிநிலைமை சீர் செய்யப்பட்டு இருக்கிறதே தவிர, முழுமையாக இன்னும் நிதிநிலைமை சீர் செய்யப்படவில்லை. இருந்தபோதிலும்கூட பல்வேறு மாற்று ஏற்பாடுகளைச் செய்து, நிதி ஆதாரங்களைப் பெற்று, இன்றைக்கு அரசு விரைவுப் போக்குவரத்திற்கும் தேவையான அளவுக்கு புதிய பேருந்துகள் வாங்குவதற்காக அரசு திட்டம் தீட்டியுள்ளது என்பதையும், நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 43, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**43—**

### புவி தொழில்நுட்ப ஆய்வு

**•28805—திரு. கா. கந்தசாமி:**

*மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நீலகிரி மாவட்டத்தில் நிலச்சரிவைக் கண்டறிய புவி தொழில்நுட்ப ஆய்வு மேற்கொள்ளப்படுகிறதா?*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நீலகிரி மாவட்டத்தில் நிலச் சரிவைக் கண்டறிய புவி இயல் துறையைச் சார்ந்த புவி தொழில்நுட்ப மையம் மூலம் புவி தொழில் நுட்ப ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் அடிக்கடி நிலச்சரிவு ஏற்படுகின்றது. இப்படி ஏற்படுகின்ற நிலச்சரிவு போக்குவரத்தை பாதிக்கின்றது. ஊட்டிக்குச்

செல்கின்ற சுற்றுலாப் பயணிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, நிலச்சரிவு ஏற்படுகின்ற பகுதிகளை அரசு நடத்தி இருக்கிற ஆய்வின் அடிப்படையில் முன்கூட்டியேக் கண்டறிந்து, அந்த நிலச்சரிவைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் நிலச்சரிவு ஏற்படுகின்ற பகுதிகளில் புவியியல் துறையைச் சார்ந்த அதிகாரிகள் ஏற்கெனவே ஆய்வு நடத்தி வந்துகொண்டு இருக்கின்றனர். தொடர்ந்து ஆய்வு நடைபெற்று வருகிறது. இந்த ஆய்வின் அடிப்படையில் எந்தெந்த இடங்களில், எந்தெந்தப் பகுதிகளில் நிலச்சரிவு ஏற்படுகின்றதோ அந்தந்த இடங்களில் எல்லாம் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்படுவது இல்லை. மேலும் எந்த இடங்களில் நிலச்சரிவு ஏற்படுமோ, அந்த இடங்களை முன்கூட்டியே ஆய்ந்து, அந்தந்தப் பகுதி மக்களுக்குத் தெரிவிக்கின்ற வகையில், துறையைச் சார்ந்த அதிகாரிகள் ஈடுபட்டு வருகிறார்கள். தொடர்ந்து அதற்கான முயற்சிகள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் எத்தனை இடங்களில் ஆய்வு செய்யப்பட்டு உள்ளது? அந்த ஆய்வு செய்யப்பட்ட இடங்களைப் பற்றி பொதுமக்களுக்குத் தெரிவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2000-2001* ஆம் ஆண்டு *152* இடங்களிலும், *2001-2002* ஆம் ஆண்டு *298* இடங்களிலும், *2002-2003* ஆம் ஆண்டு *446* இடங்களிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அந்தந்த இடங்களில் கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டு, பிறகு அந்தப் பகுதிகளில் ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் அடிக்கடி நிலச்சரிவு ஏற்படுவதை நாம் எல்லாம் அறிவோம். சில ஆண்டுகளுக்கு முன்பாக குந்தா தாலுகா, கீழ்குந்தா





பேரூராட்சிக்குட்பட்ட கெத்தை என்ற இடத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் உயிர் இழந்தார்கள். டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி, மார்ச் போன்ற மாதங்களில், வெள்ளம் வராத சமயத்தில், மழை இல்லாத சமயத்தில், புவியியல் தொழில்நுட்ப ஆய்வாளர்கள் எல்லாம் சென்று எந்தெந்த இடங்களில் வெள்ளம் வருகிறதோ, அந்த இடங்களிலே தடுப்புச் சுவர்கள் கட்டி, பெரும் வெள்ளமாக வருவதைப் பிரித்துக்கொடுக்க வேண்டும். மாண்புமிகு தலைவர் அவர்களுக்குச் சொல்கிறேன். அவ்வாறு பிரித்துக் கொடுத்தால், *4, 5* இடங்களாக தண்ணீர் வரும்போது பெரும் வெள்ளத்தைத் தவிர்க்கலாம். அந்த முறையைக் கடைபிடித்தால் உயிர்ச்சேதம் கண்டிப்பாக ஏற்படாது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபற்றி விளக்கமாகச் சொன்னாலும்கூட, இத்துறை அதிகாரிகளுக்கு ஒரே வழியாக வரும் அம்மாதிரி வெள்ளத்தைப் பிரித்துக் கொடுத்தால், சிறு சிறு வெள்ளப் பகுதியாக பிரிந்து வரும்போது உயிர்களுக்கு எந்தவிதமான கெடுதியும் வராது என்பதைத் தெரிவிக்கிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து ஆய்வுத் துறையினருக்கு அறிவுரை தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Soil Conservation Department மூலமாக அந்தப் பகுதிகளில் இப்போது தடுப்புச் சுவர் கட்டப்பட்டு வருகிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கையை ஏற்று அவ்வாறே செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உங்கள் பகுதியில் மலையே இல்லையே, எங்கே நிலச்சரிவு வரப்போகிறது?

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைச் சரிவைக் கண்டுபிடிப்பதற்கான வகையிலே புவியியல் துறையின் மூலமாக ஆய்வுகள் நிரம்ப இடத்தில் மேற்கொள்ளப் பட்டதாக அமைச்சர் அவர்கள் தெரிவிக்கின்றார்கள். அப்படி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதோடு, நில நடுக்கம் ஏற்படுத்துவதற்குரிய அறிகுறிகள் இருப்பதாக சில சந்தர்ப்பங்களிலே சொல்லப்பட்டதே! அப்படிப்பட்ட வாய்ப்புகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறதா? அதை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நில நடுக்கத்திற்குத் தனிக் கேள்விப் போடுங்கள்.

வினா எண் *44*, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**44—**

**வணிக வரி வசூல்**

**•10055—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வணிக வரி செலுத்துவோரிடமிருந்து பெறப்பட வேண்டிய வரியை வசூலிக்க அரசிடம் சிறப்புத் திட்டம் ஏதேனும் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* ஆம்.

*(ஆ)* வங்கிக் கணக்கிலிருக்கும் வணிகரின் தொகையை பற்றுகை செய்தல், கொள்முதல் செய்தவர்களுக்கு தாக்கீது அனுப்பி அவர் செலுத்த வேண்டிய தொகையினை அரசுக் கணக்கில் செலுத்தக் கோருதல், வருவாய் மீட்பு சட்டத்தின்கீழ் நடவடிக்கை மற்றும் மத்திய வருவாய் மீட்பு சட்டத்தின்படி மற்ற மாநில வட்டாட்சியருடன் தொடர்புகொண்டு வரி நிலுவைகளை வசூலிக்க நடவடிக்கை எடுக்கக் கோருதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், நிலுவையாக இருந்த வரிவசூல் தொகையை வசூலிக்க சமாதானத் திட்டம், விற்பனை வரித் தீர்வாணையம் (Settlement Commission), சிறப்புக் குழு போன்றவை மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சமாதானத் திட்டத்தின் மூலமாக சுமார் ரூ.*10.34* கோடி வசூல் செய்யப்பட்டது என்று அறிகிறேன். இந்த





சமாதானத் திட்டத்தில் அபராதம் penalty வசூலிக்கப்படுகின்றது. ஆகவே, இந்த சமாதானத் திட்டத்தில் அபராதத்தை வசூலிக்காமல் அந்தத் திட்டத்தை அறிவித்தால் இன்னும் அதிகமான மக்கள் பயன் பெறுவார்கள். இன்னும் அதிகமான வருவாயும் அரசுக்குக் கிடைக்கும் என்பதால் இந்த சமாதானத் திட்டத்தில் penalty இல்லாமல் வசூலிக்க அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலுவையாக இருந்த வரி வசூல் தொகையை வசூலிக்க சமாதானத் திட்டம் *1-7-2002* முதல் மூன்று மாதங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு, *31-10-2002* வரை நீட்டிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் நிலுவையாக இருந்த வரித் தொகையில் ரூ. *10.34* கோடி வசூல் செய்யப்பட்டது. மேலும் சமாதானத் திட்டத்தைக் கொண்டுவரக்கூடிய நிலையில் மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரி நிலுவையைக் குறைக்க வரித் தீர்வாணையம் Settlement Commission அமைக்க உத்தரவிட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த Settlement Commission ஒரு சில வழக்குகளை மட்டும் எடுத்து முடிவு செய்கிறது. அதாவது, விதி *31*-ன்கீழ் இந்த Settlement Commission ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒருசில வழக்குகள்தான் எடுக்கப்படுகின்றன. ஆகவே, அந்த Settlement Commission அமைக்கும்போது எல்லா வகையான வழக்குகளையும், அது ஏற்று, அதை முடிவு செய்வதற்கு சட்டத் திருத்தங்கள், உரிய திருத்தங்கள் Section *39*-ல் கொண்டு வருவதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதையும், கடந்த கால ஆட்சியில் வசூலிக்கப்பட்ட வரித் தொகை எவ்வளவு என்பதையும், தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் வசூலிக்கப்பட்ட வரித் தொகை எவ்வளவு என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Settlement Commission-ஐப் பொறுத்தவரையில் முதன்முறையாக மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித்

தலைவியினுடைய ஆட்சியில்தான் கொண்டுவரப்பட்டது. மேலும் கடந்த கால ஆட்சியில் வரி வசூல் 1999-2000 இல் ரூ. 7350.66 கோடி. 2001-2002 இல் ரூ.8663.72 கோடி. மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய ஆலோசனையின்படியும், அவர்களுடைய வழிக்காட்டுதலின்படியும் வணிக வரித் துறையில் எடுக்கப்பட்ட வரி ஏய்ப்பு குறித்த அதனுடைய வரி வசூலில் சிறப்பாகக் கவனம் செலுத்தியதன் விளைவாக, என்றும் இல்லாத அளவுக்கு கடந்த ஆண்டு ரூ. 10,199.88 கோடி வணிக வரி வசூலிக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உற்பத்தி செய்கிற பொருட்களை எல்லாம் வெளிமாநிலங்களுக்கு விற்பனை செய்கிறபோது வணிக வரி வசூலிக்கப்படுகிறது. ஆனால், பெரிய வியாபாரிகள் எல்லாம் தங்களது பொருட்களை வெளி மாநிலங்களுக்கு விற்பனை செய்கிறபோது Depot Transfer என்கிற முறையைக் கையாளுவதால் அவர்களிடத்திலே வரி வசூல் செய்யப்படுவதில்லை. இதனால் சிறு வியாபாரிகள் எல்லாம் நசுக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, Depot Transfer செய்யப்படுகின்ற பொருட்களுக்கு ஏதாவது குறைந்த அளவு வரி விதிக்கின்றபோது அனைத்து சிறு தொழில் அதிபர்களும் பாதுகாக்கப்படுவார்கள் என்கின்ற காரணத்தினால் Depot Transfer முறைக்கும் வணிக வரி வசூல் செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்விப் போடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருமான வரி, வணிக வரி மற்றும் விற்பனை வரி ஆகியவற்றில் சென்ற ஆண்டில் 8,600 கோடி ரூபாய்க்கு மேல் வசூலிக்க வேண்டிய பழைய பாக்கி இருந்ததாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். சென்ற கூட்டத்திலும் சொல்லப்பட்டது. இந்த



ஆண்டில் 10 ஆயிரத்து சில்லரை கோடி ரூபாய் மொத்தமாக வசூலிக்கப்பட்டது என்று சொன்னால் அது நடப்பாண்டு வரியும் சேர்த்து. பழைய நிலுவையிலுள்ள வரியில் வசூலிக்கப்பட்ட தொகையின் விவரம் சொல்ல முடியுமா? சொல்ல வேண்டுமென்பது ஒன்று. அவ்வாறு வரி செலுத்தாதவர்களிடமிருந்து Revenue Recovery Act மூலம் வசூல் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்ட தீர்ப்புகளின் அடிப்படையில் அந்தச் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலுவை என்பது கடந்த 1991-96-லே மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி இருந்தபோது 2,184 கோடி ரூபாய் மட்டும்தான் இருந்தது. 1996-2001-லே ஆட்சி செய்த, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் வரியினுடைய நிலுவை 7,244 கோடி ரூபாய். இதிலே நிலுவை மட்டும் 5,060 கோடி ரூபாய். இது Best of Judgement-ன் அடிப்படையில் அவசரமாக எடுக்கப்பட்ட நடவடிக்கையில் நிருவாகத் திறன் இல்லாததால் 5 ஆயிரம் கோடி ரூபாய் நிலுவை ஏற்பட்டது. மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னர், அவர்களுடைய சீரிய வழிகாட்டுதலின்பேரிலும், அவர்களால் வணிக வரித் துறையிலே ஏற்படுத்தப்பட்ட நடவடிக்கையின் பேரிலும் இன்றையதினம் ‘சமாதானத் திட்டம், விற்பனை வரி தீர்ப்பாயம்’ —மேலும் மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல Revenue Recovery Act என்று கடந்த பட்ஜெட் கூட்டத்தில் கொண்டு வந்ததன் மூலம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதன் மூலம் நடவடிக்கை எடுத்ததற்குப் பின்னர் இன்று நிகர நிலுவையாக 5,790.81 கோடி ரூபாய் இருக்கிறது. இதிலே நிலுவை என்று பார்ப்போமானால், பலதரப்பட்ட நீதிமன்றங்களின் நிலுவைகள் 2524.54 கோடி ரூபாயும், வரி விதிப்புச் சட்டங்களின் நிலுவை 2520.78 கோடி ரூபாயும், இதர நடவடிக்கையின் நிலுவை 745.49 கோடி ரூபாய் அளவில் இன்று 5790.81 கோடி ரூபாய் மட்டும் நிலுவையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் ஒரு மகிழ்ச்சியான செய்தியை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர்

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய வழிகாட்டுதலின்பேரிலும், இன்று வணிக வரித் துறையிலே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்ததன் விளைவாகவும், மக்களை அதிகமாக பாதிக்காத வகையில் வரியே போடாமல் வரி ஏய்ப்பைத் தடுத்ததன் மூலமாகவும், நிலுவையாக இருக்கின்ற வரியை வசூல் செய்ததன் மூலமாகவும், வணிக வரித் துறை எடுத்த செயலாக்கத்தால், வணிக வரித் துறை தோன்றிய காலத்திலிருந்து இதுவரை வரலாற்றில் இல்லாத அளவிற்கு கடந்த மாதம் மட்டும் மகத்தான வரி வசூலாக 1005.82 கோடி ரூபாய் வணிக வரி வசூல் செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பெருமையோடு அவைக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறை வசூலைப் பொறுத்தமட்டில் முறையாகவும், சீராகவும் வசூல் செய்வதற்கும், அதிகப்படியாக, முறையோடு வசூல் செய்வதற்கும் மதிப்பீட்டுக் குழு சில பரிந்துரைகளை செய்ததாக அறிகின்றேன். அதன்மீது அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அலுவலர்களிடம் விசாரணை செய்ய வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். தாமோதரன்.

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விற்பனை வரி நிலுவை என்பது அநேகமாக disputed tax சம்பந்தப்பட்டதாகவே 100-க்கு 98 சதவிகிதம் இருக்கிறது. இதனால் பொதுமக்களிடையே வியாபாரிகளும், தொழிலதிபர்களும் அரசாங்கத்தை ஏமாற்றுவதாகவும், அவர்கள்தான் இதற்குக் காரணம் என்று ஒரு அவச்சொல் இருக்கிறது. அந்த அவச்சொல்லை நீக்குவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன். நமது பட்ஜெட்டிலே 46 சதவிகிதம் கட்டும் வணிகர்களுக்கும், தொழிலதிபர்களுக்கும் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம்



புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையில், எந்தத் தொழிலையும், வணிகத்தையும் பாதிக்காத அளவிற்குத்தான் வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அதிலே விதிக்கப்பட்ட வரிகளை நிலுவையில் இருக்கின்ற வரிகளைச் செலுத்தாமல், வரி வசூலை ஏய்ப்பதைத் தடுத்து, அதை முறைப்படுத்துவதன் மூலமாக அரசுக்கு வணிக வரித் துறையின் மூலமாக வருமானத்தைப் பெருக்குகின்ற நோக்கம் மட்டும்தான் இருக்கிறது. கடந்த பட்ஜெட்டிலேயும்கூட பார்ப்போமானால் அதிகமாக எந்த வரியையுமே இந்த ஆண்டில் விதிக்கவில்லை என்பதையும் நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த வகையிலே வணிகர்கள், தொழில் அதிபர்களின் தொழில்களை பாதுகாக்கின்ற வகையிலேயும், அதேபோன்று வாழ்க்கைக்கோட்டின் கீழே இருக்கின்ற ஏழை மக்கள், அடித்தள மக்களுடைய வாழ்வுக்காகவும் இந்த வணிக வரியினுடைய வசூல் அவசியம் என்கிற வகையிலேயும், யாரையும் பாதிக்காத அளவிற்குத்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இந்த வணிக வரித் துறை பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம்

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணிக வரி வசூல் செய்வதில் பல சிறப்புத் திட்டங்களையெல்லாம் அறிவித்து, அதன் மூலமாக பல கோடி ரூபாய் அதிகப்படியாக வரி வசூலாகி இருப்பதாக அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துக் கூறினார்கள். அவற்றிலே ஒன்றுதான் சேலம் மாவட்டத்திலே இயங்கி வருகின்ற சேகோ-சர்வ் என்ற நிறுவனம். இரண்டரை சதவீதம் Additional Sales Tax என்ற அந்தக் கூடுதல் விற்பனை வரியை மாண்புமிகு அம்மா அவர்கள் சென்ற பட்ஜெட்டிலே நீக்கியதன் விளைவாக இன்றைக்கு பல இலட்சம் ரூபாய் வியாபாரம் அதிகமாக நடைபெற்று, வணிக வரி மிகச் சிறப்பாக வசூல் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் நடப்பு காலத்தில், கடந்த ஒரு சில மாதங்களிலே அங்கே அந்த சேகோசர்வ்-க்கு அதிகப்படியாக சரக்குகள் வராமல், வெளியிலே விற்பனை செய்து வரி ஏய்ப்பு அதிகமாக செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இதை மனதிலே வைத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சேகோசர்வ்-க்கு வருகின்ற மூட்டைகளை அதிகப்படுத்தி,

வெளியிலே விற்கின்ற சரக்குகளுக்கு, வரி ஏய்ப்பவர்களைக் கண்டுபிடிப்பதற்கு கடுமையான நடவடிக்கைகளை எடுப்பார்களா என அறிய விரும்புகின்றேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்திற்கிணங்க அன்றைய தினம் சேகோ-சர்வ் நிறுவனத்தினுடைய வரி ஏய்ப்பைத் தடுக்கின்ற வகையில் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கூறியிருக்கின்றேன். அவைக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 45, திரு. எம். சுப்பையா பாண்டியன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**45—**

**தனிப் பஞ்சாயத்து அமைத்தல்**

**•4853—திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் தொகுதியிலுள்ள போகநல்லூர் கிராமத்தை தனிப் பஞ்சாயத்தாக அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள போகநல்லூர் கிராமத்தை தனிப் பஞ்சாயத்தாக்க அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தொகுதி போகநல்லூர் பஞ்சாயத்து, போகநல்லூர், சுந்தரேஸ்வபுரம், சிதம்பரப்பேரி, செண்பகநல்லூர், மீனாட்சிபுரம், ஒத்தவேடு என்கிற இராமேஸ்வரம், சங்கணாப்பேரி ஆகிய கிராமங்களை உள்ளடக்கியது. இந்தப் பஞ்சாயத்திலே 4,000



வாக்குகள் உள்ளன. மொத்தம் ஜனத்தொகை 7,000 உள்ளது. அதுமட்டுமல்லாமல் குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம்—எனது சொந்த பஞ்சாயத்தான சாயமலை பஞ்சாயத்தில் சாயமலை,வலசை, சிதம்பராவரம், சாயமலை பச்சேரி, கொக்குவலம், உங்கமடையார் கோவில்பட்டி, ஆராய்ச்சிபட்டி, ஆவரந்தை, மேலச் சியாமியாபுரம், கீழச் சியாமியாபுரம், திருமலாபுரம், இராமலிங்கம்பட்டி, ஒத்தவேடு ஆகிய 13 கிராமங்களை உள்ளடக்கியது. அந்தப் பஞ்சாயத்திலே 7,000 வாக்குகளும் உள்ளன. இன்னும் வாக்குகள் சேர்க்காமல் Population கிட்டத்தட்ட 12,000 ஜனத்தொகை இருக்கிறார்கள். இதை ஏன் கூறுகிறேன் என்றால், இதை இரண்டாகப் பிரித்தால் அங்குள்ள அந்தப் பஞ்சாயத்துக்கு ஒரு தன்னிறைவு கிடைக்கிற வகையில் நிதி ஆதாரத்தைப் பெற்று, அந்தக் கிராமத்திற்கு அடிப்படை வசதிகள் நல்ல முறையில் செய்து கொடுக்க ஏதுவாக இருக்கும் என்பதற்காகத்தான். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது திட்டம் இல்லையென்று கூறினார்கள். மத்திய அரசு ஒரு தொகுதி வரையறுக்கப்பட தடையாணை வழங்கியுள்ளதாகவும் அறிகிறேன். ஆனால், அந்தத் தடை நீங்கியதற்கு பிறகு இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தொகுதியிலுள்ள போகநல்லூர் கிராமத்தைத் தனிப் பஞ்சாயத்தாக ஆக்குவது குறித்த கருத்துரு ஏதும் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வரப்பெறவில்லை. ஊராட்சிகளைப் பிரிப்பதாக இருந்தால் ஏற்கெனவே உள்ள ஊராட்சி மற்றும் பிரிக்கப்பட்ட ஊராட்சி ஆகியவற்றின் வார்டுகளின் எல்லைகள், உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் இட ஒதுக்கீடுகள் ஆகியவற்றில் மாற்றம் ஏற்படும். சட்டமன்றம் மற்றும் பாராளுமன்றத் தொகுதி சீரமைப்பு ஆணையத்தின் அறிவிப்பின்படி 01-08-2002 முதல் சீரமைப்புப் பணி முடியும் வரையில் ஊராட்சி அமைப்புகளின் எல்லைகளைச் சேர்க்கவோ, பிரிக்கவோ அல்லது மாற்றவோ செய்யக்கூடாது என்ற ஆணையுள்ளதால், கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கைகள் இரண்டையும் பரிசீலிக்க வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

53-333—4a

[2003 நவம்பர் 5

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழக அரசு வருவாய் குறைவாக இருக்கிற நகரப் பஞ்சாயத்துகளை எல்லாம் கிராமப் பஞ்சாயத்துகளாக மாற்றுவது குறித்து யோசித்துக் கொண்டிருப்பதாக இந்த அவையிலே சொல்லப்பட்டது. அந்த நடவடிக்கை இப்போது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், இது மூலக்கேள்விக்குத் தொடர்பற்றது.

*வினா எண் 46, திரு. கே.எஸ். பழனிசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

**46—**

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***27375—திரு. கே.எஸ். பழனிசாமி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, ஊத்துக்குளி ஒன்றியம், 47 வழியோர கிராமக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இத்திட்டத்தை அரசு விரைந்து செயல்படுத்துமா?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, ஊத்துக்குளி ஒன்றியத்தைச் சார்ந்த 47 வழியோரக் கிராமங்களுக்கு, புதிய திருப்பூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்கப்படும். இத்திட்டப் பணிகள் வெகுவிரைவில், 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.



2003 நவம்பர் 5]

**திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் போற்றும் உன்னதத் திட்டமான மழைநீர் சேகரிப்பு திட்டத்தைக் கொண்டுவந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கரத்தால் தொடங்கப்பட்ட புதிய திருப்பூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினால் பெருந்துறை மற்றும் ஊத்துக்குளி ஒன்றியங்களைச் சேர்ந்த வழியோர கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் 2005 ஏப்ரல் திங்களுக்குள் பயனுக்கு வர போர்க்கால அடிப்படையில் இன்று அந்தப் பணிகள் நடைபெற அனுமதி வழங்கிய, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு எனது பெருந்துறை தொகுதி மக்களின் சார்பில் நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. சி. மணி (குறுக்கீடு) மைக்கைப் போடுங்கள்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எந்த ஆண்டில், எந்தத் தேதியில் தொடங்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைப் பணியிடத்தில் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீரேற்றுக் குழாய்கள் அமைக்கும் பணிகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் இறுதியாக, அனைத்துப் பணிகளும் முழுமையாக, 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முடிவுறும் என்பதை நான் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன். (குறுக்கீடு)

**திரு. கோ.சி. மணி:** நான் கேட்டது, அந்தப் பணி தொடங்கப்பட்டது எப்போது என்பதை அமைச்சர் அறிவிப்பாரா என்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிக் கேள்விப் போடுங்கள். திரு. சாமிநாதன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் இதற்குத் தனிக் கேள்விப் போட்டால் பதில் தெரிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்தில் ஊத்துக்குளி, பெருந்துறை போன்ற பகுதிகளுக்கு தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே, பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்தை மேற்கொள்கிற வகையிலே, நிலத்தடி நீரை மேம்பாடு செய்கிற வகையிலே அந்தத் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அந்தத் திட்டம்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. சி. மணி அவர்களே, தாங்களே அமைச்சராக இருந்தபோது, பல கேள்விகளுக்குத் தனிக் கேள்விப் போடச் சொல்லி இருக்கிறீர்கள். அதேமுறையைத்தான் இப்போது அமைச்சரும் பின்பற்றுகிறார்.

**திரு. கோ.சி. மணி:** எல்லாவற்றிற்கும் தனிக் கேள்வி போடச் சொல்லமுடியாது. தொடர்புடைய கேள்விக்கு எப்படித் தனிக் கேள்வி போடச் சொல்ல முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமிநாதன், சொல்லுங்கள்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பெருந்துறை, ஊத்துக்குளி போன்ற பகுதிகளில் குடிநீரை மேம்பாடு செய்கிற வகையிலும், நிலத்தடி நீரைப் பெருக்குகிற வகையிலும் கழக ஆட்சியிலே பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தை மேற்கொள்கிற வகையிலே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இப்போது அந்தப் பணி எந்த அளவில் உள்ளது என்பதைத் தங்களின் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமிநாதன், இது மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது. திருமதி செல்வி முருகேசன்.

**திருமதி செல்வி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, பெருந்துறை தாலுகாவைச் சார்ந்த சென்னிமலை ஒன்றியத்திற்கும் இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினால் பயன் இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரளை என்ற இடத்தில் பெருந்துறை ஒன்றியத்தைச் சார்ந்த 30 குடியிருப்புகள் மற்றும் சென்னிமலை ஒன்றியத்தைச் சார்ந்த 71 குடியிருப்புகளில் வசிக்கும் 22,636 மக்கள் பயன்பெறுகிற வகையில்





இந்தத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 47, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**47—**

## தரைப் பாலம்

***37287—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை வனத் துறை பகுதியில் சின்னாறும், பாம்பாறும் இணையும் கூட்டாறு என்னும் இடத்தில் மலைவாழ் மக்கள் பயன்படுத்த தரைமட்டப் பாலம் கட்ட வனத் துறை உரிய ஒப்புதல் வழங்குமா?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உடுமலைப்பேட்டை வனத் துறை பகுதியில் சின்னாறும், பாம்பாறும் இணையும் கூட்டாறு பகுதி வன உயிரின சரணாலயத்திற்கு உட்பட்ட பகுதியாகும். உச்ச நீதிமன்ற வழக்கு எண் 202/95 மற்றும் 337/95 ஆகிய வழக்குகளில் வழங்கப்பட்ட இடைக்காலத் தீர்ப்புகளின்படி, வன உயிரின உய்விடம் மற்றும் தேசிய பூங்கா ஆகியவற்றை வனமல்லாத மாற்று பணிகளுக்குப் பயன்படுத்துவது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. எனவே, மேலே குறிப்பிடப்பட்ட பாலம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

*முற்பகல் 10-45*

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கிணங்க உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட உடுமலைப்பேட்டை—சின்னாறு சாலையில் கிலோ மீட்டர் 28/2-லிருந்து சுமார் 7.5 கிலோமீட்டர் தூரத்தில் தளிஞ்சி என்ற மலைவாழ் கிராமம் உள்ளது. இந்தக் கிராமத்தில் 130 குடும்பங்கள்

உள்ளன. இவர்கள் 900 ஏக்கர் நிலப்பரப்பில் நல்ல விவசாயம் செய்து வருகிறார்கள். இந்த நிலப்பரப்பிற்கு அடுத்தாற்போல் மஞ்சப்பட்டி கிராமம் உள்ளது. இந்தக் கிராமம் திண்டுக்கல் மாவட்டம் பெரியகுளம் சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்ததாகும். இந்தக் கிராமத்தில் 120 குடும்பங்கள் உள்ளன. இவர்கள் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்து வருகிறார்கள். இந்த இரண்டு மலைவாழ் கிராமங்களுக்கும் விவசாய இடுபொருட்களையும், விவசாய விளைபொருட்களையும் மற்றும் தங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும் தலைச் சுமையாகத்தான் கொண்டு செல்கிறார்கள். மேலும், இந்தப் பாதையில் கிலோ மீட்டர் 2/6 சின்னாறும், பாம்பாறும் இணையும் இடமாக உள்ளது. இதைக் கூட்டாறு என்று அழைக்கிறார்கள். இந்த இடத்தைக் கடந்துதான் கிராம மக்கள் செல்ல வேண்டியுள்ளது. மழைக் காலங்களில் இந்த ஆற்றைக் கடந்து செல்ல முடியாத நிலை உள்ளது. எனவே, இந்த இடத்தில் தரைமட்டப் பாலம் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களது அரசு, வனத் துறை ஒப்புதல் பெற்றுத் தர முன்வருமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோர்ட்டிலே இருப்பதாகக் கூறினார்கள், இருந்தாலும், அதைப் பரிசீலித்து, அந்த மலைவாழ் மக்களுடைய நிலையைக் கருத்திலே எடுத்து, அந்தப் பாலம் கட்டுவதற்கு நம்முடைய அரசு ஒப்புதல் வழங்குவதற்கு முன்வருமா என்பதை மாண்புமிகு அமைச்சரிடம் தங்கள் மூலமாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதி வன உயிரின சரணாலயப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. சரணாலய பகுதி அல்லது தேசியப் பூங்கா என அறிவிக்கப்பட்ட வனப் பகுதியில் வனமற்ற பிற பணிகளுக்கு வன நிலத்தை வழங்க வேண்டி எந்தவிதமான பிரேரணைகளும் மைய அரசின் அனுமதி கோரி, உச்சநீதிமன்ற முன் அனுமதியின்றி அனுப்பி வைக்க வேண்டாம் என மைய அரசு தன் 4-5-2001 நாளிட்ட கடிதத்தில் மாநில அரசுகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளது. எனவே, தரைப்பாலம் கட்டுவது அவசியம் எனக் கருதப்பட்டால் உச்சநீதிமன்ற ஆணை பெறப்பட்ட பின்னரே மைய அரசின் ஒப்புதலுடன் தரைப்பாலம் கட்ட இயலும் என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியானது மலைவாழ் மக்கள் அதிகமாக இருக்கக்கூடிய பகுதி. அங்கு மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைத்து, மிக விழிப்போடு அந்தப் பெண்கள் ஈடுபட்டுள்ளார்கள். அவர்கள் அடிக்கொரு முறை அந்த நகரத்திற்கு வந்து செல்ல வேண்டியுள்ளது. அங்கு வனத் துறை அதிகாரிகள் செல்வதற்கு ஏற்கெனவே வனத் துறை மூலமாக பாதை உள்ளது. கருணை அடிப்படையிலே நம்முடைய அரசு உரிய நடவடிக்கை எடுத்து அந்த ஒப்புதல் பெற்றுத்தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் தங்கள் மூலமாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய முன் அனுமதி பெற வேண்டும். அதன்மூலமாக மைய அரசுக்கு நாம் பரிந்துரை செய்தால், மைய அரசினுடைய அனுமதியுடன் இந்தப் பாலம் கட்டித்தர, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 48, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

**48—**

### கான்கிரீட் வீடுகள்

**•14989—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள ஏழை மக்கள் தங்களது குடிசைகளை மாற்றி தீப்பிடிக்காத பாதுகாப்பான கான்கிரீட் வீடு கட்டிக்கொள்ள ரூ.10,000/- மானியத்துடன் ரூ.20,000/- கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 நவம்பர் 5

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ) தற்போது இல்லை.*

*(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித வாழ்வில் மிக முக்கிய அடிப்படை தேவையாக உண்ண உணவு, உடுக்க உடை, குடியிருக்க இருப்பிடம் உள்ளன. இதில் வீடு மிக அத்தியாவசியத் தேவையாக இருக்கிறது. அந்த வகையிலே இன்று கூரை வீடு, குடிசை வீடுகளிலே மக்கள் வாழக்கூடிய நிலையைப் பார்த்தால்,

"வீடு கட்டும் பாட்டாளி வீதியிலே தூங்குகிறான்;
கூடி அந்த மாளிகையில் முதலாளி கும்மாளம் போடுகிறான்;
என்ன உலகமடா -- இது
ஏழைக்கு நரகமடா"

"அண்ணார்ந்து பார்க்கின்ற மாளிகைகட்டி -- அதன்
அருகினில் ஓலை குடிசைகட்டி,
பொன்னான உலகென்று பெயருமிட்டால் -- இந்த
பூமி சிரிக்கும்; அந்த சாமி சிரிக்கும்."

எவ்வளவு கருத்துள்ள பாடல்கள் என்பதை இந்த நேரத்திலே எண்ணிப் பார்க்கிறோம். இப்படி ஏற்றத்தாழ்வுகள் நிறைய இருக்கின்றன.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார் பாடிய பாடல் என்கிறேன். யார் பாடியது?

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர், தமிழகத்தில் முதலமைச்சராகப் பணியாற்றிய அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடலிலே வந்த பாடல் வரிகள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஓர் இரவு' திரைப்படத்தில் திரு. கே.ஆர். இராமசாமி அவர்கள் பாடிய பாட்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இல்லை, திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுக்குத் திரைப்பட அறிவு என்பது.



2003 நவம்பர் 5]

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்க்ள் இரண்டு பாடல்களின் வரிகளை ஒன்றாகச் சொல்லிவிட்டார். முதல் பாடல் கே.ஆர்.ஆர். அவர்கள் பாடியது. இரண்டாவது பாடல் 'என் **அண்ணன்**' படத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடியது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொன்னேன். முன்னாள் முதலமைச்சர் அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடிய பாடல் என்று சொன்னேன். அதில் ஒன்றும் மாற்றம் இல்லை. ஆகவே, இந்த பாடல்களினுடைய வரிகளைப் பார்க்கும்போது இந்த உலகத்திலே எவ்வளவு வேறுபாடுகள் இருக்கின்றன, ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன? ஆகவே, கூலி வேலை செய்யக்கூடியவர்கள், விவசாயக் கூலியாக இருக்கிறவன் பல்வேறு தொழில்களைச் செய்தாலும்கூட அவனுடையக் காலத்திலே, அவனுடைய தந்தை, அவனுடைய பாட்டனார் வாழ்ந்த காலம் இப்படி 2, 3 தலைமுறைகளாக அந்தக் கூரை வீட்டிலே, குடிசை வீட்டிலே வாழ்ந்துகொண்டிருக்கிறான். இன்னும் சொல்லப்போனால் பனை ஓலை, தென்னங்கீற்று, வைக்கோல் போன்றவற்றையெல்லாம் கொண்டு வேய்ந்த அந்த வீடுகளை, நைந்து போன வீடுகளை மீண்டும் புதுப்பிக்க முடியாத நிலையிலேகூட வாழ்ந்து கொண்டிருக்கிறான். ஆகவே, இப்படி வாழ்க்கையின் அடித்தட்டிலே, அவலமான நிலையிலே இருக்கக்கூடிய இந்தக் குடிசை வீடுகளிலே, கூரை வீடுகளிலே வாழக்கூடிய அவனுடைய வாழ்க்கையிலே புத்துயிர் ஊட்டக்கூடிய வகையிலே, தமிழக அரசாங்கம்,—அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடிய பாடலை முன் வைத்து இருக்கிற இந்த நேரத்திலே— இவர்கள் வாழ்க்கையிலே ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க, இந்தக் கூரை வீடுகள், குடிசை வீடுகள் இல்லாத ஒரு நிலையை தமிழகத்திலே உருவாக்க, இந்தக் கூரை வீடுகளை அகற்றுவதற்கு, கான்கிரீட் வீடுகள் அல்லது ஓட்டு வீடுகள் கட்டுவதற்கு மானியக் கடன் வழங்குவதற்கு நம்முடைய தமிழக அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அடிப்படையிலே, இன்றைக்குத் தமிழகத்தை ஆளுகின்ற முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே உள்ள குடிசை வீடுகளை எல்லாம் மாற்ற வேண்டுமென்று

தெரிவித்த அடிப்படையிலே, தமிழகத்தினுடைய நகரக் குடிசைப் பகுதியிலே வாழும் ஏழை குடும்பங்களுக்கு கான்கிரீட் தளம் மற்றும் செங்கல் சுவரோடும் 150 சதுர அடி கட்டட பரப்பளவு கொண்ட தனி வீடுகள் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் வால்மீகி அம்பேத்கர் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் வீடு ஒன்றுக்கு ரூ. 40 ஆயிரம் செலவில் கட்டப்பட்டு அதிலே மானியமாக 20 ஆயிரம் ரூபாயும், நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடன் தொகை 16 ஆயிரம் ரூபாய், பயன்பெறும் குடும்பங்களின் பங்குத்தொகையாக 4 ஆயிரம் ரூபாயையும் பயன்படுத்தி அந்த வீடுகளைக் கட்டிக்கொடுகின்ற பணியை இன்றைக்கு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணையின்படி செய்து வருகிறது. அந்த வகையிலே நகர்ப்புற குடிசைப் பகுதிகளை மேம்படுத்துவதற்காக ஒரு வீட்டுக்கு மானியமாக 10 ஆயிரம் ரூபாயும், பயனாளிகளின் பங்குத் தொகையாக 10 ஆயிரம் ரூபாயும், ஆக 20 ஆயிரம் ரூபாய் செலவில் இந்தத் திட்டத்தின் மூலம் அந்தக் குடிசைப் பகுதிகளை மேம்படுத்துகின்ற திட்டத்தையும் இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அறிவித்து, அதை இந்த வருடமே நடைமுறைப்படுத்த உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தப் பணியும் நடைபெற்று வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானிய உதவியோடு கட்டக்கூடிய வீடுகளைப் பற்றி சொல்லியிருக்கிறார். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அது ஒருசில இடங்களிலே குறைந்த எண்ணிக்கையிலே ஆண்டுதோறும் கிடைத்து வருகிறது. ஆனால், தமிழ்நாடு முழுவதும், எல்லா மாவட்டங்களிலும் இருக்கக்கூடிய கூரை வீடுகளை, குடிசை வீடுகளை அப்புறப்படுத்தி, ஒரு புரட்சிகரமான, நவீன திட்டத்தை உண்டாக்கக்கூடிய வகையிலே அரசு எல்லா குடிசைகளையும் அகற்றிவிட்டு வீடுகள் கட்டுவதற்கு ஆவன செய்யுமா? அப்படி திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்





என்ன நினைக்கின்றாரோ அந்தவகையில்தான் செய்ய வேண்டுமென்று நினைக்கின்றார்கள். ஆனால், அரசினுடைய நிதிநிலைமைக்கு ஏற்றாற்போல் அந்தந்த நிதியாண்டில் அந்தக் குடிசைகளை மாற்றுகின்றோம். அதுபோல் வரும் நிதியாண்டிலும் நிதிநிலைமைக்கு ஏற்றாற்போல் அரசு அதைச் சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இரண்டு வகையானத் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். ஒன்று, பயனாளிகளுடைய பங்காக 4 ஆயிரம் ரூபாய், 20 ஆயிரம் ரூபாய் மானியமாக; 16 ஆயிரம் ரூபாய் கடனாக என்று சொன்னார்கள். அடுத்தாற்போல 10 ஆயிரம் ரூபாய் பயனாளிகளுடைய பங்கு என்று சொல்லியிருக்கின்றார். இவை இரண்டுக்கும் அளவுகளில் ஏதேனும் வித்தியாசம் இருக்கின்றதா? இந்த நிலை சென்னையையொட்டி இருக்கின்ற பகுதிகளுக்கு மட்டுமா அல்லது சென்னைக்கு அப்பாற்பட்டும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா? இந்த இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை நான் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு வகையாக இந்தப் பணிகள் நடைபெறுகின்றன என்று சொன்னார்கள். இதில் என்ன என்று சொன்னால், 40 ஆயிரம் ரூபாய்க்கு கட்டிக் கொடுக்கப்படுகின்ற வீடுகள், வீடுகளாகக் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. 10 ஆயிரம் ரூபாய் மானியமாகவும், பயனாளிப் பங்குத் தொகையாக 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகின்ற வீடுகளுக்கு, அது குடிசைப் பகுதியாக இருந்தால் அதனை மேம்படுத்தும் பணிகளுக்காக அது வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்னையில் மட்டும்தான் இந்தத் திட்டம் இருக்கின்றதா, மற்ற இடங்களில் இல்லையா என்ற கேள்வியைக் கேட்டார்கள். மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளிலே இந்தத் திட்டங்கள் தமிழகம் முழுவதும் நடைபெற்று வருகின்றன.

[2003 நவம்பர் 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. திருமாவளவன்.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்துக் காலங்களிலே பாதிக்கப்படுவதைவிட, சாதி, மத வெறியாட்டங்களின்போது கூரை, குடிசைகள் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றன. தமிழகத்தில் இத்தகைய வெறியாட்டங்களால் பாதிக்கப்பட்ட எண்ணிக்கைதான் மிகவும் அதிகம். ஆகவே, அனைத்து கூரைகளையும் மாற்றி, கான்கிரீட் வீடுகளைக் கட்டித் தருகிற ஒரு சிறப்புத் திட்டத்தை தமிழக அரசு மேற்கொண்டு நடத்துவதற்கு முன்வர வேண்டும். ஏற்கெனவே கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிற பல்வேறு கான்கிரீட் வீடுகள் 20 ஆண்டுகளுக்கு முன்பு, 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள். எல்லாம் மிக மோசமான நிலையிலே இடிந்து விழுந்து கொண்டிருக்கின்றன. அதனால் பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த வீடுகளை மராமத்து செய்வதற்கு, பராமரிப்பதற்கு தமிழக அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாத வினா என்ற காரணத்தினால் உறுப்பினர் இதற்காகத் தனிக் கேள்விப் போடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பழுதடைந்தால், அவற்றைப் புதுப்பித்துக் கொள்வதற்காக கச்சா வீட்டுக்கு 10 ஆயிரம் ரூபாய் என்று அரசு வழங்கி வந்தது. அந்தக் கச்சா வீட்டைப் புதுப்பிப்பதற்காக வழங்கப்பட்டிருக்கின்ற நிதியை (குறுக்கீடுகள்) சரி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஓடப்பர்கள் எல்லாம் உயரப்பர்களாக வேண்டும்.' குடிசை வீடுகள் எல்லாம் மாடி வீடுகளாக வேண்டும் என்ற நல்ல எண்ணத்திலே அண்ணன் ஜி.கே. மணி அவர்கள் இதில் கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். அதை வழிமொழிந்து.** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2003 நவம்பர் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது. அவர் பேசியது, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. மு. அப்பாவு. (குறுக்கீடு) பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய வால்மீகி அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா திட்டத்தின் மூலம் மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளில் மட்டும் செயல்பட்டு வந்த அந்தத் திட்டத்தை..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் துணைத் தலைவராகப் பணியாற்றிய பரிதி இளம்வழுதி, இன்னொரு முறை பேரவையினுடைய விதிமுறைகளைப் படிப்பது நல்லது என்று கருதுகிறேன். திரு. அப்பாவு, பேசுங்கள். (குறுக்கீடு) அப்பாவு, பேசுங்கள். (குறுக்கீடு) அப்பாவு, பேசுங்கள்,

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்மீகி அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா திட்டம் மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளுக்கு மட்டும் செயல்பட்டு வந்ததை, தமிழகத்திலுள்ள பேரூராட்சிப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்திய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தின் மூலம் மத்திய அரசு 1,000 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி, இந்தியத் திருநாட்டிலுள்ள மிக அதிகமான மாநிலங்களில், எந்தெந்த மாநிலங்களில் குடிசை வீடுகள் அதிகமாக இருக்கின்றன என்பதைக் கணக்கிடப்பட்டதில், தமிழகம் குடிசைப் பகுதிகள் நிறைந்த மாநிலங்களில் 4-வது இடத்தில் இருப்பதை அறிந்து, தமிழகத்தில் கிட்டத்தட்ட மத்திய அரசு ஒதுக்கியிருக்கின்ற நிதியில் 150 கோடி ரூபாயை நாம் பெறுவதற்கு வாய்ப்பு இருந்தும், 20 கோடி ரூபாய் அளவிற்கு மட்டும் இந்தத் திட்டத்தில் நாம் பெற்று...

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரின் பதில் முடிகின்ற வரைக்கும் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. மு. அப்பாவு:** சுமார் 20 கோடி ரூபாய் அளவுக்கு மட்டுமே நாம் பெற்றிருக்கிறோம். வருகின்ற நிதியாண்டில் மத்திய அரசு ஒதுக்கியிருக்கின்ற இந்த ஆயிரம் கோடி ரூபாயில் நாம் பெறவேண்டிய சுமார் 150 கோடி ரூபாய் அளவு பெற்றோமானால், தமிழகத்தில் பெரும் அளவுக்கு குடிசை வீடுகளே இல்லாத நிலைக்கு ஆக்கிவிடலாம்.

நாம் அதற்கு இணையான நிதியை வழங்க வேண்டும். மத்திய அரசு 50 சதவிகிதம், மாநில அரசு 40 சதவிகிதம், பயனாளிகள் 10 சதவிகிதம் என்ற வகையில் கட்டுகின்ற அந்த வீடுகளை மிக அதிகமாகப் பெறுவதற்கு தமிழக அரசு முயற்சி செய்யுமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னவாறு 2002-2003 ஆம் ஆண்டு வரை ஆயிரம் வீடுகளும், 2002-2003 தொடர் ஆண்டில் 6,250 வீடுகளும், 2003-2004 ஆம் ஆண்டு 5 ஆயிரம் வீடுகளும் கட்டுவதற்காக திட்டமிட்டு பணியாற்றினாலும் பயனாளிகள் 4 ஆயிரம் ரூபாய் கட்டினால்தான் இந்த நிதியைப் பயன்படுத்தக்கூடிய நிலை இருக்கிறது. அந்த வகையில் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நினைக்கின்ற வகையிலே குடிசைகளை எல்லாம் வீடுகளாக மாற்றுகின்ற பணியை தமிழக அரசு கண்டிப்பாக செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. எஞ்சிய வினாக்கள் நாளை எடுத்துக்கொள்ளப்படும்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) மது விற்பனையில் அரசு எடுத்துள்ள முடிவின் நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மது விற்பனையில் அரசு எடுத்துள்ள முடிவின் நிலை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக டாக்டர் பொன்முடி, திரு. எ.வ. வேலு, திரு. இ. புகழேந்தி, திரு. எஸ்.ஏ.எம். உசேன், திரு. ப. ரங்கநாதன், திரு. இரா. திருமாவளவன், திரு. ஜி.கே. மணி, திரு. பரிதி இளம்வழுதி ஆகியோரும், சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. லா. சந்தானம் அவர்களும், கவன ஈர்ப்பாக திரு. சி. ஞானசேகரன், திரு. கே. ஆறுமுகம் ஆகியோரும் அறிவிப்புகளைக் கொடுத்துள்ளார்கள். இதைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாகப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். தி.மு.க. சார்பில்... (குறுக்கீடு)





## 3. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒவ்வொரு பிரச்சினையும் ஒவ்வொரு நாள் எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடு) திரு. பொன்முடி (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன், இதையெல்லாம் அறையிலே வந்து பேச வேண்டும். பிரச்சினையினுடைய முக்கியத்துவம் கருதி ஒவ்வொரு நாளும் எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடு) டாக்டர் பொன்முடி. (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையெல்லாம் அறையில் வந்து பேச வேண்டும். திரு. பழனிசாமி, அறையில் வந்து பேசவேண்டும். பிரச்சினையினுடைய முக்கியத்துவம் கருதி ஒவ்வொரு நாளும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. நேற்று ஒன்று எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்று ஒன்று எடுத்துக் கொள்ளப்படுகிறது. இதற்கு மேலே பேசுவதற்கு அனுமதி அளிக்க முடியாது. டாக்டர் பொன்முடி, பேசுங்கள். (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன் பேசுவதை அனுமதிக்க முடியாது. பொன்முடி, பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நீங்கள் அனுமதி அளிக்காததால் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி இல்லாமல் பேசக்கூடாது. (குறுக்கீடு) பழனிசாமி, நீங்கள் மூத்த தலைவர் (குறுக்கீடு) ஒவ்வொரு நாளும் பிரச்சினையினுடைய முக்கியத்துவம் கருதி எடுத்துக்கொள்ளப்படுகிறது. இன்றைக்கே 2, 3 சிறப்புக் கவன ஈர்ப்புகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. (குறுக்கீடு) நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. (குறுக்கீடு) இப்போது அனுமதி அளிக்க முடியாது. டாக்டர் பொன்முடி.

[2003 நவம்பர் 5

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,-(குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இது முறைகேடானது. நீங்கள் பேசுவது முறைகேடானது. விதிமுறையை மீறியது. சட்டமன்றத்தினுடைய மரபுக்கு விரோதமானது. ஒரு கட்சியினுடைய தலைவரே இப்படிப் பேசுவதற்காக நான் வருந்துகிறேன். இதை அனுமதிக்க முடியாது. பொன்முடி பேசுங்கள். (குறுக்கீடு) அனுமதி இல்லாமல் பேசக்கூடாது. பழனிசாமி, அனுமதி இல்லாமல் பேசக்கூடாது. தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடு) அனுமதிக்கவில்லை, அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு) பிரச்சினையினுடைய முக்கியத்துவம் கருதி ஒவ்வொரு நாளும் எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களும், திரு. பழனிசாமி அவர்களும் பேசியதை அவைக் குறிப்பில் ஏற்ற வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை எதுவுமே அவைக் குறிப்பில் ஏறாது. என்னுடைய அனுமதி இல்லாமல் பேசியது எதுவுமே அவைக் குறிப்பில் ஏறாது. திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களும், திரு. பழனிசாமி அவர்களும் பேசுவது அனைத்தும் அவைக் குறிப்பில் ஏறாது. அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) பழனிசாமி, கொஞ்சம் அவையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழையுங்கள். (குறுக்கீடு) நீங்கள் செய்வது முறைகேடானது. அனுமதி கொடுக்க முடியாது. தயவுசெய்து அமருங்கள். திரு. பொன்முடி (குறுக்கீடுகள்) பேராசிரியர் அவர்கள்.

*முற்பகல் 11-05*

**•பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இப்பொழுது எழுப்பிய அந்தப் பிரச்சினை குறித்து இன்றைக்கு எடுத்துக்கொள்ளாவிட்டாலும், நாளையதினம் எடுத்துக்கொள்வதாக உறுதி கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.



2003 நவம்பர் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு, அதாவது பிரச்சினையினுடைய முக்கியத்துவம் கருதி ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்று எடுத்துக்கொண்டு இருக்கிறோம். இன்றைக்கே மூன்று சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புகள் வருகின்றன. அவர்கள் வலியுறுத்தக்கூடிய பிரச்சினைக்கு முக்கியத்துவம் இருக்குமானால் அதுபற்றி அரசு பரிசீலித்து எப்போது எடுத்துக்கொள்ள முடியுமோ அப்போது எடுத்துக்கொள்ளலாம். ஆனால், அவர்கள் நினைக்கின்ற அன்றைக்கு உடனேயே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்வது, முறையற்றது. இன்றைக்கும் முக்கியமான பிரச்சினைகள்தான் வருகின்றன. (குறுக்கீடு) இன்றைக்கும் முக்கியமான பிரச்சினைகள்தான் வருகின்றன.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு மாதம் கழித்து சட்டமன்றம் கூடுகிறது. இந்த ஆறு மாத காலத்தில் பல்வேறு நிகழ்வுகள் நிகழ்ந்து இருக்கின்றன. அதுகுறித்து நிறைய நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம். கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் நாங்கள் கொடுத்திருக்கின்றோம். அவை முக்கியமான பிரச்சினைகள். ஒரு நாளைக்கு ஒரு பிரச்சினை மட்டும்தான் எடுத்துக்கொள்வது, சட்டசபை ஐந்தே நாள் நடக்கும் என்று சொன்னால், அனைத்துப் பிரச்சினைகளையும் இங்கே விவாதிக்க முடியாது. எனவே, நீங்கள் இன்று இல்லாவிட்டாலும், நாளை எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்வது சிறப்பாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொடுத்திருக்கிற எல்லா ஒத்திவைப்புத் தீர்மானங்கள், சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புகளையும் எடுத்துக்கொள்ள வேண்டுமானால் 234 நாட்கள் கூட்ட வேண்டும் சட்டசபை. பிரச்சினையினுடைய முக்கியத்துவம் கருதித்தான் அவையில் எடுத்துக்கொள்ள முடியும். திரு. பொன்முடி பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இது முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது எடுத்துக்கொண்டு இருப்பது முக்கியமான பிரச்சினை இல்லையா?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இது முக்கியமான பிரச்சினை இல்லையென்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினையினுடைய முக்கியத்துவம் கருதி எப்பொழுது வாய்ப்பு இருக்கிறதோ அப்பொழுது எடுத்துக்கொள்ளலாம். அதுபற்றி ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) அதை எப்படி குறிப்பிட்டுச் சொல்வது? உட்காருங்கள். அறையிலே வந்து பேசுங்கள் அவற்றையெல்லாம். (குறுக்கீடு) இதற்காகத்தான் அறையிலே வந்து பேசச் சொல்கிறேன். அறையிலே வந்து விவாதிக்கலாம் அதை. திரு. பொன்முடி பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இப்பொழுது பேசுவது எதுவும் அவைக்குறிப்பிலே ஏறாது. அனுமதி இல்லாமல் பேசக்கூடாது. பழனிசாமி அவர்கள் என்ன எதிர்பார்க்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை (குறுக்கீடு). பழனிசாமி அவர்கள் என்ன எதிர்பார்க்கிறார் என்று தெரியவில்லை. வெளிநடப்புச் செய்யப்போகிறார்களா அல்லது வெளியேற்ற வேண்டுமா? என்ன எதிர்பார்க்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. தயவுசெய்து அமருங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி, முறைகேடாக இப்படி பேசிக்கொண்டிருப்பது சரியல்ல. தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து அமருங்கள் (குறுக்கீடு). தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். எஸ்.ஆர்.பி. அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு விளக்கம் சொல்லியிருக்கிறேன். பிரச்சினையினுடைய முக்கியத்துவம் கருதி, ஒவ்வொரு நாளும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. இன்றைக்கே மூன்று பிரச்சினைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. மூன்றுமே முக்கியமான பிரச்சினைகள். ஆகவே, இதிலே அரசு பதில் சொல்வதற்கு ஒன்றும் தயங்கவும் இல்லை; இதில் எடுத்துக்கொள்வதிலே ஒன்றும் பிரச்சினையும் இல்லை. தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அதை எதிர்க்கட்சிகளுக்குச் சொல்லுங்கள். தி.மு.க.விற்கு எல்லாம் பாடம் நடத்துங்கள். எது முக்கியமான பிரச்சினை என்று சொல்லுங்கள். காங்கிரஸ் கட்சிக்குச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எல்லாவற்றுக்கும் பாடம் நடத்துங்கள். முக்கியமான பிரச்சினை என்றால் அரசு கருதக்கூடிய முக்கியமான பிரச்சினைதான் எடுக்கிறோம். தயவுசெய்து உட்காருங்கள், திரு. பொன்முடி பேசுங்கள். (குறுக்கீடுகள்)

*(இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*





## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### (அ) மது விற்பனையில் அரசு எடுத்துள்ள முடிவின் நிலை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மது விற்பனையில் அரசு எடுத்துள்ள முடிவின் நிலை குறித்து இப்பொழுது சிறப்புக் கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்ளப்படுகிறது. திரு. பொன்முடி பேசுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதுவிலக்குக் கொள்கையை பொறுத்தவரையில், 2½ ஆண்டு கால ஆட்சியில் அடிக்கடி மதுவைப்போலவே தள்ளாடுவதோடு பல்வேறு கொள்கைகள் மாற்றப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. குறிப்பாக முதல் அறிக்கையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையாற்றுகிறபோது அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. பொன்முடி, மதுவைப்போல எதுவும் தள்ளாடுவது இல்லை. மது குடித்தவர்கள்தான் தள்ளாடுவார்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** நன்றி, உங்கள் விளக்கத்திற்கு மிகவும் நன்றி. இங்கே மதுபானங்கள் வெளிநாடுகளிலேயிருந்து உருவாக்கப்பட்டு, இங்கே Bottling செய்யப்பட்டு, விற்கப்படுகின்ற மதுபானங்கள் போன்றவை எல்லாம்கூட TASMAC மூலமாக கொடுக்கப்பட்டு, கடந்த ஆட்சியிலே அவை தவறுதலாக நடைபெற்றன என்று சொல்லி ஒரு புதிய கொள்கையை அறிவிப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

முற்பகல் 11-10

அது சென்ற ஆண்டிற்கு முன்பாக வாசிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையிலேயும் சொல்லப்பட்டது. அதற்குப் பிறகு, சென்ற ஆண்டு படித்த நிதிநிலை அறிக்கையிலேகூட, இந்த மானியக் கோரிக்கையின்போது இந்தத் திட்டத்தை ஓகோ என்று பாராட்டி அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அதிலே அவர் குறிப்பிடுகிறபொழுதுகூட, 'கடந்த ஆட்சிக் காலத்தில் இருந்த மதுபான ஏல முறையில் சிண்டிகேட் காரணமாக அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டது என்பதைக் கண்டறிந்து, அதனைச் சரி செய்யும் வகையில், புதிய உரிமம் வழங்கும் முறையினை அறிமுகப்படுத்தி அரசுக்கு அதிக்

வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. கடந்த தி.மு.க. ஆட்சியில் மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுக்கு உரிமம் வழங்கியதன் மூலம் கிடைத்த மொத்த வருவாய் 481 கோடி ரூபாயாக இருந்தது. இந்த ஆண்டில் உரிமம் வழங்கியதில் இதுவரை கிடைத்த மொத்தத் தொகை 609 கோடி ரூபாய் ஆகும்' என்று இந்தத் திட்டத்தினுடைய பெருமைகளையெல்லாம் பற்றிக்கூடச் சொன்னார்கள்.

அப்படி ஓர் ஆண்டு சொல்லி, அதிக வருமானம் ஈட்டிக் கொடுத்த இந்தக் கொள்கையைத் திடீரென்று இப்போது திரும்பப் பெற்றிருக்கிறீர்கள். அதற்கு என்ன காரணம் என்று நீங்கள் சொல்கிறீர்கள் என்று சொன்னால், இப்போது இருக்கிற தனியார் கடைகளிலே மீண்டும் சிண்டிகேட் இருக்கிறது என்று சொல்கிறீர்கள். சிண்டிகேட் இருப்பதோடு மட்டுமல்ல, அங்கே தவறான மதுபானங்களை விற்கிறார்கள் என்றும் சொல்கிறீர்கள். தவறான மதுபானங்கள் விற்பதாக நீங்கள் சொல்கிறீர்கள் என்று சொன்னால், இதுவரை அத்தகைய மதுபானக் கடைகளிலே தவறான மதுபானங்களை விற்றதாக எத்தனை வழக்குகள் காவல் துறையின் மூலமாகப் பதிவு செய்திருக்கிறார்கள். ஏன் என்றால், அந்தக் கடைகள் தவறான மதுபானங்களை விற்று இருக்கின்றன என்று சொன்னால், எத்தனை கடைகளின் மீது — எத்தனை தனியார் கடைகளின் மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அப்படி காவல் துறை நடவடிக்கை எடுக்காமலிருக்கும்பட்சத்தில், நீங்கள் சொல்லியிருக்கிற அந்தக் குற்றச்சாட்டு—காவல் துறையின் அந்தக் குற்றச்சாட்டு, ஒன்று காவல் துறை சரியாகச் செயல்பட்டு இருக்காத சூழ்நிலை ஏற்பட்டிருக்க வேண்டும் அல்லது நீங்கள் சொன்னதிலே குழப்பம் ஏற்பட்டிருக்க வேண்டும். நீங்கள் சொல்வது...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுபானக் கடைகளில் அதாவது கள்ளத்தனமான முத்திரை மற்றும் ஆயத் தீர்வைக்கு உட்படாத மதுபானங்கள் விற்றதாக 2001-ல் ஒரு மதுபானக் கடையையும், 2002-ல் 4 மதுபானக் கடைகளின் மீதும், 2003-ல் 4 மதுபானக் கடைகளின் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அந்த வழக்குகள் கோர்ட்டில் நிலுவையாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மொத்தம் 9 வழக்குகள் நிலுவையில் இருப்பதைக் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.



**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறாயிரத்திற்கு மேற்பட்ட தனியார் கடைகள் இயங்குகிற இடத்தில், ஒரு கடையின் மீதுதான் வழக்குப் போட்டிருக்கிறார்கள். ஒரு கடையின் மீது வழக்குப் போட்டுவிட்டு, அடுத்த ஆண்டு 4 கடைகளின் மீது வழக்குப் போட்டுவிட்டு, ஏதோ எல்லா கடைகளிலுமே தவறான மதுபானங்கள் விற்கப்படுகின்றன என்று சொல்லி, நாங்கள் கொள்கையை மாற்றிக்கொள்கிறோம் என்று சொன்னால், இது எந்த அளவிற்குச் சரியானது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

தவறுகள் நடக்கலாம். அதைத் திருத்த வேண்டிய பொறுப்பும் அரசுக்கு இருக்கிறது. அதை நான் இல்லை என்று மறுக்கவில்லை. ஆனால், தனியார் கடைகளுக்குக் கொடுத்திருந்த உரிமத்தை மாற்றிவிட்டு, கூட்டுறவுக் கடைகளின் மூலமாக விற்கிறோம் என்று சொல்கிறீர்களே, இது கூட்டுறவினுடைய அடிப்படைக் கொள்கைக்கே விரோதமான ஒன்றாகும். பொதுவாக, Directive Principles of State Policy, அரசமைப்புச் சட்டத்திலே சொல்லப்பட்டு இருப்பதிலேகூட, கூட்டுறவு என்பது பல்வேறு நல்ல காரியங்களுக்காகப் பயன்படுத்த வேண்டுமென்றுதான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, மதுபான வகைகளை விற்பதற்காக...

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் பொன்முடி அவர்களுக்கு ஒரு முக்கியமான விவரம் தெரியவில்லை என்று இங்கே தெளிவாகிறது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு மதுபானக் கடைகளை நடத்துகின்ற உரிமையை, அந்தப் பணியை முதன்முதலாகக் கொடுத்தது தி.மு.க. அரசுதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இந்த மதுபான விற்பனை எப்படி ஒரு சிண்டிகேட்டால் சீரழிக்கப்பட்டது என்பதை இங்கே நான் புள்ளிவிவரங்களோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

1998-99 ஆம் ஆண்டில் தனியார் சில்லறை விற்பனையாளர்களால் நடத்தப்பட்ட கடைகளின் எண்ணிக்கை 4,675 என்ற விவரத்தை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அடுத்த ஆண்டில், அதாவது 1999-2000 ஆம் ஆண்டில்

இந்தக் கடைகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து 4,038 ஆனது. 2000-2001 ஆம் ஆண்டில் தனியார் சில்லறை விற்பனையாளர்களால் நடத்தப்பட்ட கடைகளின் எண்ணிக்கை மேலும் குறைந்து 3,646 ஆனது. தனியார் சில்லறை விற்பனையாளர்கள் தவறான வணிக கூட்டணி, அதாவது cartel ஏற்படுத்தியதன் மூலமே இவ்வாறு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 1,000 கடைகளுக்கும் மேலாகக் குறைந்து விட்டது என்பது எளிதில் புலனாகும். மேலும், 2000-2001 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 547 கடைகளை ஒதுக்கீடு செய்ததன் மூலமே சில்லறை விற்பனை முறைகளை நிலைநிறுத்த முடிந்தது என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, தி.மு.க. ஆட்சியிலிருந்தபோது Constitution-ல் உள்ள Directive Principles-ஐப் பற்றி நீங்கள் கவலைப்படவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-15

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் சொல்லிய கருத்து எனக்குத் தெரியும். அப்போது விடப்பட்ட கடைகள், it is not a monopolistic trade; கூட்டுறவுக் கடைகளுக்கு மட்டுமே இதை விற்பதற்காக உரிமங்கள் வழங்கப்படவில்லை. நீங்கள் சொன்னதைப்போல ஒரு பரீட்சார்த்தமாக (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதும் ஒரு monopoly கொடுக்கப்படவில்லையே! TASMAC நடத்தப் போகிறது, அர்பன் ஏரியாவிலே. அர்பன் ஏரியாக்களில் TASMAC நடத்தப்போகிறது. ரூரல் ஏரியாவிலே கோ-ஆப்பரேட்டிவ் சொசைட்டிஸ் நடத்தப் போகிறார்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** தலைவர் அவர்களே, TASMAC, கோ-ஆப்பரேட்டிவ் என்பது எல்லாமே அரசு நிறுவனங்கள்தான். அரசோடு தொடர்புடைய நிறுவனங்கள்தான். It is monopolistic. It is not to the individuals. அரசு நிறுவனங்களே நடத்துகிற ஒரு நிலைமைக்கு இன்று கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதை monopolist இல்லை என்று சொல்ல முடியாது. TASMACதான் கடைகளை உருவாக்கப் போகிறது. கூட்டுறவுக் கடைகளுக்கு அவர்கள் மூலமாக விற்கப் போகிறார்கள் என்றுதான் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே, இதைப் பொறுத்தவரையிலே இது கூட்டுறவுத் துறையினுடைய அடிப்படைக் கொள்கைக்கு எதிர்ப்பானது.





நாங்கள் செய்தது தப்பாகவே இருக்கலாம். நாங்கள் செய்ததை பலவற்றை நீங்கள் மாற்றவில்லையா? நாங்கள் நல்லது பல செய்திருக்கிறோம், மாற்றியிருக்கிறீர்கள். அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் கொண்டு வந்தோம்; மாற்றியிருக்கிறீர்கள். அதையெல்லாம் மாற்றும்போது இதையும் சேர்த்து மாற்ற வேண்டியதுதானே? நாங்கள் செய்தது தவறாகவே இருக்கட்டும். நீங்கள் மக்களுக்காக நன்மை செய்ய வேண்டும் என்று எண்ணுகிறவர்கள். கூட்டுறவுத் துறையிலே இது வேண்டாம். தனியார்த் துறையிலே செய்யட்டும் என்று செய்திருக்கலாமே? அதோடு கள்ளச் சாராயம் இதுவரையிலே விற்றுக் கொண்டிருந்தது; இனிமேல் கூட்டுறவுத் துறைக்கு வந்தால், கள்ள பிராந்தி, கள்ள விஸ்கி, கள்ளச் சாராயம், கள்ள பீர் இப்படித்தான் வரும். ஏன் என்றால், 7 மணிக்கு கூட்டுறவுக் கடைகளை மூடி விடுவான். 7 மணிக்கு கூட்டுறவுக் கடையை மூடிவிட்டுப் போவான். 7 மணிக்கு கடையை மூடிவிட்டான் என்றால் நம்முடைய மக்கள், வாங்குகிறவர்கள் பெரும்பாலும் 7 மணிக்கு மேலேதான் பாதி பேர் கடைக்கே போவார்கள். 7 மணிக்கு கடையை மூடிவிட்டால் அடுத்து என்ன பண்ணுவான் என்றால், பக்கத்திலே இருக்கிற கடையிலே 'பிளாக்கிலே' வாங்கி வைத்து விற்பான். இதுவரையிலே கள்ளச் சாராயம் இருந்தது. இனி நீங்கள் கொண்டு வருகிற முறைகளின் மூலமாக கள்ள பிராந்தி, கள்ள விஸ்கி, கள்ள பீர்தான் பெருகுமே தவிர, உண்மையிலேயே இது ஒரு சிறப்பான ஒரு திட்டமாக செயல்பட முடியாது. அதுமட்டுமல்ல, கூட்டுறவுத் துறையிலேகூட இது போன்ற தவறாக வியாபாரம் செய்வதாக மதுரையிலே ஒரு கூட்டுறவுக் கடையிலே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, நீங்களே இப்படியெல்லாம் வழி சொல்லிக் கொடுக்கக் கூடாது. 7 மணியோடு முடிக்கச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** நடைமுறைகளைச் சொல்கிறபோது வழிமுறைகளைச் சொல்வதாக நீங்கள் எண்ணிக் கொள்ளக் கூடாது. இனி இன்னொன்று செய்யுங்கள். ஏனென்றால் இன்னும் இரண்டு மாதத்திலே இதையே நீங்கள் திரும்பப் பெறப் போகிறீர்கள். ஏன் என்றால், ஒரு வருடத்திற்கு முன்பு சொன்னீர்கள். நாங்கள் கொண்டு வந்திருக்கிற கொள்கையை ஆய்வு செய்து lot system மூலமாகக் கொண்டு வருவது மிகச் சிறப்பான கொள்கை என்று சொன்னீர்கள்.

இரண்டு வருடங்களுக்கு அப்புறம் எங்கள் ஆட்சி. இப்பொழுது நீங்கள் வந்து ஏலம் கேட்டதில் எத்தனை கடைகள் உங்களுக்கு வந்திருந்தன? நீங்கள் கொண்டு வந்த திட்டம் — புதிய திட்டத்தை இரண்டு வருடங்களுக்கு முன்பு அறிமுகப்படுத்தினீர்கள். தி.மு.க. ஆட்சியிலே 4,000 கடை 3,000 கடையாகக் குறைந்தது. நீங்கள் இந்த இரண்டு ஆண்டுகளாக புதிய கொள்கை என்று அறிமுகப்படுத்தியிருந்தீர்களே, இந்த ஆண்டு ஏலம் கேட்டிருந்தீர்களே, எத்தனை கடை, தனியார் கடை வந்தது என்று சொல்லுங்கள். அந்தத் தனியார் கடைகள் எவ்வளவு வந்திருக்கின்றன? ஆகவே, தனியார் கடைகளிலே குறைகிறது என்பது சிண்டிகேட் அமைப்பது, எந்த முறைகள் வந்தாலும் இருக்கத்தான் செய்யும். இதைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளை கண்டறிவது ஒரு அரசின் கடமை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அதேநேரத்தில் இதை ஒரு கூட்டுறவுத் துறை மூலமாக—ஏன் என்றால் ஒவ்வொரு துறையிலும் தனியார்கள் அதிகமாக சம்பாதிக்கிறார்கள் என்று சொல்லி அரசாங்கமே அதைச் செய்யப் போகிறது என்று அரசே நுழைவோம் என்று சொன்னால் எதுவுமே தனியார் துறையில் நடக்காது. பலசரக்குக் கடையிலேகூட தனியார் செய்தால் நன்றாக வியாபாரம் வருகிறது. நல்ல இலாபம் வருகிறது என்று சொன்னால், இனிமேல் பலசரக்குக் கடைகளை நாங்களே எடுத்து நடத்தப் போகிறோம் என்று சொல்லி, அரசாங்கம் அதிலே நுழைய முடியுமா? அதிலே இருக்கிற போட்டிகளை ஒரு healthy competition ஆக உருவாக்க வேண்டியது ஒரு அரசின் கடமையாக இருக்கலாமே தவிர, ஒட்டுமொத்தமாக நாங்களே எடுத்து நடத்துகிறோம் என்று சொல்கிறபோது, அதுவும் இந்த மதுபானக் கொள்கையில் ஒரு prohibition என்று வைத்துக் கொண்டு...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கடந்த காலங்களில் இந்த மதுவிலக்குக் கொள்கையில் ஏற்பட்டிருந்த பின்னடைவுகளை எல்லாம் சரி செய்து போலித்தனமாக கள்ள மதுக்கள் எந்தவழியிலும் தமிழ்நாட்டிற்கு வந்து விற்பனை ஆகாமல் தடுப்பதற்காகவும், சில நபர்கள், அரசுக்கு வரவேண்டிய ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை கூட்டணி அமைத்துக் கொண்டு, அரசை எதிர்த்து சவால் விடுகின்ற அளவிற்கு, அவர்களுடைய செயல்பாடு அமைந்தது என்று அரசிற்கு ஆதாரங்கள் வாயிலாகக் கிடைத்ததன் அடிப்படையில்தான், புது மதுவிலக்குக் கொள்கையை இந்த வருடம் கடைப்பிடிப்பதாக அரசு முடிவு எடுத்தது.



நான் ஓர் உதாரணத்தை இந்த அவைக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-20

அரசு புதுக் கொள்கையை அறிவித்து, கடைகளுக்கு விண்ணப்பங்கள் பெறுவதற்கு கடைசி தேதியாக 13-10-2003 என்று தேதி நிர்ணயிக்கப்பட்டது. அன்றைய தேதி வரை—குறிப்பாக நான் ஓர் உதாரணத்தை மட்டும் இங்கே சொல்கின்றேன்—சென்னை மாநகரில் 1,023 கடைகளுக்கு அறிவிக்கப்பட்டிருந்தன. ஆனால் கடை கேட்டு வந்த விண்ணப்பங்கள், 51 கடைகளுக்குத்தான் விண்ணப்பங்கள் வந்தன. அதைப்போல, மாநிலத்தில் இருக்கின்ற அத்தனை 29 மாவட்டங்களிலும் ஒட்டுமொத்தமாக 8,500 கடைகளுக்கு அறிவிப்புச் செய்ததில் மொத்தமே 1,258 விண்ணப்பங்கள், 962 கடைகளுக்குத்தான் வந்தன. கால அவகாசம் கேட்டு பல்வேறு தரப்புகளிலிருந்து விண்ணப்பங்கள் வந்த காரணத்தால், மீண்டும் அரசு 10 நாட்கள் அவகாசம் கொடுத்து, அதை நீட்டிப்பு செய்து அறிவித்தது. 22-10-2003 வரை கால அவகாசம் கொடுத்து, மனுக்கள் பெறப்படும் என்று அரசின் சார்பாக அறிவிப்பு வந்தது. சென்னை மாநகரில் 1,023 கடைகளுக்கு மீண்டும் வந்த மனுக்கள் எண்ணிக்கை 385. 385 மனுக்கள் 385 கடைகளுக்கு மட்டுமே வந்தன. ஒரு கடைக்குக்கூட, போட்டி மனுக்களே இல்லை. ஒரு கடைக்கு ஒரு மனு வீதமாக 385 மனுக்கள் 385 கடைகளுக்குப் பெறப்பட்டிருக்கின்றன. இதிலிருந்து அவர்கள் சிண்டிகேட் அமைத்துக் கொண்டு, சென்னை மாநகரத்தினுடைய ஒட்டுமொத்த வருவாயையும் ஒருசில தனி நபர்கள் இதுவரையில் அனுபவித்து வந்திருக்கின்றார்கள் என்பதை இந்தப் புள்ளிவிவரங்கள் விவரமாகக் கூறுகின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் சுட்டிக்காட்டினேன். தி.மு.க. ஆட்சியில் ஏதோ 4,000 கடைகள் 3,000 ஆகக் குறைந்துவிட்டன; 3,000 கடைகள் 2,000-ஆகக் குறைந்துவிட்டன என்று சொன்னீர்களே, நீங்கள் வந்து 2½ வருடங்கள் ஆன பிறகு கடைகளை ஏலம் எடுக்க ஆள் வருவதில்லை என்பதை நீங்களே ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள் பாருங்கள். அப்படி என்றால், இந்த 2½ வருடங்களாக நீங்கள் செய்த தவறுகளின் காரணமாக தனியார்கள் மனு போடுவதற்கு வாய்ப்புகள் வரவில்லை, அதுதானே அர்த்தம்?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கு ஒரு சின்ன புள்ளிவிவரத்தைக் கூற கடமைப்பட்டிருக்கின்றேன். ஒட்டுமொத்த மதுபான எடுப்பில் 22 சதவீதம் சென்னை மாநகரத்தில் இருந்து எடுக்கப்பட்டிருக்கின்றது கடந்த புள்ளிவிவரக் கணக்குக் கூறுகிறது. ஒட்டுமொத்த வருவாயில் கிட்டத்தட்ட 22 சதவீதம் சென்னை நகரத்திலிருந்து வருகின்றது. 1,023 கடைகளுக்கு அறிவிப்புச் செய்ததில் 385 கடைகளுக்கு மட்டும் 385 மனுக்கள் பெறப்பட்டதிலிருந்து அவர்கள் ஒரு பலமான கூட்டணி அமைத்துக் கொண்டு, அந்த வருவாய் எந்த விதத்திலும் அரசுக்கு வந்து சேர்ந்துவிடக் கூடாது என்று மிகப் பெரிய அளவில் அரசை எதிர்த்து சவாலாக கூட்டணி அமைத்திருக்கின்ற ஒரே காரணத்திற்காகத்தான்— இதைப்போல பல்வேறு மாவட்டங்களிலும் இந்த நிலை நீடிப்பதை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, அரசுக்கு வரவேண்டிய வருவாய் ஒரு சில தனி நபர்களுக்குச் செல்வதை தடுக்கின்ற முகமாகத்தான் இந்தப் புதிய மதுவிலக்குக் கொள்கையை அரசு அறிமுகப்படுத்தியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 நிதிநிலை அறிக்கையின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் இப்போது படிக்க விரும்புகிறேன். 'கடந்த தி.மு.க. ஆட்சி காலத்தில் அரசின் கவனக் குறைவின் காரணமாக மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுக்கு உரிமம் வழங்குவதில் இருந்த குறைபாடுகளையும் மற்றும் போலி மதுப் புழக்கத்தினால் அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பினையும் சரி செய்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு எடுத்த பல்வேறு உன்னதமான நடவடிக்கைகளின் மூலம் எந்த ஆண்டிலும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு 2,058 கோடி ரூபாய் ஆயத்தீர்வை மூலமாக வருவாய் கிடைத்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. ஆட்சியில் சென்ற ஆண்டு கிடைத்த ஆயத்தீர்வை வருவாயை விட 190 கோடி ரூபாய் அதிகம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்'. ஆக, நீங்கள் கடைப்பிடித்த கொள்கையினால், சென்ற ஆண்டு இவ்வளவு ரூபாய் வருமானம்



ஈட்டியிருக்கின்றபோது இந்த ஆண்டு அதற்குள்ளாக அதை மாற்ற வேண்டிய அவசியம் என்ன? அப்படி என்றால் இந்த ஆண்டு நீங்கள் செய்த தவறு...

முற்பகல் 11-25

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சென்ற ஆண்டு இந்த மதுவிலக்கு மானியக் கோரிக்கையிலே பேசும்போது, 'கடந்த ஆண்டில் ஏற்பட்ட சிலபல குறைகளைச் சரிசெய்து, அதன் பயனாகத்தான் இந்த ஆண்டு வருவாய் ஈட்டியுள்ளோம்' என்பதைத்தான் சொல்லியிருந்தேன். ஆனால், தற்போது ஏற்பட்டிருக்கின்ற ஓர் அசாதாரண சூழ்நிலையைப் பொறுத்தே இந்தப் புதிய கொள்கை அரசால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அசாதாரண சூழ்நிலை என்ன? ஓராண்டாக உங்கள் ஆட்சி நடைபெறுகிறது. குறிப்பாக இந்த ஏலம் எடுப்பதற்கு முன்பாகவே— மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிகழ்வுகள் வருகிறபோது, ஏன் இவ்வளவு குறைந்தது என்று சொன்னால், முதலிலேயே இதைக் கூட்டுறவுக் கடைகளுக்குக் கொடுக்கப் போகிறார்கள் என்று ஒரு பிரச்சினை. சில பத்திரிகைகளிலேகூட செய்திகள் எழுத ஆரம்பித்தார்கள். இதிலே ** போன்றவைகளையெல்லாம் தயாரிக்கின்ற ஒரு சூழ்நிலை உருவாகி, அவற்றையெல்லாம் வாங்கவேண்டும் என்று வற்புறுத்தியதாக சில சூழ்நிலைகள் உருவாகி—நான் சொல்வது தவறாகக்கூட இருக்கலாம்...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரமில்லாத குற்றச்சாட்டை இந்த அவையிலே கூறிக்கொண்டிருக்கிறார்கள். அதை அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, பத்திரிகைச் செய்திகளைச் சொல்லும்போது என்னிடம் காட்டிவிட்டுத்தான் சொல்லவேண்டும்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அந்த மாதிரி குறிப்பிட்ட மதுபானங்களை எந்தச் சூழ்நிலையிலும், எப்போதும், யாரும் வாங்கவேண்டுமென்று எந்தவிதமான குறிப்பும், ஆணையும் அரசின் சார்பாக வெளியிடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குச் சுட்டிக்காட்ட வேண்டுமென்ற கடமை உணர்வோடு சுட்டிக்காட்டியிருக்கிறேன். அது தேவையில்லையென்று சொன்னால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, தாங்கள் குறிப்பிட்ட அந்தப் பெயர்கள் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன.

**டாக்டர் க. பொன்முடி:** எனவே, அதைக்கூட இவர்கள் ஆய்வுசெய்து— அவர்களேகூட, தனியாரேகூட lobby பண்ணி இதை நிறுத்தியிருக்கலாம். அதுபோன்ற சூழ்நிலைகள் உருவாகியிருக்கலாம். அதையும்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளலாம். ஆகவே, பொதுவாக தனியார் மது விற்பது என்பது ஒரு போட்டியை உருவாக்குவதற்காக சில கோ-ஆப்பரேட்டிவ்களிலே கொடுத்து, அவற்றை சரிப்படுத்த வேண்டுமென்பதற்காகக்கூட அது சரியாக இருக்கலாம். ஆனால், முழுமையாக அரசாங்கமே எடுத்து நடத்துகிறபோது...

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஏதோ இந்த அரசு புதியதாக ஒன்றைச் செய்திருப்பதைப்போல மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார். 1989-90 ஆம் ஆண்டில் தி.மு.க. அரசு ஆட்சியில் இருந்தபோது, மதுபான விற்பனையில் தவறான வணிகக் கூட்டணிகளை முறியடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அப்போது என்ன செய்யப்பட்டது? இந்தத் தவறான வணிகக் கூட்டணிகளை முறியடிக்க, விற்கப்படாத மதுபானக் கடைகள், TASMAC தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டன. அந்த ஆண்டு மொத்தம் 3,369 கடைகளில், 2,428 கடைகள் தனியார்களிடம்





செயல்பட்டன. இவைபோக, 457 கடைகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், 334 கடைகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமும் மற்றும் 150 கடைகள் TASMAC நிறுவனத்திடமும் ஒப்படைக்கப்பட்டன. ஆகவே, இந்தத் தவறான வணிகக் கூட்டணிகளை முறியடிக்க பொதுத் துறை நிறுவனங்கள் அல்லது கூட்டுறவுச் சங்கங்களிடம் சில்லறை விற்பனையை ஒப்படைப்பது என்பது ஏற்கெனவே கையாளப்பட்டுள்ள நடைமுறையாகும்.

தற்போது இந்த அரசு துணிச்சலாக, தனியார் தவறான வணிகக் கூட்டணிகளை ஒட்டுமொத்தமாகக் களைய, TASMAC நிறுவனம் மற்றும் அதனுடைய முகமை அமைப்புகளான கூட்டுறவுச் சங்கங்களை மட்டுமே சில்லறை விற்பனையில் ஈடுபடுத்துவது என்று முடிவு செய்துள்ளது. இது மாபெரும் சீர்திருத்த நடவடிக்கையாகும். இதனால் மதுபான விற்பனையில் ஏற்படும் தவறுகளை முழுமையாகக் களைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நடைமுறைப்படுத்துகிறபோதுகூட பல்வேறு சிக்கல்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அதனால்தான் முன்பே சுட்டிக்காட்டினேன். கூட்டுறவுத் துறைகள் மூலமாக விற்கப்படுகிறபோது கள்ளத்தனமாக விற்கிற முயற்சிகள் மேற்கொள்ளப்படும். நிச்சயமாக....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, TASMAC மூலமாகவும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் ஒட்டுமொத்தமாக இந்த retail விற்பனை செய்வது என்பது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. வருவதற்கு முன்பாகவே இந்தக் குறைகள் ஏற்படும், அந்தக் குறைகள் ஏற்படும் என்று எப்படிச் சொல்ல முடியும்? கள்ளச் சாராயம் அல்லது கள்ள மதுபானம் விற்கப்படும் என்று சொன்னால், தனியார்களிடம் இருக்கின்ற கடைகளில்தான் இத்தகைய தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்தத் தவறுகளைக் களைய வேண்டுமென்றுதான் இன்றைக்கு அரசாங்கம் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எண்ணித் துணிக கருமம்' என்பது வள்ளுவனுடைய வாக்கு. எதையுமே செய்துவிட்டு, அதிலே [illegible] வந்ததற்குப் பிறகு செய்ய வேண்டுமென்ற அவசியம் அல்ல. [illegible]gical-ஆக think

185384
சென்னை-600 009

பண்ணலாம். செய்தால் என்ன தவறுகள் ஏற்படும் என்பதை யோசிப்பதிலே, நாங்கள் கருத்துகளைச் சொல்வதிலே எந்தத் தவறும் இருக்கமுடியாது. அப்படித்தான் நாங்கள் 'பிளாஸ்டிக்'-ஐக்கூட சுட்டிக்காட்டினோம். நீங்கள் உடனே ஆய்வுக் குழுவிற்கு அனுப்பினீர்கள் அந்த மாதிரிதான் இதையும் சொல்கிறோம். அப்புறம் 6 மாதத்திற்கு ஒரு தடவை, அடுத்த நிதிநிலைக்கு ஒரு தடவை மாற்றிக் கொண்டே இருக்க முடியாது. இதற்கு ஒரு நிரந்தரமான கொள்கை தேவை அதனால் நமக்கு ஏற்பட்டிருக்கிற கடந்த கால அனுபவங்களை வைத்துக்கூட, பின்னால் எப்படி இருக்க வேண்டும் என்று எண்ணிச் செய்வது என்பது ஒரு logical thinking. அதிலே தவறு இருக்க முடியாது அதைத்தான் நான் சுட்டிக்காட்டுகிறேனே தவிர, இப்பொழுதுதான் செய்யப் போகிறோம்...

முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கருத்தைச் சுருக்கமாகச் சொல்லி முடித்துவிடுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மதுபானக் கடைகளில் கள்ளத்தனமாக மதுபானங்கள் வைத்து விற்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். இவர்களது ஆட்சியில்— (குறுக்கீடு) சரி, குற்றச்சாட்டு அல்ல; நடக்கும் என்று சொல்கிறார். நடக்கும் என்ற எதிர்பார்ப்பில் சொல்கிறார். ஆனால், இவர்கள் ஆட்சியில் இருந்த நேரத்தில், கூட்டுறவு மதுபானக் கடைகளும் இருந்தன. அப்போது இவர்கள் கள்ளத்தனமாக அந்த மதுபானங்களை அங்கே கொண்டு வந்து விற்றார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் நான் சொன்னதைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லையென்றால் நான் என்ன செய்ய முடியும்? கூட்டுறவுத் துறையிலே விற்பார்கள் என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலிருந்தே அனுபவம் பேசுகிறது என்று நாம் கொள்ள வேண்டும் என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**டாக்டர் க. பொன்முடி:****

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு பொன்முடி சொன்னதற்கு என்ன அர்த்தம் என்று எனக்குப் புரியவில்லை. விளக்கமாகச் சொல்ல வேண்டும்.

**டாக்டர் க. பொன்முடி:** நீங்கள் என்ன அர்த்தத்தில் சொன்னீர்களோ அதே அர்த்தத்தில்தான் நானும் சொன்னேன். நானும் தனிப்பட்ட முறையில் சொல்லவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தனிப்பட்ட முறையில் சொல்லவில்லை. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மதுபானக் கடைகளை நடத்தியபோது, அப்போது இத்தகைய முறைகேடுகள் நடைபெற்றனவா என்று மாண்புமிகு அமைச்சர் இங்கே கேட்டார். அதைப் பொறுத்துத்தான் நான் அனுபவம் என்று சொன்னேனே தவிர, தனிப்பட்ட முறையில் நான் பேசவில்லை.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் தனிப்பட்ட முறையிலே தயவுசெய்து பேசவே இல்லை. அவர்களும் அமைச்சராக இருந்திருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. பொன்முடி, உங்கள் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை **. என்று நீங்கள் பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னது அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது. பொன்முடி ** என்று தாங்கள் பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நான் இன்னொரு முறையும் சொல்கிறேன். இதைப் பற்றிய சட்டமுன்வடிவுவேறு ஆய்வுக்கு வருகிறது. ஆக, அப்பொழுதும்கூட பேசுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இன்னும் மற்ற கட்சித் தலைவர்களும் பேச வேண்டும். உங்களுடைய கருத்து என்ன என்பதைச் சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் மூலமாக இப்படி விற்கப்படும் என்று சொன்னால், நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொன்னது,

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[டாக்டர் க. பொன்முடி] [2003 நவம்பர் 5

கூட்டுறவுத் துறையின் மூலமாக கள்ளத்தனமாக விற்பார்கள் என்று நான் சொல்லவில்லை. மற்ற இடங்களிலே கள்ளத்தனமாக இவற்றை விற்பதற்கான வாய்ப்புகள் அதிகம் இதிலே ஏற்படும் என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முதலில் நான் சொன்னதும் அதுதான். ஆகவே, அதுபோன்று மேலும் பல திருட்டுத்தனமான கடைகள் வளர்வதற்கு இது வாய்ப்புகளை அளித்துவிடக்கூடாது.

இன்னொன்று, நீங்கள் TASMAC கடைகளை உருவாக்கும் என்று சொல்கிறீர்கள். அது, தனியாகக் கடைகளை உருவாக்குமா? இருக்கிற கூட்டுறவுக் கடைகளின் மூலமாக அவர்கள் விற்பனை செய்வார்களா? TASMAC supply செய்வதிலே என்ன பிரச்சினைகள் இருக்கின்றன? ஆக, புதியதாக கடைகளை உருவாக்கப் போகிறார்களா? இப்போது இருக்கிற கூட்டுறவுக் கடைகளை வைத்தே, இதன்மூலமாக நீங்கள் இந்தப் பொருட்களை விற்பனைக்குக் கொண்டுவரப் போகிறீர்களா என்பதையும் இதிலே தெளிவுபட சொல்ல வேண்டும். அடுத்து,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உரையை முடித்துவிடுங்கள். திரு. ஞானசேகரன். (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது தெளிவாகக் கூறினார்கள். 1998-99 வாக்கிலேயே, இந்த மதுக்கடைகளை நீங்கள் நடைமுறைக்குக் கொண்டுவந்தபோது, சிண்டிகேட் ஃபார்ம் செய்யப்பட்டு, அதனால் அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதனை எடுத்துச் சொன்னார்கள். ஆனால், 1998-99, 2000ஆம் ஆண்டு வரையிலும் உங்கள் ஆட்சிக் காலத்தில், அப்படி அவர்கள் சிண்டிகேட் ஏற்படுத்தி, அரசுக்கு இழப்பை ஏற்படுத்திய போதிலும், நீங்கள் நடவடிக்கை எடுக்காமல் இருந்துவிட்டீர்கள். தற்போது எங்களது ஆட்சி வந்த பிறகு அந்த சிண்டிகேட்டைத் தொடர்ந்தார்கள். அந்த சிண்டிகேட் தொடர்ந்த காரணத்தால் அரசுக்கு இழப்பு ஏற்பட்டது. நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அரசுக்கு இழப்பை உருவாக்குகிற சிண்டிகேட்மீது உங்கள் ஆட்சிக் காலத்தில் நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லையே, ஏன்? அந்த சிண்டிகேட் உங்கள் கட்சிக்கு தொடர்புடைய சிண்டிகேட்டா? உங்களுக்கு அதில் ஆதாயம் இருந்த காரணத்தால் நடவடிக்கை எடுக்கவில்லையா என்ற பிரச்சினை எழுகிறது. தற்போது இப்படி அரசுக்கு நூற்றுக்கணக்கான கோடி நட்டம் உருவாக்கக்கூடிய சிண்டிகேட் உருவாகி,



2003 நவம்பர் 5] [திரு. சி. பொன்னையன்]

ஒட்டுமொத்தமாக 3,858 கடைகள் எடுக்கப்படாத ஒரு நிலையை இந்த சிண்டிகேட் உருவாக்கி இருக்கிறது. பல நூறு கோடி ரூபாய் அரசுக்கு இழப்பை ஏற்படுத்தும் சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறது. அப்படி உருவாக்கி இருக்கிற சிண்டிகேட்டை நீங்கள் ஆதரிக்கின்ற மர்மம் என்ன? அரசுத் துறைக் கடைகள் வேண்டாம் என்று சொல்கிறீர்கள். கூட்டுறவுத் துறைக் கடை வேண்டாம் என்று சொல்கிறீர்கள். சிண்டிகேட்டை ஏற்படுத்தி, அரசுக்கு இழப்பை ஏற்படுத்துகிற அந்தத் தனியாருக்கும் உங்களுக்கும் ஏதோ தொடர்பு இருக்கிற காரணத்தால்தானே நீங்கள் அந்த சிண்டிகேட்டை வேண்டும் என்று கேட்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்திருக்கிற தகவலெல்லாம் ** கூட்டுறவுக்கே கொண்டு சென்றிருக்கிறார்கள் என்பதுதான்.

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பொன்முடி உரையை முடித்துவிடுங்கள். திரு. ஞானசேகரன். (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் மிகத் தெளிவாக கூறப்பட்டிருக்கிறது. அரசே கடைகளை எடுத்து நடத்துகிறது. அரசினுடைய அமைப்புகள் எடுத்து நடத்துகின்றன. சிண்டிகேட் ஃபார்ம் செய்தது தி.மு.க. ஆட்சிக் காலத்தில்; ஆதாரத்தை முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த சிண்டிகேட்டிற்கு, தனியார்த் துறைக்கு நீங்கள் ஆதரவு தெரிவிக்கின்ற மர்மம் என்ன என்றுதான் கேட்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்முடி அவர்கள் இறுதியில் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி பேசியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) அமைச்சர் கேட்டதற்கு நீங்கள் விளக்கம் சொல்லலாம்; அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) ** என்று பொன்முடி சொன்ன அந்தக் குற்றச்சாட்டு என்பது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. பேராசிரியர் அவர்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2003 நவம்பர் 5

**•பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஆரோக்கியமான விவாதத்தை நடத்துகிற நேரத்தில், சிண்டிகேட் என்பது ஏதோ நிரந்தரமான ஓர் அமைப்பு என்பதைப் போலவும், அந்த சிண்டிகேட் என்பது குறிப்பிட்ட 10, 20 பேர் மட்டுமே இருப்பதைப் போலவும், அந்த சிண்டிகேட்டோடு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஏதோ தொடர்பு இருப்பதைப் போலவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். Syndicate is not a permanent body. சிண்டிகேட் என்பது அங்கங்கே 4 பேர் சேர்ந்துகொள்வது. இந்த அமைச்சரவையே permanent ஆக இல்லாத போது, ஒரு கட்சித் தலைமையே பல நேரத்தில் permanent ஆக இல்லாதபோது, சிண்டிகேட் என்பது தொழில் முறையிலே அவ்வப்போது, 4 பேர், 10 பேர் சேர்ந்து அவரவர்களுக்கு உள்ள வசதிகளுக்கு ஏற்ப ஏற்பாடு செய்துகொள்கிற கூட்டந்தான். அதில் என்றைக்கும் தி.மு.க.-விற்கோ அல்லது அ.தி.மு.க.-விற்கோகூட நேரடி தொடர்பு இருக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன்.

**டாக்டர் க. பொன்முடி:** தலைவர் அவர்களே...

**திரு. இ. புகழேந்தி:** தலைவர் அவர்களே.....

**திரு. பரிதி இளம்வழுதி:** தலைவர் அவர்களே...

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துக் கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) முடித்துக் கொள்ளுங்கள். வேண்டாம். (குறுக்கீடுகள்) வேண்டாம். (குறுக்கீடுகள்) இல்லை. அதற்கு விளக்கம் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) இல்லை. அதற்கு விளக்கம் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், அவருக்கு தேவைக்கு அதிகமான நேரம் கொடுக்கப்பட்டுவிட்டது. தாங்கள் அவருக்கு வக்காலத்து வாங்குவது முறையற்றது. (குறுக்கீடுகள்) ஞானசேகரன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன், பேசுங்கள் (குறுக்கீடுகள்) இப்போது திரு. ஞானசேகரனைப் பேச அழைக்கிறேன். திரு. ஞானசேகரன் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுபானக் கடைகளை... (குறுக்கீடுகள்)



2003 நவம்பர் 5]

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் ஒன்றும் இல்லை. ஞானசேகரன் பேசுங்கள். (குறுக்கீடுகள்) ஞானசேகரன் பேசுங்கள்..

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**டாக்டர் க. பொன்முடி:** ஒரு விளக்கத்தைச் சொல்லிவிடுகிறேன்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குப் பேராசிரியர் அவர்கள் சொன்ன விளக்கம் போதுமானது. அதோடு முடித்துக் கொள்ளுங்கள் (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) ஞானசேகரன், பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுபானக் கடைகளை இப்போது கூட்டுறவுக் கடைகள் மூலமாக நடத்துவது என்று அரசு முடிவு எடுத்து, அதற்காக ஒரு சட்டமுன்வடிவையும் தாங்கள் அவையிலே அறிமுகப்படுத்தியிருக்கிறீர்கள். உண்மையிலேயே, காங்கிரஸ் பேரியக்கத்திற்கு இதுபோன்று மதுபானக் கடைகளை...

**டாக்டர் க. பொன்முடி:** அமைச்சர் அவர்கள் சொன்னதையும் அவைக்குறிப்பிலிருந்து எடுங்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் சொன்னதற்கும், அமைச்சர் அவர்கள் சொன்னதற்கும், பேராசிரியர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். முடிந்தது. திரு. ஞானசேகரன், பேச்சைத் தொடருங்கள். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், உங்கள் பேச்சைத் தொடருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுபானக் கடைகளை.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், பேச்சைத் தொடருங்கள். இல்லாவிட்டால் நான் அடுத்த உறுப்பினரை அழைப்பேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 1991-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டு முதலமைச்சராக முதன்முதலாக வந்து, அவர்கள் போட்ட கையெழுத்து, மலிவு விலைச் சாராயக் கடைகளை மூடுவதற்காக போட்டதாகும். அப்போது நாங்கள் எல்லாம் அவரைப் பாராட்டினோம். தொடர்ந்து இதே அவையிலே நானும், எங்களுடைய இயக்கமும் சொல்வது, பூரண மதுவிலக்கை தமிழகத்திலே கொண்டு வந்துவிட்டால் இப்படிப்பட்ட பிரச்சினைக்கே இடமில்லை. இதிலே 3,000 கோடி அல்லது 4,000 கோடி ரூபாய்க்காக இன்று அதனை தனியார் நடத்துவதா அல்லது கூட்டுறவாளர்கள் நடத்துவதா என்றெல்லாம் பிரச்சினைகள் வந்து கொண்டு இருக்கின்றன. யார் குடித்தாலும், தமிழ்நாட்டு குடிமகன் குடித்து, அவனுடைய குடும்பம் சீரழியக்கூடிய ஒரு நிலை வருகிறது. குடிதான் பல குற்றங்களுக்கு, crime-களுக்கு அதுதான் ஒரு basis-ஆக அமைகிற காரணத்தினாலே, என்னுடைய கருத்தாக பூரண மதுவிலக்கை கொண்டு வந்துவிட்டால், இந்தப் பிரச்சினைக்கே இடமில்லையென்கிற கருத்தை இங்கே ஆணித்தரமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இதுபோன்ற கடைகளை நடத்துகிறபோது, சிண்டிகேட் பற்றி மாண்புமிகு பேராசிரியர் அவர்கள்கூட இங்கே குறிப்பிட்டார்கள். இதே அவையிலேகூட சொல்லியிருக்கிறேன். பலபேர், குறிப்பாக சென்னையிலே நிறைய பேர் அப்போது இந்த சிண்டிகேட் போட்டவர்களை உடனடியாக குண்டர் சட்டத்தில் கைது செய்ய வேண்டுமென்றுகூட நான் இந்த அவையிலே கூறியிருக்கிறேன். அந்த அளவிற்கு பல பேர் இதிலே கட்சி வித்தியாசம் இல்லாமல் எல்லோருமே ஒன்றாகச் சேர்ந்துகொண்டு, இப்படி இவர்கள் கடைகளை சூரையாடுகிற ஒரு நிலை இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஆகவே, இவற்றையெல்லாம் போக்க வேண்டுமென்று சொன்னால், இதிலே உங்களுடைய பாலிசிகூட ஒரு ஸ்டாண்டர்டாக இருக்க வேண்டும். முதலிலே குலுக்கல் முறையிலே எடுப்பதைக் கொண்டு வந்தார்கள். பிறகு இப்போது அதுவும் சரியில்லை என்று சொல்லி பிறகு தனியாக ஒரு இண்டர்வியூ மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டு merit அடிப்படையிலே கொடுப்பது என்று சொன்னீர்கள். பிறகு அதுவும் success ஆகவில்லை என்ற காரணத்தினாலே அடுத்து இப்போது கூட்டுறவுக் கடைகளுக்கு அதைக் கொடுத்து விடுவதாக அரசாங்கம் வைத்து இருக்கிறது. ஒன்றை மட்டும் இந்த அரசாங்கம் தெளிவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



கூட்டுறவு சொசைட்டிகளுக்கு நீங்கள் கொடுப்பது என்று சொன்னால், இந்த syndicate form பண்ணுகின்ற ஆசாமிகளே மிக வல்லுநர்கள். ரொம்ப திறமைசாலிகள். அவர்கள் வந்து, ஒரு 7 பேர் ஒன்றாக சேர்ந்தால் ஒரு சொசைட்டியை form பண்ணி விடலாம், Society Act பிரகாரம். அப்படி யாராவது புதிதாக இப்படி இதிலே, இந்தத் துறையிலே வல்லுநராக இருக்கிறவர்கள் இவர்களும் சிண்டிகேட் முறையிலே ஒரு சொசைட்டியை, இப்பொழுது இதற்குமேலே அவர்கள் சொசைட்டியை form செய்துவிட்டு, அந்த சொசைட்டி மூலமாகக் கடை நடத்துவோம் என்று கேட்டால், பிறகு அதே சிண்டிகேட்தான் மீண்டும் தமிழகத்திலே கொடி கட்டிப் பறக்கக்கூடிய ஒரு நிலை வரும். ஆகவே, இவற்றையெல்லாம் நீங்கள் தடுக்க வேண்டும். ஏற்கெனவே நீங்கள் முடிவு செய்துவிட்டு இருந்தால், கூட்டுறவுக் கடைகள்தான் நடத்தவேண்டுமென்று சொன்னால்— ஏற்கெனவே நம்முடைய எல்லா கூட்டுறவுக் கடைகள் மூலமாக இப்பொழுது ரேஷன் கடைகளை நடத்திக்கொண்டு இருக்கிறீர்கள்—அப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கோ அல்லது TASMAC-குக்கோ அப்படி கொடுத்துவிட்டால்கூட பிரச்சினை வரும். கள்ளச்சாராயம் இதெல்லாம் நிறைய இப்போதும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. நாளைக்கு இதுபோல கள்ளத்தனமாக போலி மது பாட்டில்கள் இந்தக் கூட்டுறவுக் கடைகளில் வருகிறது என்று சொன்னால், அதற்கும்—ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் சொல்கிறபோது, 7 மணிக்கு நீங்கள் கடையை மூடிவிட்டுப் போய்விடுவீர்கள் என்று சொன்னார்கள். 24 மணி-

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டத்தை இந்த அவையில் கொண்டு வருகிறோம். இந்தச் சட்டத்தில் பொதுவான அம்சங்கள் என்ன என்றுதான் இங்கே பேச முடியும். கடை எத்தனை மணிக்கு திறக்கும்; எத்தனை மணிக்கு மூடப்படும் என்பதெல்லாம் TASMAC அறிவிக்க வேண்டிய விஷயங்கள். இதையெல்லாம் இங்கே அமைச்சரோ, முதலமைச்சரோ சட்டசபையில் அறிவிக்க வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்ப்பது தவறு. இருப்பினும், இதே பிரச்சினையை இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பி உள்ளதால், நான் இப்போது தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் கற்பனை

செய்வதுபோல் மாலை 7 மணிக்கெல்லாம் கடைகள் மூடப்படாது. இந்தக் கடைகள் காலை 8 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை திறந்து இருக்கும். போதுமா? (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் இந்த bar-கள் எங்கே நடத்தப்படும் என்ற ஒரு கேள்வியும் இங்கே கேட்கப்பட்டது. மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும், அர்பன் ஏரியாக்களிலும் TASMAC நடத்துகின்ற கடைகளில் bar-கள் செயல்படும். ஆனால் இப்போதுகூட ஊரகப் பகுதிகளில், ரூரல் ஏரியாக்களில் bar-கள் கிடையாது. ஆகவே, ரூரல் ஏரியாக்களில் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்துகின்ற கடைகளில் bar-கள் இருக்காது.

மேலும், போலி மதுபானம் விற்றதற்காகவும், இந்த spurious liquor, seconds, contraband liquor எனப்படும் மது பானங்களை, போலி மது பானங்களை விற்றதற்காகவும், அவற்றை கடத்தல் செய்ததற்காகவும் எத்தனை காவல் துறை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன என்று மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி இங்கே கேள்வி எழுப்பினார். 2001 ஆம் ஆண்டில், spurious, seconds liquors, smuggle செய்ததற்காகவும், விற்றதற்காகவும் 2,114 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 2002 ஆம் ஆண்டில் 1,383 வழக்குகள் காவல் துறையினரால் பதிவு செய்யப்பட்டன. 2003ஆம் ஆண்டில் 30-9-2003 வரை 1,598 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆகவே, spurious liquor, seconds போன்ற போலி மதுபானங்களை கடத்தல் செய்ததற்காகவும், விற்றதற்காகவும், ஏராளமான வழக்குகளை காவல் துறையினர் பதிவு செய்திருக்கிறார்கள் என்பது இதிலிருந்து தெரிய வருகிறது. கடைகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி குறிப்பிட்டார். எத்தனை கடைகளின்மீது வழக்கு தொடரப்பட்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் இங்கே தெரிவித்தார். அந்த எண்ணிக்கை ஏன் குறைவாக இருக்கிறது? பெரும்பாலும் இந்த உரிமம் பெற்றவர்கள் shop licensee அந்தக் கடையிலேயே, அந்த வளாகத்திலேயே இந்த spurious liquor-ஐ seconds-ஐ விற்பது இல்லை. வேறு இடங்களில் அந்த விற்பனையை வைத்துக் கொள்கிறார்கள். இப்போது அதைக் களைவதற்காகத்தான் இந்த முறையை மாற்றி அமைத்து இருக்கிறோம். இப்பொழுது TASMAC இந்தக் கடைகளை நடத்த உள்ளதால், மேலும் TASMAC-இன் ஏஜெண்டுகளாக கோ-ஆப்பரேட்டிவ் சொசைட்டீஸ் இந்தக் கடைகளை நடத்த உள்ளதால், இத்தகைய போலி மதுபானங்கள் விற்கப்படுவதை



முற்றிலுமாகத் தடை செய்ய முடியும் என்று இந்த அரசு உறுதியாக நம்புகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஞானசேகரன் அவர்கள் கேட்டது, புதிதாகத் துவக்கப்படுகின்ற கூட்டுறவுகளுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்களுக்கு லைசன்ஸ் வழங்கக்கூடாது என்று சொன்னார்கள். நீங்கள் எந்தத் தேதியிலே அறிவிப்பு வெளியிட்டீர்களோ அதற்கு முன்னரே அந்தத் தேதியை நிர்ணயித்து, அதற்குப் பின்னர் துவக்கப்பட்ட எந்தக் கடைக்கும், எந்தக் கூட்டுறவுக்கும் இந்த மதுபானக் கடைகளைக் கொடுக்க முடியாது; கொடுக்கப்பட மாட்டாது என்ற உறுதிமொழியைத் தரவேண்டும்.

முற்பகல் 11-45

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புதிதாகக் கூட்டுறவு நிறுவனங்களை ஏற்படுத்தி, அவற்றின் மூலமாக மதுபானக் கடைகளை எடுக்கமுடியுமா என்ற வினாவை எழுப்பியிருக்கிறார்கள். ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கிற கூட்டுறவு நிறுவனங்களுக்குத்தான் இந்த மதுபானக் கடைகள் அனுமதி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள் சொல்கிறபோது, 7 மணிவரை என்றால் போதாது என்று சொன்னபோது, 24 மணி நேரக் கடையாக மாற்றி விடவேண்டாம் என்று சொல்ல வந்த என்னுடைய கருத்தை, இடையிலே நம்முடைய முதலமைச்சர் எழுந்து 'போதுமா?' என்றார்கள். 12 மணி வரை நீட்டிப்பதை நான் நிச்சயமாக வேண்டாம் என்றுதான் சொல்வேன். மூடுங்கள் என்றுதான் முதலிலே சொல்வேன். காரணம், ஏதோ நீங்கள், 'போதுமா?' என்று கேட்டால், நானும் ஒரு குடிகாரன் என்ற ஒரு நிலைக்கு வந்துவிடும். நான் குடிப்பதே இல்லை. அப்படிப்பட்ட—(குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் குடிக்கிறார் என்று நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை. கடைகளை அதிக நேரம் திறந்து

வைத்திருந்தால், அரசுக்கு அதிக வருவாய் கிடைக்கும் என்ற நல்ல எண்ணத்தில் அந்தக் கேள்வியைக் கேட்டார் என்றுதான் நான் எடுத்துக்கொண்டேன். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரவு 12 மணி வரை, கடைகளைத் திறந்து வைத்திருப்பார்களேயானால், குடிமகனுடைய அட்டகாசம் அதிகரித்துவிடும். (சிரிப்பு) குறிப்பாக, பெண்கள், சினிமாவுக்கோ அல்லது பொழுதுபோக்கிற்காகவோ எங்கேயும் செல்ல முடியாத நிலை ஏற்படும். எனவே, 12 மணி என்பது மிக அதிகம். கண்டிப்பாக அதுவரை அனுமதிக்கக் கூடாது. அதிகபட்சம் 10 மணிவரை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கடைகளும், bar-களும், 11 மணி வரை செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும் ஒரு மணி நேரம் நீட்டிக்கிறோம், அவ்வளவுதான்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அந்த 11 மணி வரை, 12 மணி வரை என்பதைவிட, பேசாமல் 6 மணியோடு வேண்டுமானால் நிறுத்திவிடுங்கள். இருட்டினாலே, கொஞ்சம் பயமாக இருக்கிறது. காரணம், எல்லா இடங்களிலேயும், பொதுவாக பள்ளி, அல்லது...(குறுக்கீடு) 9 மணி வரை வைக்கலாம் என்று சொல்கிறார் எங்கள் மாண்புமிகு தலைவர் அவர்கள். ஆகவே, நீங்கள் எப்படியாவது நேரத்தைக் குறைத்து, பொதுவாக பள்ளி, இதுபோன்ற இடங்களிலே அதிகமாக கடை வந்துவிடுகிறது. பெண்கள் நடமாடக்கூடிய பகுதி, கோயில் இதுபோன்ற பகுதிகளிலே இப்படிப்பட்ட கடைகள் வராமல் கொஞ்சம் ஒதுக்குப்புறமாக இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை நீங்கள் உருவாக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய மதுக் கொள்கையின்மீது, நம்முடைய அரசாங்கம் ஒரு கொள்கை முடிவு எடுத்திருப்பதாக அறிவிப்பதிலிருந்தே, இந்த மதுக் கொள்கையிலே அரசுக்கு மிகப் பெரிய தடுமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தடுமாற்றத்திற்குப் பல்வேறு காரணங்கள் சொல்லப்பட்டாலும்கூட, பாட்டாளி மக்கள் கட்சியைப்



பொறுத்தவரையிலே சொல்வது, மதுக் கடைகளே கூடாது. பூரண மதுவிலக்கைக் கட்டாயம் அமலாக்க வேண்டும் என்ற நிலையிலே இருந்து கொண்டிருக்கிறோம்.

இதை இங்கே குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், தனியாருக்குக் கொடுப்பதனாலே அரசுக்கு வரக்கூடிய வருவாய் இழப்பு ஏற்படுகிறது; சிண்டிகேட் அமைக்கப்படுகிறது என்ற பல்வேறு காரணங்கள் சொன்னாலும்கூட, இந்தக் காரணத்தைச் சொல்லிவிட்டு, நகரங்களிலே இருந்து பிராந்திக் கடைகளை மீண்டும் கிராமப்புறங்களுக்கு அதிக எண்ணிக்கையிலே நீங்கள் நிறுவ இருப்பது, மிகப் பெரிய வேதனையாகவே நாங்கள் கருதுகிறோம். இந்த வேதனைக்குக் காரணம் என்று சொல்கிற நேரத்திலே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 1991-இலே முதலமைச்சராக இருந்த நேரத்திலே, பெண்களின் கண்ணீரைத் துடைக்க முதல் கையொப்பம் இடுகிறேன் என்று சொல்லி, ஓர் உத்தரவைப் பிறப்பித்தார்கள். அதற்குக் காரணம், கிராமப்புறங்களிலே விவசாயிகள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் எல்லாம் குடித்துவிட்டு, குடும்பங்களை வீணடிக்கிறார்கள்; பெண்கள் எல்லாம் சீரழிந்து கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தைச் சொன்னார்கள். ஆனால், அந்த நிலைக்கு மாறாக இன்று மீண்டும் கிராமப்புறங்களுக்கு இந்த மதுக் கடைகள் செல்கின்றன என்று சொன்னால், அன்று கள்ளச் சாராயம் இருந்தது; இன்று கலர் சாராயம் வருகிறது, கிராமப்புறங்களுக்கு. அப்படியானால் கள்ளச் சாராயத்திற்கும், கலர் சாராயத்திற்கும் என்ன வித்தியாசம்? கிராமப்புறங்களிலே இருக்கக்கூடியவர்களை மீண்டும் குடிப் பழக்கத்திற்கு ஆளாக்கக்கூடிய வகையிலே, தூண்டக்கூடிய வகையிலே, இது அமையும். அதோடு கிராமப்புறப் பொருளாதாரத்தை முழுவதுமாக சீரழித்துவிடும். கிராமத்திலே இருக்கக்கூடிய பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் மிகப் பெரிய பாதிப்பை உண்டாக்கும். ஆகவே, இந்த மதுக் கொள்கையிலே அரசு ஒரு தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும். கிராமப்புறங்களிலே கடைகளே நிச்சயமாக வரக்கூடாது.

முற்பகல் 11-50

நகரம் என்று சொன்னால், நகரத்திலேகூட தேவையில்லை. இருந்தாலும், இப்போதுகூட அங்கு காவல் நிலையம் இருக்கிறது. குடித்தவர்கள் காவல் நிலையத்தைப் பார்த்து அல்லது மற்ற

அதிகாரிகளைப் பார்த்து பயந்து ஒதுங்கிச் செல்லும் நிலை இருக்கிறது. கிராமப்புறத்திலே குடித்துவிட்டு, கள்ளச்சாராயத்தைக் குடித்துவிட்டு கும்மாளம் அடிக்கிறார்கள். அதனால் அவர்கள் அங்கீகரிக்கப்பட்ட நிலையிலே குடித்துவிட்டு பல்வேறு பிரச்சினைகளைக் கிளப்புவார்கள். கிராமப்புறங்களிலே சட்டம்-ஒழுங்கு கெடுவதற்கு அது வாய்ப்பாக அமைந்துவிடும். ஆக எந்த வகையிலே எடுத்துக்கொண்டாலும்கூட இந்த மதுபானக் கடைகளை நிச்சயமாக கொண்டுவரக் கூடாது. கிராமப்புறங்களில் திறக்கக் கூடாது என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

இப்படி வருமானம் என்று சொன்னால்— அரசு வருமானத்திற்காக சொல்கிறது. இப்போது I.M.F.L.-ஐ தனியார்களுக்கு கொடுத்து மதுபானங்களை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதன்மூலமாக அந்தத் தனியாருக்கு உற்பத்தி செய்ய கொடுப்பதை விடுத்து, கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு கொடுப்போம் என்று சொன்னால், அரசாங்கத்திற்கு கூடுதலான வருவாய் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, தனியாரை ஒழித்துவிட்டு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடைகளை கொடுக்கக்கூடிய அரசு, தனியார் உற்பத்தி ஆலையை தடுத்து, கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு கொடுப்பதிலே என்ன தயக்கம்? ஏன் கொண்டுவரக்கூடாது? அதனுடைய மூலப்பொருள் மொலாசஸ். மொலாசஸ் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலே கிடைக்கிறது. இப்போதுகூட கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலே நிறைய அதிகாரிகள் சொல்கிறார்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, மது விற்பனையில் அரசு எடுத்துள்ள முடிவின் நிலை குறித்துத்தான் இது. அதனாலே அதைப்பற்றி நீங்கள் சொல்லுங்கள்; மற்றவை பற்றி விவாதம் வரக்கூடிய நேரத்தில் பேசலாம்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, மது பானம் என்ற காரணத்தினாலே, இலாப நோக்கத்திற்காக அரசு இதைச் செய்கிறது. இலாப நோக்கம் என்றால், அதுவும் அரசாங்கம் தானே? உற்பத்தி செய்வது எங்கே?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உற்பத்தி என்பது வேறு; விற்பனை என்பது வேறு. உற்பத்தியில் எந்தப் பிரச்சினையும் எழவில்லை. விற்பனையில்தான் பிரச்சினை எழுந்துள்ளது. ஆகவேதான் அரசு விற்பனையை மேற்கொண்டுள்ளது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுகுறித்து சொல்ல வேண்டியதை மட்டும் சொல்லி முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உற்பத்தியில் இருந்துதான் விற்பனைக்கு வருகிறது. அரசுக்கு இலாபம் வர வேண்டும் என்ற நோக்கத்தோடு சொல்கிறேன்; வேறு காரணத்திற்காக அல்ல. கிராமப்புறங்களிலே அல்லது நகரங்களிலே கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுப்பதனாலே அரசாங்கத்திற்கு வருமானம் என்று சொல்கிறீர்கள். அதே வருமானம் உற்பத்தியிலும் இருக்கிறது; அதைச் சொல்கிறேன்; வேறு ஒன்றுமில்லை.

இப்போது நகரங்களிலேகூட 11 மணிக்கு மேலே ஹோட்டல்களே திறந்திருக்கக்கூடாது என்று சொல்கிறார்கள்; காவல் துறை துரத்துகிறது. இரவு 11 மணி, 11½ மணிக்கு பஸ்ஸை விட்டு இறங்கி சாப்பிடப் போனால், ஹோட்டல்கள் கிடையாது; போலீஸ்காரர்கள் தடி எடுத்துக்கொண்டு துரத்துகிறார்கள். ஆகவே, இரவில் சாப்பிடுவதற்கு, டீ குடிப்பதற்குக்கூட அனுமதி இல்லாத நம்முடைய மாநிலத்திலே, குடிப் பழக்கம் இருக்கிறது என்று சொன்னால், குடிப்பதற்கு 12 மணிக்கு செல்கிறார்கள் என்று சொன்னால், பெண்களும் மற்றவர்களும் இரவு நேரங்களில் நடமாடவே முடியாது. மீண்டும் சட்டம்-ஒழுங்கு, திருட்டு இப்படி பல்வேறு பிரச்சினைகள் எழுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. 12 மணி என்பது நிச்சயமாகக் கூடாது. 12 மணி மாத்திரமல்ல, மதுபானக் கடைகளை கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுக்கக் கூடாது; இது மேலும் பிரச்சினைகளை கிளப்பும். இது, நாம் அங்கீகாரத்தோடு மக்களை குடிப்பதற்குத் தூண்டுவதாகவே அமையும். குடி, குடியைக் கெடுக்கும்; கிராமப் பொருளாதாரத்தைச் சீரழிக்கும்; குடும்பங்களைக் கெடுக்கும். ஆகவே, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இந்த மதுக் கடைகள் திறப்பதிலே புதிய மதுக் கொள்கையை கடுமையாக எதிர்த்து, ஆட்சேபித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக அரசு மதுபானக் கடைகளை எடுத்து கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக நடத்துவதைப்பற்றி பேசுகின்ற நேரத்தில், எங்களைப் பொறுத்தளவிலே, தனியார் இலாபம் பெறுவதைக் காட்டிலும் அரசுத் துறைகளிலே அத்தனை காரியங்களும் நடப்பதுதான் சிறந்தது என்று கருதுகின்றவர்கள். பொதுவாக அரசுத் துறைகளிலே பல்வேறு சர்க்கரை

ஆலைகள், பஞ்சாலைகள், போக்குவரத்துக் கழகங்கள் போன்றவை எல்லாம் நஷ்டத்திலே இயங்குகின்ற நேரத்திலேகூட, அந்த நஷ்டத்தை ஈடு கட்டி அரசே எடுத்து நடத்த வேண்டும்; தனியாருக்கு அவை எல்லாம் கொடுக்கப்படக் கூடாது என்ற கொள்கையைத்தான் இங்கு எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்கள் எல்லாம் பல நேரங்களிலே பேசுகின்ற நிலையை நான் கேட்டு இருக்கிறேன். ஆனால், இதைப் பொறுத்தளவில் மட்டும், அரசு எடுத்து நடத்துவதிலே சில சர்ச்சைகள் இங்கு எழுப்பப்பட்டு இருக்கின்றன.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

இருந்தாலும் அரசினுடைய எண்ணம் இதன் மூலமாக அரசுக்கு மிகுந்த வருவாய் பெற வேண்டும்; அரசு செய்கின்ற நலத் திட்டங்கள் எல்லாம் அந்த வருவாய்மூலம் பயன்பெற வேண்டும் என்கின்ற நிலையிலேதான் அரசு இதை எடுத்து கூட்டுறவுக் கடைகளின் மூலமாக விற்பனை செய்ய வேண்டும் என்கின்ற முடிவுக்கு வந்திருக்கிறது. இப்போது அரசு எடுத்துக்கொண்டு இருக்கின்ற இந்த மணல் விநியோகத்தைப்பற்றி இன்றைக்குப் பத்திரிகையில்கூட நான் பார்த்தேன். ஏறக்குறைய ஓர் ஆண்டிற்கு வருகிற வருமானம் ஒரு மாதத்திற்குள்ளாகவே அந்த மணல் விற்பனையின் மூலமாக அரசுக்குக் கிடைத்து இருக்கிறது. ஒரு வருடத்திற்கு ஏறக்குறைய 500 கோடி ரூபாய் அளவிற்கு அதிலே வருமானம் கிடைக்கப்பெறும் என்று பல்வேறு பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன.

*முற்பகல் 11-55*

அதுபோல இதன்மூலமும் வருவாய் அரசுக்கு வரவேண்டும். அதன்மூலமாக அரசினுடைய நிதிநிலைமை உயர வேண்டும் என்பதிலே மாறுபட்ட கருத்து அல்ல.

இங்கு குறிப்பிட்டதுபோல இந்தக் குடிமக்களால் பெரிதும் பாதிக்கப்படுகிறவர்கள் எங்களைப்போன்ற அரசியல்வாதிகள்தான், மக்கள் பிரதிநிதிகள்தான். அவர்களோடு ஈடுகொடுக்க முடியாமல் சிலநேரங்களிலே துன்பப்படுகிறோம். ஆகவே, அது இருக்கக்கூடாது என்கின்ற நிலை இருந்தாலும், பல்வேறு மாநிலங்களிலும் அது இருக்கின்றபோது, தமிழகத்திலே மட்டும் இல்லாத நிலை இருக்குமேயானால், அது எந்தவித பயனும் ஏற்படுத்துவதாக இருக்காது என்கின்ற முறையில், அரசுக்கு வருமானம் சேர்க்கின்ற அளவிலே,



இதை எடுத்து நடத்துவதிலே எந்தவித மாறுபட்ட கருத்தும் இல்லை. இருந்தாலும் இந்த மதுக் கடைகளை நடத்துகின்ற நேரத்தில் அதிலும் பல்வேறு தவறுகள் நேர்ந்து விடாத அளவிற்கு, அந்தக் கூட்டுறவுக் கடைகளை ஒழுக்கமாக, நேர்மையாக நடத்துகின்ற ஒரு நிலையை, அதை மிக விழிப்போடு கண்காணிக்கின்ற ஒரு நிலையை அரசு ஏற்படுத்த வேண்டும்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

அதோடு, இந்த மாதிரி கூட்டுறவுக் கடைகள் வருகிறபோது பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுகின்ற நிலையைக்கூட அரசு ஏற்படுத்துமேயானால், படித்துவிட்டு வேலையில்லாது இருக்கிற இளைஞர்களுக்கு அது பயனுள்ளதாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்கிறேன். இதன்மூலமாக ஈட்டுகின்ற வருவாயின்மூலமாக பல்வேறு சர்க்கரை ஆலைகள், பஞ்சாலைகள் எல்லாம், அரசுத் துறையில் எடுத்து நடத்துகின்றவை நலிந்து இருக்கின்றன. அவற்றையெல்லாம் மீண்டும் சீர்செய்வதற்குக்கூட இந்த...

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் படித்து விட்டு வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கலாம் என்று தெரிவித்தார். அதை ஏற்கெனவே இந்த அரசு பரிசீலித்து இருக்கிறது. TASMAC-க்கும், கூட்டுறவுச் சங்கங்களும் நடத்தவுள்ள கடைகளில், படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர்கள், கிட்டத்தட்ட 22,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இதனால் பல்வேறு இளைஞர்கள் பயன்பெறுகின்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்கிற மகிழ்ச்சியில் இதை அரசே ஏற்று நடத்துவதற்கு நாங்கள் மனப்பூர்வமாக எங்களுடைய ஒத்துழைப்பை நல்குகிறோம் என்று கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

2002-2003 ஆம் ஆண்டில், 7,000 கடைகள் அறிவிக்கப்பட்ட போதிலும், உள்ளபடி 5,300 கடைகள் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டன. தவறான வணிகக் கூட்டணிகள் ஏற்படுத்தப்பட்டு, அவை சில்லறை விற்பனையைக் கட்டுப்படுத்துவதை, குலுக்கல் முறை, முதலாம் ஆண்டில் ஓரளவு தடுத்தது. ஆனால், இந்தக் கூட்டணிகள் 2002-2003ஆம் ஆண்டில் குலுக்கல் முறைக்கு சிக்கல் ஏற்படுத்தும் வகையில் தீவிரமாக இருந்தன. பல்வேறு தவறான வணிகக் கூட்டணிகள் ஏற்படுத்தப்பட்டு, பல்வேறு வகைகளில் அந்தக் கூட்டணிகள் ஒவ்வொரு நடைமுறையையும் சீர்குலைத்து வந்ததால், தகுதி அடிப்படையில் தெரிவு செய்யும் முற்றிலும் புதியதொரு நடைமுறையைக் கொண்டுவர அரசு முடிவு செய்தது. எனவே, இத்தகைய புதிய நடைமுறையை விளக்கி 4-10-2003 அன்று விளக்கமான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. தவறான வணிகக் கூட்டணியை ஒழிக்கக்கூடிய இந்தப் புதிய நடைமுறைப்படி ஒரு விண்ணப்பதாரர் ஒரு கடைக்கு மட்டுமே உரிமம் பெறுவதற்குத் தகுதி உடையவர் ஆவார்.

ஓய்வுபெற்ற நீதிபதிகளைப் பெரும்பான்மையாகக் கொண்டு அமைக்கப்பட்ட மாவட்ட அளவிலான தேர்வுக் குழுக்கள் மூலம் தேர்வு செய்ய, குறைகள் அற்ற தேர்வு முறை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. மொத்தம் உள்ள மூன்று உறுப்பினர்களில் இரு உறுப்பினர்கள் ஓய்வுபெற்ற நீதிபதிகளாகவும், மூன்றாவது உறுப்பினர் ஆயத்தீர்வைத் துறையின் உதவி ஆணையராகவும் இருப்பார்கள். இவ்வாறு ஒரு சுதந்திரமான தேர்வு முறை அமைக்கப்பட்டது. வெளிப்படையாகவும், மேல்முறையீட்டுக்குப் போதிய வாய்ப்பளிக்கக் கூடிய வகையிலும், மேல்முறையீடு மற்றும் சீராய்வு மனுக்களை முடிவு செய்ய முறையே, இரண்டு ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதிகள் அடங்கிய மண்டல அளவிலான மேல்முறையீட்டு ஆணையம் மற்றும் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியைக் கொண்ட சீராய்வு ஆணையம் ஆகியவை ஏற்படுத்தப்பட்டன. ஆனால் கடைகளின் உரிமதாரர்கள் பலர், அரசின் இந்த முற்போக்கான கொள்கையினை எதிர்த்து, உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தும், கடைகளுக்குப் போதிய விண்ணப்பங்கள் சமர்ப்பிக்காமலும் எப்படியாவது இந்த முற்போக்கான திட்டத்தினை முறியடித்துவிட வேண்டும் என்ற நோக்குடன் செயல்பட்டனர்.





பிற்பகல் 12-05

35,099 விண்ணப்பங்கள் விற்கப்பட்ட போதிலும், அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட கால அட்டவணைப்படி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாளான 13-10-2003 அன்று முடிய மிகக் குறைவான எண்ணிக்கையில், அதாவது 962 கடைகளுக்கு மட்டுமே பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான காலத்தை 22-10-2003 வரை நீட்டித்து அரசு ஆணையிட்ட போதிலும், அந்த நாள் வரை சுமார் 3,858 கடைகளுக்கு விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படாத நிலையே நிலவியது. அதாவது 45 சதவீதக் கடைகளுக்கு ஒரு விண்ணப்பமும் பெறப்படவில்லை. தற்பொழுதுள்ள சில்லறை விற்பனைச் சந்தையின்மீது தங்களின் ஆதிக்கத்தைச் செலுத்தும் வகையில் தற்போதைய உரிமதாரர்கள் சிலர், தவறான வணிகக் கூட்டணிகள் மூலம் விண்ணப்பதாரர்கள் உரிய எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதைத் தடுத்து, கூட்டணிகள் மூலம் சில்லறைச் சந்தையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற குறிப்பிட்ட நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றன என்பதும், அதன்மூலம் தவறான வணிக நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, நியாயமான போட்டியை ஏற்படுத்த அரசு மேற்கொள்ளும் முயற்சிகளை முறியடிப்பதற்காக அவை தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றன என்பதும் இதிலிருந்து தெளிவாகிறது.

விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையை மேம்படுத்தவும், வணிகக் கூட்டணிகளின் செயல்பாடுகளைத் தடுத்து தவறான நடவடிக்கைகளை ஒடுக்கவும், அரசு தொடர் முயற்சிகளை எடுத்து வந்த போதிலும், தவறான வணிகக் கூட்டணிகளின் முறைகேடுகளும், சீர்குலைவு நடவடிக்கைகளும் தொடர்ந்தன. போலி மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுபான வகைகள் உரிமம் வழங்கப்பட்ட கடைகளிலேயே உரிமதாரர்களால் விற்பனை செய்யப்படும் நிகழ்வுகளும், அரசால் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விற்பனை விலைக்கும் கூடுதலாக விற்பனை செய்யப்படும் நிகழ்வுகளும் நடைபெற்றுள்ளன. இவை நுகர்வோர் நலனுக்கு எதிரான செயல்கள் ஆகும்.

சில்லறை விற்பனையைப் பாதித்து, அரசுக்கு வருவாய் இழப்பினை ஏற்படுத்தும் தவறான வணிகக் கூட்டணிகளைத் தடுக்க ஓர் உறுதியான நடவடிக்கை எடுப்பதைத் தவிர அரசுக்கு வேறு வழி இல்லை. ஆகவே,

தனியார் மதுபான சில்லறை விற்பனையை முடிவுக்குக் கொண்டுவந்து, அரசு நிறுவனமான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு, அதாவது TASMAC-கிற்கு மதுபான சில்லறை விற்பனைக்கான தனி உரிமையை exclusive rights வழங்கும் ஒரு துணிச்சலான முடிவை இந்த அரசு எடுத்தது.

மது அருந்தும் பொதுமக்களின் நலன் முழுமையாகப் பாதுகாக்கப்படுவதையும், ஆயத்தீர்வை செலுத்தப்படாத மது விற்பனை முழுமையாகத் தடுக்கப்படுவதையும், பாதுகாப்பான மதுபான வகைகள் விற்கப்படுவதையும் உறுதி செய்யும்பொருட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நகர்ப்புறங்களில் TASMAC நிறுவனம் சில்லறை விற்பனையை நேரடியாக மேற்கொள்ளும். கள்ளச்சாராயம் மற்றும் போலி மது வகைகள் ஆகியவற்றிற்கு இரையாகும் தொலைதூரக் கிராமங்கள் உட்பட, கிராமங்களில் TASMAC நிறுவனத்தின் முகமை அமைப்புகளாக கூட்டுறவு அமைப்புகள் சில்லறை விற்பனைக் கடைகளை நடத்தும். மதுபான சில்லறை விற்பனையில் அரசுக்குக் கிடைக்கும் வருவாயைப் பாதிக்கும்வகையில் செயல்படும் தவறான வணிகக் கூட்டணிகள், இந்தத் துணிச்சலான நடவடிக்கையின்மூலம் ஒழிக்கப்பட்டு விடுவதால், அரசுக்குக் கூடுதல் வருவாயினைத் தேடித் தரும் திட்டமாக இந்தத் திட்டம் அமையும் என்று இந்த அரசு நம்புகிறது.

இவ்வாறு சில்லறை மதுபானக் கடைகளை அரசே ஏற்று நடத்துகின்ற முடிவுக்கு வருவதற்கு முன்பு, என்னென்ன நடவடிக்கைகள் அரசால் எடுக்கப்பட்டிருக்கின்றன என்னும் விவரங்களைத் தெளிவாக இந்த அவைக்கு நான் எடுத்துரைத்திருக்கிறேன். இந்த நடவடிக்கைகளுக்கு எல்லாம் அடிப்படைக் காரணம் ஒன்றே ஒன்றுதான். அரசை ஏமாற்ற நினைப்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களது சுயநல முயற்சிகளை சுக்குநூறாக்கி, அரசுக்கு வரவேண்டிய வருவாயைப் பெற்றுத் தருவது ஒன்றே இந்த நடவடிக்கைகள் அனைத்துக்கும் அடிப்படைக் காரணம்.

அதோடு, பொதுமக்கள் நலனைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், பொறுப்புள்ள இந்த அரசுக்கு உண்டு. எனவேதான், ஒவ்வொரு முயற்சியாக மேற்கொண்டு விட்டு, இறுதியில் இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம். இது புரட்சிகரமான முடிவு. இந்த மகத்தான முடிவைப் பாராட்ட மனம் இல்லாத மஞ்சள்காமாலைக்காரர்களின்



கண்களுக்கு, மது விற்பனைக் கொள்கை தள்ளாடுவதாகத் தெரிகிறது. தள்ளாட்டமும், தடுமாற்றமும் தமிழக அரசியலில் யாருக்கு இருக்கிறது என்பதை நாட்டு மக்களே நன்கு அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-10*

'அதனோடு சேரலாமா, இதனோடு சேரலாமா என்று தள்ளாட்டம்! அப்படிச் சேர்ந்துவிட்டால் இருப்பது போய்விடுமே என்ற தடுமாற்றம்' (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட ஒருவர் சொல்கிறார். மதுவிற்பனைக் கொள்கையே தடுமாறிக் கொண்டிருக்கிறதாம். உண்மையைச் சொல்லப்போனால் மதுவைக் கொண்டு வந்து, தமிழகத்து இளைஞர்களைத் தள்ளாட விட்டவரே அவர்தான்! (மேசையைத் தட்டும் ஒலி) அவர் பேசுகிறார், தள்ளாட்டம் பற்றி. இன்னொரு பேருண்மையும் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தாலும் எவருக்கும் எளிதில் புரியும். அவர் தமிழக இளைஞர்களை மட்டுமா தள்ளாட விட்டார்? தமிழகத்தின் நிதி நிலைமையையே தள்ளாட விட்டார்! (மேசையைத் தட்டும் ஒலி)

அவரது ஆட்சிக் காலத்தில் தமிழக அரசின் நிதி நிலைமை தள்ளாடி, தள்ளாடி, நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்கிறபோது, கோமாவிலே சாய்ந்து கிடந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளால், கோமாவிலே கிடந்த நிதி நிலைக்குப் புத்துயிர் அளித்து நான் நடமாட விட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, தள்ளாட்டத்தைத் தடுத்து நிறுத்துகிற அரசுதான் இந்த அரசே ஒழிய, இது தள்ளாட வைக்கிற அரசு அல்ல என்பதை அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இது எல்லோருக்கும் விளங்கும். ஆனால், 'குழப்பத்துக்கு மேல் குழப்பமாக இருக்கிறது' என்று கூறுகிறாரே ஒருவர், அவருக்கு விளங்காது. (மேசையைத் தட்டும் ஒலி)

அவ்வாறு குழப்பத்துக்கு மேல் குழப்பமாக இருந்தால் தள்ளாட்டம் வரத்தான் செய்யும் என்பதை இந்த நேரத்தில் அவைக்குத் தெரிவித்துக்கொண்டு, இறுதியில் ஒரே ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்களும் பேசுகின்றபோது, இந்த மதுக் கடைகளைத் திறந்து வைப்பதால் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்படும் என்றார்கள். ஏற்கெனவே தனியார்களால் நடத்தப்படுகின்ற மதுக் கடைகள் திறந்துதான் இருக்கின்றன. இன்று வரை செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. ஆகவே, இன்றையதினம் சட்டம்-ஒழுங்கு மிக நல்ல முறையில் பேணிப் பாதுகாக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றது. அதைப்போலவே இன்னும் சிறப்பாக சட்டம்-ஒழுங்கு பாதுகாக்கப்படும் என்ற உறுதியை உங்களுக்கு இந்த நேரத்தில் நான் அளிக்கிறேன்.

சென்னை போன்ற பெரும் மாநகராட்சிகளிலும், இதர மாநகரங்களிலும், பெரிய நகரங்களிலும் காவல் துறையினர் இரவு நேரங்களில் ரோந்துப் பணியை மேற்கொண்டிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நவீனக் கருவிகள் பொருத்திய புதிய வாகனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இன்றையதினம் சென்னை மாநகராட்சியில்கூட, இரவு நேரங்களில் சட்டம்-ஒழுங்கு மிக நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்று அனைவரும் கூறுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊரகப் பகுதிகளைப் பொறுத்தவரையில் இப்போது Highway Patrol Scheme என்னும் ரோந்துக் குழுக்கள் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். சென்னை மாநகரத்தில் இரவு நேரங்களில் ரோந்துப் பணி மேற்கொள்ளப்படுகிறது. பெரிய நகரங்களில், இரவு நேரங்களில் ரோந்துப் பணி மேற்கொள்ளப்படுகிறது. ஆனால், நம் மாநிலத்தில் இருக்கின்ற நெடுஞ்சாலைகள் 80 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, இந்த நெடுஞ்சாலைகளில் 24 மணி நேரமும் ரோந்துப் பணி நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. ஆகவே, எந்தக் காரணத்திற்காகவும் சட்டம் ஒழுங்கு கெட நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என்ற உறுதியை அளித்துவிட்டு நான் அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஆ) பொது விநியோகக் குடும்ப அட்டை பெறத் தகுதியுடையோர்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது விநியோகக் குடும்ப அட்டை வழங்குவதில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து, ஒத்திவைப்புத் தீர்மானமாக மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் க. பொன்முடி, எ.வ. வேலு, இ. புகழேந்தி, எஸ்.ஏ.எம். உசேன், ப. ரங்கநாதன், இரா. திருமாவளவன், மு. அப்பாவு, ஜி.கே. மணி, வை. சிவபுண்ணியம்,





வே. கிருஷ்ணமூர்த்தி, சோ. இராசேந்திரன், பரிதி இளம்வழுதி ஆகியோரும், சிறப்புக் கவன ஈர்ப்பாக திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், கே.சி. கருணாகரன், என். நன்மாறன், செல்வி க. பாலபாரதி, கே. மகேந்திரன், லா. சந்தானம், ஜி. பழனிசாமி, ப. அரசன் ஆகியோரும், கவன ஈர்ப்பாக திரு. சி. ஞானசேகரன் அவர்களும் அறிவிப்புகளைக் கொடுத்துள்ளார்கள். இவற்றைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாகப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு. எ.வ. வேலு.

***திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோக அட்டை வழங்குவதிலே ஒரு பெரிய குழப்பம் இன்று தமிழகத்திலே நிலவிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக எங்களுடைய ஆட்சியிலும் சரி, அதனைத் தொடர்ந்தும் சரி, 1 கோடியே 60 இலட்சம் பேர்கள் பொது விநியோகத்தின் மூலம் அரிசி பெற்றுக் கொண்டிருந்தார்கள்.

பிற்பகல் 12-15

அதனைத் தொடர்ந்து ஆண்டிப்பட்டி தேர்தலிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்த பின்பு இதே மாமன்றத்திலே அவர்கள் குறிப்பிட்டார்கள். பொது விநியோகத்தைப் பொறுத்த அளவிற்கு விலைகளை நாங்கள் ஏற்றமாட்டோம்; ஒரு கிலோ அரிசி 3½ ரூபாய்க்குக் கொடுக்கிறோம்; யார் யார் எல்லாம் இந்த அரிசியை, பயனாளிகள் பெற்றார்களோ, அவர்கள் தொடர்ந்து பெறுவார்கள் என்கிற ஓர் உத்தரவாதத்தை இதே மாமன்றத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். பிறகு ஒரு கோடியே 60 இலட்சம் பேருக்கு, இந்த ஏழைகளுக்கு இதெல்லாம் கிடைக்கும் என்றுதான் தமிழ்நாட்டிலே இருப்பவர்கள் எல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், சென்ற ஆண்டு புதியதாக அரிசி கூப்பன்களை நாங்கள் வழங்குகிறோம்; தவறான வழிமுறைகளை நாங்கள் கட்டுப்படுத்துகிறோம் என்று சொல்லி, சுமார் ஒரு கோடியே பத்து இலட்சம் பேருக்கு அரிசி வழங்குவதாகக் கூப்பன் அளித்தார்கள். அதற்கு அடுத்தபடியாக இப்போது எடுத்திருக்கிற கணக்கு என்னவென்று சொன்னால், மாத வருமானம் ஐந்தாயிரத்திற்கு மேலே உள்ளவர்களுக்கு எல்லாம் 'எச்' முத்திரை, கௌரவ அட்டை என்று சொல்லி இந்தச் சமுதாயத்திலே அவர்கள் கௌரவமானவர்கள் என்று இதற்கு...

[2003 நவம்பர் 5

*மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினர் அவர்கள் கௌரவ அட்டையைப் பற்றி எடுத்துச் சொல்கிறார்கள். அதுமாத்திரம் அல்ல. இங்கே குடும்ப அட்டைகள் எல்லாம் குறைக்கப்பட்டிருப்பதாக எல்லாம் அவையிலே எடுத்துச்சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்லிய கூற்றிற்கு நான் விடையளிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்னால், எப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இந்தப் பொது விநியோகத் திட்டத்திலே இருந்தன என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்திடல் வேண்டும். இப்போது சீர்திருத்த நல்முடிவுகள் எல்லாம் எடுக்கப்பட்டதற்குப் பின்னாலேதான் இன்றைக்கு பொது விநியோகத் திட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, 'எச்' முத்திரை பெறுகிறவர்கள் எல்லாம் யாரும் வலுக்கட்டாயப்படுத்தப்படவில்லை என்பதை அவருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். விருப்பம் உள்ளவர்கள் அவர்களாகவே வந்துதான் பெற்றுக்கொள்கிறார்கள் என்பதை நான் தெரிவித்து அமர்கிறேன்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட தேதியைச் சொல்லி, இந்தத் தேதிக்குள் அந்த 'எச்' முத்திரையைப் பெற்றுவிட வேண்டும் என்று அரசு அறிவித்து, பத்திரிகைகளிலே வந்து, அந்தக் குறிப்பிட்ட தேதியிலே அவர்கள் லைனிலே நின்று 'எச்' முத்திரை பெற்றது, படம் எல்லாம் பார்த்திருக்கலாம். ஐந்தாயிரம் ரூபாய் வருமானம் உள்ளவர்கள், மாத வருமானம் ஐந்தாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டவர்கள் எல்லாம் 'எச்' முத்திரை பெற்று அவர்கள் எல்லாம் கௌரவமாகிவிடுகிறார்கள். அப்படிப் பார்க்கிறபோதுகூட, அது 20 இலட்சம் பேர்தான்-அரசாங்கக் கணக்கில், பத்திரிகைகளில் வந்தது பிரகாரம் 'எச்' முத்திரை பெற்றது 20 இலட்சம் பேர். ஆகவே, ஏற்கெனவே அரிசி கூப்பன் பெற்றவர்கள் ஒரு இலட்சத்து 14 ஆயிரம் பேர். மீதியுள்ளது 26 இலட்சம் என்ன ஆனது என்றே தெரியவில்லை. இது ஒருபுறம். இந்த ஐந்தாயிரம், ஒரு மாத வருமானம் என்று எடுத்துக்கொண்டால் சாதாரணமாக, சென்னையைப் பொறுத்த அளவிற்கு துப்புரவுத் தொழிலாளிகள் கூட ஐந்தாயிரம் ரூபாய் இன்றைக்கு மாதச் சம்பளம்



2003 நவம்பர் 5] [திரு. எ.வ. வேலு]

பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, துப்புரவுத் தொழிலாளிகள்கூட கௌரவ அட்டை பெற்று கௌரவமாகி விடுகிறார்கள். கிராமத்திலே எடுத்துக்கொண்டால், நிலைமை என்னவென்று சொன்னால் என்னுடைய தொகுதியில் என்னுடைய பகுதி, கிராமப் பகுதி. அங்கே ஒரு கொத்தனாருடைய சம்பளம் 120 ரூபாய்; அவருடைய மனைவி கூலி வேலைக்குப் போகிறபோது, 60 ரூபாய்; ஆக 180 ரூபாய் அந்தக் குடும்பத்திற்கு ஒரு நாளைக்கு வருமானம் வருகிறது. நிலம் இல்லை; சொத்து இல்லை; குடிசையில் வசிப்பவர்கள். ஆக 180X30-ஐப் பெருக்குகிறபோது 5,400 ரூபாய் அதிலே அவர்களுக்கு வருகிறது. ஆக, அந்தக் கொத்தனார் குடும்பம்கூட இன்றைக்கு கௌரவ அட்டை வாங்கிக்கொண்டு அவர்கள் கௌரவமாகிவிடுகிறார்கள், உங்களுடைய கூற்றுப் பிரகாரம். ஆக, ஐந்தாயிரம் வருமானம் என்கிற இந்த..

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேலு திரும்பத் திரும்ப இந்த 'எச்' முத்திரை குத்தப்படுவதைச் சுட்டிக்காட்டி, அவர்கள் எல்லாம் கௌரவமாகி விடுகிறார்கள், கௌரவமாகி விடுகிறார்கள் என்று திரும்பத் திரும்ப அந்த 'எச்' முத்திரைக்கான பொருள் என்ன என்பதைப் புரிந்துகொள்ளாமல் பேசிக்கொண்டே போகிறார்.

'எச்' முத்திரை எதற்காகக் குத்தப்படுகிறது? 'Honorary' என்பதற்காக, அவர்கள் கௌரவமாகி விட்டார்கள் என்று பொருள் அல்ல. அந்த Card 'எச்' முத்திரை குத்தப்பட்ட Card, வெறும் கௌரவ Card, Honorary Card. அதை வைத்துக்கொண்டு அரிசியைப் பெறமுடியாது என்பதுதான் பொருள் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் சொன்னதைத்தான் நான் திரும்பவும் சொல்கிறேன். ஏன் என்று சொன்னால், 'எச்' முத்திரை பெற்றுவிட்டால், அவர்கள் அரிசி வாங்கமுடியாது. எனவே, அவர்கள் கௌரவ குடும்பமாகி விடுகிறார்கள். எப்படி அரிசி பெற முடியும்? ஒரு கொத்தனார்— 120 ரூபாய் சம்பளம் வாங்குகிற ஒரு கொத்தனாருக்கு கிராமத்திலே ஐந்தாயிரம் ரூபாய்க்கு மேல் ஆகிவிடுகிறது, மாத வருமானம். அவர்களுக்கு அரிசி கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் இதே மாமன்றத்திலே சொன்னார்கள். யார் யார் எல்லாம் அரிசி பெறுகிறார்களோ அவர்கள் எல்லாம் தொடர்ந்து அரிசி பெறுவார்கள் என்று சென்ற நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு முதலமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-20*

இந்த 5,000 ரூபாய்க்கு மேலே சம்பளம் உள்ளவர்கள் எப்படி வெளியே அரிசி வாங்கமுடியும்? இன்றைக்கு அரிசியினுடைய நிலை என்ன? நல்ல அரிசி வாங்க வேண்டும் என்று சொன்னால், ஒரு கிலோவினுடைய விலை 16 ரூபாய். ஆக, இந்த 5,000 ரூபாய் வருமானம் உள்ளவர்கள் யாராக இருந்தாலும்—அதுதான் சொன்னேன் சென்னையைப் பொறுத்த அளவிற்கும் துப்புரவுத் தொழிலாளிகள்கூட 5 ஆயிரம் ரூபாய் சம்பளம் பெறுகிறார்கள். எனவே, அவர்கள் 'எச்' முத்திரை பெற்றுவிட்டால் அரிசி வாங்க முடியாது. 16 ரூபாய்க்குத் தான் அரிசி வாங்க வேண்டும். கிராமப்புறத்திலே கொத்தனார் வேலை செய்கிறவர்கள், குடிசை போட்டு இருக்கிற கொத்தனார்களுக்குக் கூட 5 ஆயிரம் ரூபாய்க்கு மேலே வருமானம் வருகிறபோது அவர்களும் அந்த நிலையிலே போகிற ஒரு நிலை இருக்கிறது என்பதை இந்த அரசுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 6 பேர் பேச வேண்டும்.

**திரு. எ.வ. வேலு:** இல்லை, இல்லை. இது ஒரு பொதுப் பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏற்கெனவே சொன்னதையே மறுபடியும், மறுபடியும் சொல்கிறீர்கள்.

**திரு. எ.வ. வேலு:** எல்லோருக்கும் தொகுதியிலே இருக்கிற பிரச்சினை தான். இது ஒன்றும் குற்றச்சாட்டு இல்லையே? இருக்கின்ற நிலைகளைச் சொல்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஏற்கெனவே சொன்னதையே மறுபடியும் சொல்கிறீர்கள்.

**திரு. எ.வ. வேலு:** இல்லை, இது ஒரு பொதுப் பிரச்சினை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேலு அவர்கள் திரும்பத் திரும்ப சிலர் புரிகின்ற தொழிலைப் பற்றிக் குறிப்பிட்டு இங்கே பேசிக் கொண்டிருக்கிறார். ஒருவர் கொத்தனார் வேலை செய்தாலும், துப்புரவுத் தொழில் செய்தாலும் அதைப்பற்றி இந்த அரசு எந்தவிதமான கருத்தையும் சொல்லவில்லை. அதை நாங்கள் இழிவாக நின்னக்கவும் இல்லை. யார் எந்தத் தொழிலை



வேண்டுமானாலும் செய்யலாம். அதற்கும் இந்தத் திட்டத்திற்கும் சம்பந்தம் இல்லை. பொதுவாக அரசு என்ன கருதுகிறது என்று சொன்னால், 5 ஆயிரம் ரூபாய்க்கு மேல் மாத வருமானம் உள்ளவர்களுக்கு வெளிச் சந்தையில் அரிசியை வாங்குகிற சக்தி இருக்கிறது. ஆகவே, ஒருவர் கொத்தனார் வேலை செய்கிறாரா, துப்புரவுத் தொழில் புரிகிறாரா என்பது முக்கியம் அல்ல. அவருக்கு வெளிச் சந்தையில் விலை கொடுத்து அரிசி வாங்குகிற சக்தி இருக்கிறதா, என்பதைத்தான் பார்க்க வேண்டும். அதைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற விலைவாசிகளைப் பார்க்கிறபோது 5 ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிற குடும்பத்திலே அரிசி வெளி மார்க்கெட்டிலே வாங்கி குடும்பம் நடத்துகிற நிலை இல்லை. இந்த அரசாங்கத்தின்மீது உள்நோக்கத்தோடு எதையோ சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. சமுதாயத்திலே இந்த அமைப்பிலே இருக்கிறவர்கள், மேல் தட்டிலே இருப்பவர்கள் வீட்டிலே பார்த்தால் ஒரு பையன், 2 பையன்தான் இருப்பான், வாரிசு என்று சொல்லி. ஆனால், இந்த ஏழை வீட்டில் அவர்களுக்கு வேறு வேலையும் இல்லை, அதனால் பார்த்தால் அவன் வீட்டில் 5 பையன்கள், 6 பையன்கள் இருப்பார்கள். எனவே, இதுபோன்ற சமுதாயத்திலே ஏழைகள் வீட்டில்தான் அதிகமான எண்ணிக்கையில் உள்ளவர்கள் இருக்கிறார்கள். அப்படி இருக்கிறபோது அந்தக் குடும்பத்தினுடைய தலைவனுடைய வருமானம் 5 ஆயிரத்திற்கு மேலே போகிறபோது அந்த ஏழைக் குடும்பத்திலே இருக்கின்ற 5 பேர் அல்லது 6 பேர், தாய் தந்தையரோடு வாழ்ந்து கொண்டிருக்கிற குடும்பம் எப்படிப் பிழைக்க முடியும், அந்த அரிசியைப் பெறாமல் என்பதை இந்த அரசு எண்ணிப் பார்க்க வேண்டும்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேலு அவர்கள், தவறான ஒரு பிரச்சாரத்தையே இங்கே செய்து கொண்டிருக்கிறார் என்று நான் கூற விரும்புகிறேன். காரணம், ஒரு குடும்பத்திலே ஒரு கொத்தனாருக்கே 5 ஆயிரம் ரூபாய் வருகிறதென்றால், அந்த வீட்டிலே வேலை செய்யக்கூடிய நிலையிலே இருக்கிறவர்களுக்கு, இன்னும்கூட அதிகமான வருமானம் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அது வேறு. ஆனால், தற்போது இந்த 'எச்' கார்டு என்ற முறையிலே அவர்கள்

அதைப் பெறுகிறபோது ஒரு மாதத்திற்கு 20 கிலோ அரிசி; ரேஷன் மூலமாகக் கிடைக்காமல் வெளிச் சந்தையில் வாங்குகிறபோது ஒரு கிலோவிற்கு அவர் 7 ரூபாய் அல்லது 8 ரூபாய் அதிகம் கொடுக்க வேண்டிய நிலை வரும். அப்படி வருகிறபோது ஒரு 200 ரூபாய், உச்சகட்டமாக ஒரு 250 ரூபாய் அந்தக் குடும்பத்தினர் செலவு செய்ய வேண்டிய நிலை வருகிறது. 5 ஆயிரம் ரூபாய், 6 ஆயிரம் ரூபாய் வருமானம் வாங்கக்கூடியவர்கள் அல்லது 7 ஆயிரம் ரூபாய் வருமானம் வாங்கக்கூடியவர்கள் 200 ரூபாய் மாதத்திற்குச் செலவு செய்ய முடியாது என்று மாண்புமிகு உறுப்பினர் கூறி மக்களை திசைத் திருப்புகிறாரா? மக்களிடம் 200 ரூபாய், 250 ரூபாய்தான் அவர்களுக்கு ஒரு பளு வருகிறது, இதனால் 5 ஆயிரம் ரூபாய், 6 ஆயிரம் ரூபாய் வருமானம் வருகிறவர்களுக்கு அந்த 200 ரூபாய், 250 ரூபாய் கொடுக்க முடியாத நிலை ஏற்படுமா? மைய அரசு ஆணையிடுகிறது, இந்த சப்சிடியை கொடுக்கக் கூடாது என்று சொல்கிறது. B.P.L. என்ற நிலையிலே இருக்கிற — Below Poverty Line என்ற நிலையிலே இருக்கிறவர்களுக்கு மட்டும்தான் அந்த மானியச் சலுகைகள் கொடுப்பதற்கு மைய அரசு ஒத்து வருகிறது. இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் கிலோ 6 ரூபாய் என்ற நிலையில் இருக்கிறது. 10 கிலோ அரிசியைப் பாதி விலையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தந்தார்கள், எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு. (குறுக்கீடு) ஆமாம், இப்போது ரூ.3-50. ரூ.3-50 என்ற முறையிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, இந்தியத் துணைக் கண்டத்திலேயே எங்கும் இல்லாத அளவிற்கு. (குறுக்கீடு) அதுதான் அம்மா; தற்போது 20 கிலோவையும் ரூ.3-50 என்ற விலையிலே இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தந்து கொண்டிருக்கிறார்கள். ஏழை மக்கள் இதைப் பாராட்டுகிறார்கள். எனவே, மக்களைத் திசை திருப்ப வேண்டாம் என்று வேலு அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ எதிர்க்கட்சி/ஆளுங்கட்சி என்ற அடிப்படையிலே பேசுவதாக மாண்புமிகு அமைச்சர் கூறினார். நான் அப்படியெல்லாம் பேசவில்லை. ஆளுங்கட்சியில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் தொகுதியிலே ஏழைகள் இருக்கிறார்கள். அதை மையமாக வைத்துத்தான் இந்த அரசாங்கத்திற்கு எங்களுடைய ஆலோசனையாகச்





சொல்கிறோம். 10 ஆயிரம் ரூபாய் இன்றைக்கு சம்பளம் பெற்றால்கூட அவர்கள் வீட்டிலே தாய், தந்தையார் எல்லாம், அவர்கள் தினம் வேலைக்குப் போய் சம்பாதிக்கிற நிலை இருக்காது. நான்தான் ஆரம்பத்திலேயே சொன்னேன். இப்போதெல்லாம் பணக்காரர்கள், மேல் தட்டிலே இருப்பவர்கள், அவர்கள் இன்றைக்கு அறிவுபூர்வமாக ஒரு குழந்தை போதும், இரண்டு குழந்தைகள் போதும் என்கிற நிலையில் இருக்கிறார்கள். ஆனால், ஏழைகளுக்கு அந்த அளவுக்கு வரவில்லை. அவர்களுக்கு வேறு வேலையில்லை என்று சொல்லி, வீட்டிலே பார்த்தால் 5,6 குழந்தைகள் அது மாதிரி பிறந்துவிடுகிறது. அதனுடைய விளைவு என்ன ஆகிறதென்று சொன்னால், அந்தக் குடும்பத்திற்குச் செலவு அதிகமாகிறது. எனவே, அந்தப் பணம் பத்தாது. கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். அதோடுமட்டுமல்ல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளியில் பேசி முடியுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** இந்த அரசு ஓர் ஆண்டுக்கு 1,500 கோடி ரூபாய் நாங்கள் மானியமாக வழங்குகிறோம் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறது. இப்படிப் பார்க்கிறபோது, இன்றைக்கு 20 இலட்சம் கார்டுகள் 'எச்' அட்டைக்குப் போய்விட்டது. 5 ஆயிரம் ரூபாய் என்று வைத்து கணக்குப் பார்க்கிறபோது 40 ஆயிரம் பேர் அரிசி வாங்குவார்களா என்ற சந்தேகம் இருக்கிறது. அப்போது 1,500 கோடி ரூபாய் தமிழக அரசு மானியம் வழங்கப்படுகிறதே, அந்தப் பணம் எங்கே போகப் போகிறது?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய 'எச்' முத்திரை குத்தும் முறையைக் கொண்டு வந்த பிறகு, பழைய ரேஷன் கார்டுகளைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டுமென்று, அதற்குக் காலக்கெடு நிர்ணயித்த பிறகு, அந்தக் காலக்கெடு இன்னும் முடிவடையாததால், முழு விவரங்கள் இன்னும் அரசுக்கு வரவில்லை. ஆனால், இதுவரை ஏறக்குறைய 10 இலட்சம் பேர்தான் இந்த 'எச்' முத்திரையை தங்களது கார்டுகளில் குத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் கணிசமாக ரேஷன் கார்டுகளில் -- அதாவது அரிசி பெறுகின்ற கார்டுகளின் எண்ணிக்கை குறையவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போதும்கூட 3 ரூபாய் 50 காசு என்ற விலையில் ரேஷன் அரிசியை வழங்குவதால் இந்த அரசு ஏறக்குறைய

800 கோடி ரூபாய் மானியச் சுமையை ஒவ்வோர் ஆண்டும் ஏற்க வேண்டி வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, இந்த 'எச்' அட்டையைப் பொறுத்தவரையில், குறையவில்லை; அதனால் கொடுக்கப்போகிறோம் என்பது அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிற தொனியிலே தெரிகிறது. ஆனால், என்ன நிலைமை என்று சொன்னால், கிழே வருமானத்தைப் பற்றி நிர்ணயம் பண்ணுவது V.A.O. அல்லது தாசில்தார்தான், அவருக்கு என்ன வருமானம் வர வேண்டுமென்று. இரண்டு ஏக்கரா, மூன்று ஏக்கரா வைத்திருந்தால்கூட, V.A.O., உனக்கு இரண்டு ஏக்கரா, மூன்று ஏக்கரா உள்ளது; இதில் செய்கிற விவசாயத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால் ஒரு மாதத்திற்கு வருமானம் 5 ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருக்கிறது, அதனால் உனக்கு இல்லை என்கிறார்கள். ஏன் என்று சொன்னால், அந்த ரேஷன் கார்டைப் பெற வேண்டுமென்று சொன்னால்..

***மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டுகிறபடி, மத்திய அரசாங்கம் நமக்குத் தருகிற அரிசியினுடைய விலை, A.P.L. கிலோ ஒன்றுக்கு ரூ.8.30 என்ற விலையிலும், B.P.L. கிலோ ஒன்றுக்கு ரூ.5.65 என்றும் தருகிறது. அதே போன்று — A.P.L., B.P.L. என்று இரண்டாகப் பிரித்து நமக்குத் தருகிறது. ஆனால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு அதை இரண்டாகத் தரக் கூடாது என்று (குறுக்கீடு) கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற விலைக்கு வழங்குகிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேலு அவர்களுக்கு ஒன்றை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தி.மு.க. இங்கே வேண்டுமானால் எதிர்க்கட்சியாக இருக்கலாம். ஆனால், மத்தியிலே தி.மு.க., ஆளும் கட்சி. மத்தியிலே உங்களுக்கு மத்திய அமைச்சரவையிலே அமைச்சர்கள்கூட இருக்கிறார்கள். ஆகவே, மத்திய அரசு பொது விநியோக முறையில்—Public Distribution System-ன் கீழ் மாநிலங்களுக்கு அரசே வழங்குகின்ற விலையை நீங்கள் குறைக்கச் சொல்லக் கூடாதா? உங்கள் அமைச்சர்கள் மத்தியிலே முயற்சி எடுத்து அந்த விலையைக் குறைத்தால் இங்கே எல்லோருக்கும் 3.50 என்ற விலையிலேயே அரிசி





கொடுக்கலாம். இப்போது என்ன நடந்து கொண்டிருக்கிறது? மத்திய அரசு A.P.L., B.P.L. என்று இரண்டு வகையாகப் பிரித்திருக்கிறது. A.P.L. அரிசியை கிலோவுக்கு 8 ரூபாய் 15 காசு என்ற விலையில் மத்திய அரசு விற்கிறது. அந்த விலைக்கு மாநில அரசு வாங்கி, அந்த அரிசியை இங்கே 3 ரூபாய் 50 காசு என்ற விலைக்கு மானிய விலையில் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அதைப்போலவே, B.P.L. அரிசி, மத்திய அரசு கிலோவுக்கு 5 ரூபாய் 65 காசு என்று விலையை நிர்ணயித்து விற்கிறது. அந்த விலை கொடுத்து மாநில அரசு, அந்த அரிசியை வாங்கி, அதையும் இங்கே 3 ரூபாய் 50 காசு என்ற குறைந்த விலைக்குக் கொடுப்பதால்தான் இந்த மிகப் பெரிய மானியச் சுமையை மாநில அரசு ஏற்க வேண்டியிருக்கிறது. அதுதான் மாநில அரசுக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. ஆகவே, மத்திய அரசு கொடுக்கின்ற விலையைக் குறைத்துவிட்டால், மத்திய அரசே 3.50 அல்லது 2 ரூபாய் என்ற விலைக்கே குறைத்துவிட்டால் எல்லோருக்கும் நாம் மானிய விலையில் அரிசி கொடுக்க முடியும். மானிய விலை அப்போது வராது, மலிவான விலையில் அரிசி கொடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையை தட்டும் ஒலி)

**திரு. எ.வ. வேலு:** ஒரே ஒரு கருத்து. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே எங்களுக்கு பணச் சுமை இருக்கிறது என்பதை வெளிப்படுத்தினார்கள். நாங்கள்கூட ஆட்சியில் இருக்கிறபோது அதே பணச் சுமையை ஏற்றுக்கொண்டு, மூன்று ரூபாய்க்கு அரிசி கொடுத்தோம். விலையை ஒன்றும் ஏற்றவில்லையே? ஒரு கோடியே 60 இலட்சம் பேருக்கு அரிசி கொடுத்தோமே?

பிற்பகல் 12-30

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் செய்ய வேண்டிய பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளை எடுக்காததினால்தான் அரசைக் கிட்டதட்ட திவாலாகும் நிலையில் விட்டுப் போனீர்கள். அதைச் சரிசெய்கின்ற பெரும் சுமையைத்தான் நாங்கள் ஏற்றுக்கொண்டு இப்போது கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

**திரு. எ.வ. வேலு:** நாங்கள் 14 லட்சம் டன்...

***மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினர் அவர்கள் ஏதோ அவர்கள் கட்சி ஆட்சிக் கட்டிலிலே இருந்தபோது என்னென்ன நடந்தது என்பதை

எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நாங்கள் இங்கே அரசியலாக அதை பேசக்கூடாது என்றாலும், அவர்கள் இதைச் சொல்லியதற்குப் பின்னாலே— வேகன்களிலே சென்றது எல்லாம் உங்களுடைய ஆட்சி இருந்தபோதுதான் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகிறேன். அதுமாத்திரமல்ல, உங்களுடைய ஆட்சி பொறுப்பிலே இருக்கிறபோது போலியான ரேஷன் கார்டுகள் எல்லாம் மிக அதிக அளவிலே இருந்ததுதான் இந்தப் பொது விநியோக முறையிலே சீர்கேட்டை உண்டுபண்ணியது என்பதை நான் இந்த மாமன்றத்திலே பணிவோடு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்கு பின்னாலேதான், கூப்பன் திட்டத்தை அறிமுகப்படுத்தியதற்கு பின்னாலேதான், இந்தப் பொது விநியோக திட்டத்தில் சீர்திருத்தம் செய்யப்பட்டது என்பதும், ஆண்டாண்டு காலமாக இந்தப் பொது விநியோகத் துறையிலே மிகுந்த சீர்கேடு இருந்ததை மாற்றி இந்த அரசு வந்ததற்கு பின்னாலேதான் மிகச் சிறப்பான நல்நிலையை ஏற்படுத்தியது என்பதுதான் உண்மை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் வேலு தெரிவித்த சில கருத்துகளுக்கும், அவர் எழுப்பிய சில சந்தேகங்களுக்கும் நான் துறையிடமிருந்து விளக்கத்தை இப்போது பெற்றிருக்கிறேன். அதைக் கூற விரும்புகிறேன். ஒரு கொத்தனார் என்பவருக்கு ரெகுலராக மாத வருவாய் 5 ஆயிரம் என்று நிர்ணயிக்க இயலாது. ஆகவே, கொத்தனாருக்கு நிச்சயமாக 'எச்' முத்திரை குத்தப்படாது. கொத்தனார்களாகப் பணிபுரிபவர்களுக்கு தொடர்ந்து ரேஷன் அரிசி கிடைக்கும். அதைப்போலவே துப்புரவுத் தொழிலாளர்கள், கைவினைக் கலைஞர்கள், நிலமற்ற ஏழையெளிய விவசாயத் தொழிலாளர்கள் போன்றவர்கள் அனைவருக்குமே இந்த 'எச்' முத்திரை குத்தப்படாது. எப்போதும்போல் இந்த ஏழையெளிய மக்களுக்கு ரேஷன் அரிசி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா ஏதோ கூற விரும்புகிறார். (குறுக்கீடு) அவர் பேசி முடித்துவிடட்டுமே? முடித்துவிடட்டும். ஒரு நிமிடத்தில் பேச்சை முடித்துவிடுங்கள்.



**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 'எச்' முத்திரைக்கு ஒரு date போட்டு, பல பேர் 'எச்' முத்திரை வாங்கிவிட்டார்கள். சம்பளம் வாங்கியதை எல்லாம் கணக்கு பார்த்து வாங்கிவிட்டார்கள், ஒன்று. இரண்டாவது, 1,500 கோடி ரூபாய் ஏற்கெனவே, இந்தத் தமிழக அரசு அதற்காக மானியம் ஒதுக்கியது, 1 கோடியே 60 இலட்சம் பேர் இருக்கும்போது. இப்போது 1,500 கோடி ரூபாய் நீங்கள் திரும்பப் பெற்றுக் கொண்டு இந்தப் பொது விநியோகத் திட்டத்திற்குப் பணத்தை ஒதுக்கப் போவதில்லையா? எனவே, இன்றைக்கு இருக்கின்ற நிலைமை 'எச்'...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா, சொல்லுங்கள்.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புவது எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கின்ற அந்த ரேஷன் கார்டுகளில் 'எச்' முத்திரை குத்தக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் இப்போது பதவியில் இருக்கிறோம். நாளைக்கு சட்டமன்ற உறுப்பினர்களாக வரவில்லை என்றால் பென்ஷன் 5 ஆயிரம் ரூபாய்தான். 5 ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட தொகைக்கு என்று சொல்கின்ற காரணத்தினால் அந்த 'எச்' முத்திரை...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட தொகை என்று குறிப்பிடப்படவில்லை. 5 ஆயிரமும், 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட வருமானமும்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிளாரிபிகேஷன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது பேசுங்கள். திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், நீண்டதொரு விளக்கத்தை இங்கே அளித்திருக்கிறார்கள். குறிப்பாக இந்த கொத்தனார் போன்றவர்களுக்கு இப்படி குடும்ப வருமானங்களை எல்லாம் கணக்கிட்டு, அதற்கெல்லாம் 'Honorary' முத்திரை குத்தப்படாது என்கிற உறுதியை அளித்திருக்கிறார்கள். நான் ஒட்டுமொத்த தமிழக மக்கள் சார்பாக ஒரே ஒரு வேண்டுகோளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் சொல்கிற அந்தத் தொகை சில குடும்பங்களில் 3, 4 கூலித் தொழிலாளிகள் சேர்ந்து இருந்தால் அந்தக் குடும்பத்திலே அவர்கள் வருமானம் ஒன்றாக கணக்கிடப்படும் என்று சொன்னால், 5 ஆயிரம் ரூபாய் என்று வந்துவிடுகிறது. ஆகவே, அதை ஏழாயிரத்து ஐநூறு ரூபாய் என்று நிர்ணயித்து நீங்கள் அதற்கு மேல் வைத்துவிட்டால்...

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுவதைப் பார்த்தால், ஏதோ வலுக்கட்டாயமாக எல்லோரையும் அந்த அலுவலகங்களுக்கு அழைத்துச் சென்று, அவர்களது கார்டுகளில் 'எச்' முத்திரை குத்துவது போல் இங்கே பேசிக்கொண்டிருக்கிறார். அப்படியில்லை. 'எச்' முத்திரை குத்தப்படுவது என்பது ஒரு voluntary exercise. யார் எல்லாம் ரேஷன் அரிசியைப் பெற விரும்பவில்லையோ, அவர்களாகவே தங்கள் ரேஷன் கார்டுகளை உரிய அலுவலகத்திற்குச் சென்று அந்த 'எச்' முத்திரையைக் குத்திக்கொள்ளலாமே தவிர, எந்தவிதமான நிர்ப்பந்தமோ, கட்டாயமோ இதில் கிடையாது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் voluntary-யாக வந்து குத்திக்கொள்கிறார்கள்; குத்திக்கொள்கிறார்கள் என்று சொல்கிறீர்கள். நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் தவறான ஒரு தகவலைத் தந்து, ரூபாய் 5,000-க்குக்கீழ் என்று சொல்லி நீங்கள் 'எச்' கார்டு இல்லாமல் புதுப்பிக்கக்கூடிய நிலைக்குச் சென்றால், ஏழு ஆண்டுகள் சிறை என்கிற ஓர் அறிவிப்பு அவ்வப்போது மாவட்ட ஆட்சித் தலைவர்களால் எல்லா இடங்களிலும் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியதைப் போல், it is a voluntary exercise-தான். மக்கள் விரும்பினால் 'எச்' கார்டுகளை அவர்கள் பெற்றுக்கொள்ளலாம். ரேஷன் அரிசி வேண்டாம் என்று விரும்பினால் அவர்கள் மட்டும் அந்த அலுவலகத்திற்குச் சென்று குத்திக்கொள்ளலாம் என்றுதான் அரசினுடைய ஆணை; அரசினுடைய தாக்கீதுகள். ஆனால், அப்படிப் போகவில்லை என்றால், உங்களுக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை என்று சொல்வது தி.மு.க.-வைச் சேர்ந்த பத்திரிகைகள், தி.மு.க.-வைச் சேர்ந்த சில குறிப்பிட்ட பத்திரிகைகள் மக்களை அப்படி அச்சுறுத்துகின்றன. உண்மை அப்படி அல்ல.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல, இந்த 'எச்' முத்திரை குத்திக்கொள்வதற்கான கடைசி நாள், காலக்கெடு முடிந்துவிட்டது. ஆகவே, இதுவரை 10 இலட்சம் பேர் முன்வந்து, அவர்கள் தங்கள் கார்டுகளில் அந்த 'எச்' முத்திரையைக் குத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் காலக்கெடு முடிந்துவிட்டது. ஆகவே, இனிமேல் யாருக்கும் புதிதாக 'எச்' முத்திரை குத்தும் உத்தேசம் இல்லை, அதற்கான கால அவகாசமும் இல்லை; அதற்கான வாய்ப்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'எச்' முத்திரையை voluntary-ஆகக் குத்திக்கொண்டாலும்கூட, அதற்கு நீங்கள் ஒரு அடிப்படையிலே 5,000 ரூபாய் என்று வைத்திருப்பதை 7,000 ரூபாய் என்று வைத்திருந்தால், இன்னும்கூட சிலர் அடித்தளத்தில் இருக்கக்கூடிய மக்கள் இந்த வாய்ப்பை—இலவசமாக அரிசியைப் பெறக்கூடிய வாய்ப்பு அவர்களுக்கு உருவாகிறது என்ற காரணத்தினாலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதைப் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், நம்பர் 1. நம்பர் 2...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஞானசேகரன் அவர்கள் இலவசமாக அரிசியைப் பெறுவது என்று குறிப்பிட்டார். அப்படி எந்தத் திட்டமும் இல்லையே?

[2003 நவம்பர் 5

**திரு. சி. ஞானசேகரன்:** மானிய விலையில் நீங்கள் மூன்றரை ரூபாய்க்கு என்று கொடுக்கக்கூடிய அந்த 20 கிலோ அரிசியைத்தான் சொல்கிறேன். இலவசமாக என்ற வார்த்தையை நான் வாபஸ் வாங்கிக்கொள்கிறேன். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்படிப்பட்ட ஒரு சூழலை, இன்னும் அடித்தளத்தில்— ஏன் என்றால் B.P.L.-லே சரியாக நம்முடைய மாநிலத்திலே கணக்கிலே வரவில்லை. நமது Central Government-க்கும் நமக்கும் இருக்கக்கூடிய B.P.L. list-ஐப் பார்த்தீர்கள் என்று சொன்னால், அதிலே குளறுபடிகள், நம்முடைய தமிழகத்திலே இருந்துகொண்டிருக்கிறது. B.P.L.-லிலே ஒரு சரியான திட்டமே நமக்கு இன்னும் வரவில்லை. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த 7,500 ரூபாய் வருமானம் உள்ளவர்கள், அதாவது மூன்றரை ரூபாய்க்கு வேண்டுமானாலும் வாங்கலாம் ஒன்று. நம்பர் 2, அதாவது, குடும்ப அட்டையைப் புதுப்பிக்கும்போது பார்த்தீர்கள் என்று சொன்னால், இப்போது எல்லோருமே ஒரு நாள் பூராவும் காத்திருக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தத் துறைக்குச் சொல்லி இன்னும் அதிகமான ஆட்களைப் போட்டு, ஒரு குடும்பத் தலைவரோ அல்லது அந்தக் குடும்ப உறுப்பினரோ போனால், ஒரு மணி நேரத்திற்கு உள்ளாக அதைப் புதுப்பிக்கக்கூடிய பணியைச் செய்யக்கூடிய அளவிற்கு staff-களைக் கொஞ்சம் அதிகமாகப் போட்டு அதைப் புதுப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று அங்கே காலதாமதம் எதுவும் கிடையாது என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அப்படி எங்கேயாவது காலதாமதம் என்று அவர் கருதுவாரேயானால், அதைக் குறிப்பிடுவாரேயானால், அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் கஸ்பா பகுதிக்கு, நேற்று முந்தின நாள் காலையிலே சென்றவர்கள் மாலை வரை இருந்துதான் பதிவு செய்யக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டது. அதற்காகத்தான் சொல்கிறேன். குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை.

இரண்டாவது, கடந்த 2, 2½ ஆண்டுகாலமாக புதிதாக ரேஷன் அட்டை கேட்பவர்களுக்கு, அதை சென்னைக்கு அனுப்பியிருக்கிறோம்,



2003 நவம்பர் 5] [திரு. சி. ஞானசேகரன்]

லேமினேட் செய்து அந்தக் கார்டு வரவேண்டும் என்று சொல்லி, புதிதாக அங்கு கார்டே வரவில்லை. ஆகவே, நீங்கள் புதிதாகக் கணக்கெடுத்து வழங்கவேண்டும். ஏன் என்றால் புதிதாக எங்களிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு போய் கொடுக்கிறார்கள். நாங்களும் recommend பண்ணிக் கொடுக்கிறோம். ஆனால், கடந்த 2, 2½ ஆண்டுகளாக புதிய கார்டுகள் கிடைக்காமல் மக்கள் திண்டாடுகிறார்கள். போலி கார்டுகளை நீங்கள் ஒழியுங்கள்; வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், கார்டு இல்லாதவர்களுக்கு, புதிதாக அப்ளை செய்தவர்களுக்கு நீங்கள் தயவுசெய்து விரைவிலே enquiry-யை முடித்து 15 நாட்களுக்குள் அல்லது ஒரு மாத காலத்திற்குள் புதிதாக ரேஷன் கார்டு வழங்கப்படும் என்கிற நிலையை தமிழ்நாட்டு மக்களுக்கு உடனடியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்லியபடி விண்ணப்பம் செய்தவர்களுடைய விண்ணப்பங்கள் எல்லாம் பரிசீலிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்தந்த இடங்களிலே தேவையான பரிசீலனை முடிந்தவுடன் தொடர்ந்து தந்துகொண்டிருக்கிறோம். மேலும் தரவும் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) முடித்துவிட்டீர்கள் அல்லவா?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் எந்தப் பகுதியில் கொடுக்கிறீர்களோ தெரியா. என்னுடைய பகுதியிலே நாங்கள் ஏற்கெனவே பரிந்துரை செய்து கொடுத்த கார்டுகள் இரண்டு ஆண்டுகளாக வராமல் இருக்கிறது. என்னுடைய வேலூர்—அதாவது T.S.O. விடம் பார்த்தால் நாங்கள் மெட்ராஸ்-க்கு அனுப்பியிருக்கிறோம், லேமினேட் செய்து வரவேண்டும் என்று அப்படியே காலம் கடத்துகிறார்கள். ஆகவே நீங்கள் உங்களுடைய review meeting-ல் இதற்காக ஒரு முயற்சி எடுத்து, மனு வந்த ஒரு மாத காலத்திற்குள் லேமினேட் செய்து கார்டு கொடுப்பதற்கு நீங்கள் ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ரேஷன் கடையில்

வழங்கக்கூடிய பொருட்கள் எடை குறைவாகவும் இருக்கின்றன. அதை நீங்கள் தடுத்து நிறுத்துவதற்கு, உரிய எடையிலே பொருட்கள் சேர்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) திரு. கே. ஆறுமுகம். (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 'எச்' முத்திரை குத்திக்கொண்டவர்களின் எண்ணிக்கை 10 இலட்சம் என்று குறிப்பிட்டிருந்தேன். அது செப்டம்பர் இறுதி வரை கிடைத்த தகவல். அக்டோபர் இறுதி வரை 18 இலட்சம் கார்டுகளுக்கு 'எச்' முத்திரை குத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மானியக் கோரிக்கைகள் மீது.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆறுமுகம் ..... (சிரிப்பு) (குறுக்கீடு). திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கௌரவ ரேஷன் அட்டை வழங்குவதிலே இருக்கிற குறைபாடுகளை எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். சொன்ன நேரத்திலே முதலமைச்சர் அவர்கள் சொன்னது இதுவரையிலே 'எச்' முத்திரை குத்தப்பட்டுவிட்டது; இனிமேல் குத்தப்போவதில்லை என்று ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். அப்படி அந்த அறிவிப்புக்கு இணங்க ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபாய் வருமானம் இருக்கிறது என்று சொன்னால், 5 ஆயிரம் ரூபாய் வருமானம் பெறக்கூடியவர்கள் 'எச்' முத்திரை குத்தவில்லை என்று சொன்னால் தொடர்ந்து அவர்களுக்கு அரிசி கிடைக்குமா, கிடைக்காதா? அப்படி அரிசி கிடைக்கிறது என்று சொன்னால் அது வரவேற்கக்கூடியது. ஆகவே, அந்த வருமான வரம்பே தேவையில்லை என்பதுதான். யார் எல்லாம் அரிசி



வேண்டாம் என்று சொல்லுகிறார்களோ, அவர்கள் 'எச்' முத்திரை குத்திக்கொள்ளலாம். வருமானம் கூடுதலாக இருந்தாலும்கூட அவர்களுக்குக் குறைந்த விலையிலே, மலிவு விலையிலே அரிசி தேவை என்று சொன்னால் 'எச்' முத்திரை தேவையில்லை என்ற ஒரு அறிவிப்பு இங்கே வரவேற்கக்கூடியதாகவே இருக்கும்.

பத்திரிகையில் வந்த செய்திகூட இதை குறிப்பிட்ட காலத்திற்குள் பதிவு செய்துகொள்ள வேண்டும்; அப்படி பதிவு செய்யவில்லை என்று சொன்னால், வருமானத்தைக் குறைவாகக் காட்டினால் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்ற ஒரு அறிவிப்பு வந்திருந்தது. அதை எல்லாம் பார்த்துவிட்டு கிராமப்புறங்களிலே மிகவும் வேதனையோடு இருக்கிறார்கள். இன்னொன்றுகூட நம்முடைய மரியாதைக்குரிய உறுப்பினர் வேலு அவர்கள் குறிப்பிட்டார்கள். திரு. ஞானசேகரன் போன்றவர்கள் எல்லாம்கூட சொல்லுகின்ற நேரத்திலே வருமான வரம்பு என்கிறபோது, இன்றைக்கு எல்லா விலையும் ஏறிவிட்டது. அரிசி விலை ஏறிவிட்டது, பருப்பு விலை, மண்ணெண்ணெய் விலையில் இருந்து, இப்போது மின் கட்டண உயர்வு, பால் விலை உயர்ந்துவிட்டது, பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி குழந்தைகளைப் படிக்க வைக்கவேண்டுமென்று சொன்னால்கூட அவர்களுக்கு கல்விக் கட்டணம் அதிகமாக இருக்கிறது. 5 ஆயிரம் ரூபாய் வருமானம் பெறக்கூடிய குடும்பங்களுக்கு, குடும்பத்தினுடைய சராசரி செலவை எடுத்துக்கொண்டால் அவன் கடன் வாங்கக்கூடிய நிலையிலே இருந்துக்கொண்டிருக்கிறான். ஆகவே, 5 ஆயிரம் ரூபாய் வரம்பு என்பது நிச்சயமாகப் போதாது. 5 ஆயிரம் ரூபாய் வருமானம் இருந்தாலும்கூட அவர்களுக்கும் இந்த அரிசி தொடர்ந்து வழங்கவேண்டும். அப்படி வழங்கப்பட வேண்டிய நிலை இருக்கிறது என்று சொன்னால் அதை நாங்கள் வரவேற்கிறோம். அந்த வகையிலே இந்த அரிசியை ரூ.3-50-க்கு வழங்கக்கூடிய நிலை கடந்த காலங்களிலே தொடர்ந்தது போல தொடர வேண்டும். தொடர்ந்து அந்த நிலை இருக்கிறது என்று சொன்னால் அதை வரவேற்று நான் அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு) செல்வி பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோக முறையைக் குறித்தவரையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்தப் பொது விநியோக முறை வலுப்படுத்தப்பட

வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. ஏழையெளிய மக்களுக்கு மட்டுமல்ல, நடுத்தர மக்களுக்கும் ரேஷன் கடையில் பொருட்கள் வாங்கக்கூடிய உரிமையை இந்த அரசாங்கம் உத்தரவாதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 18 இலட்சம் மக்களுக்கு 'எச்' முத்திரை குத்தப்பட்டிருப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார்கள். எங்களுடைய பார்வையில் 18 இலட்சம் நடுத்தர மக்களுடைய அரிசி வாங்கும் உரிமை பறிக்கப்பட்டதாக நாங்கள் கருதுகின்றோம்.

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் தவறான ஒரு கருத்தை இங்கே தெரிவித்துக்கொண்டு இருக்கிறார். நான் ஏற்கெனவே தெளிவாக இங்கே தெரிவித்தேன். இந்த 'எச்' முத்திரை குத்திக்கொள்வது என்பது யாராவது தாங்களாக முன்வந்து எங்களுக்கு இந்த ரேஷன் அரிசி தேவையில்லை என்று சொல்லி, எங்கள் கார்டில் இந்த 'எச்' முத்திரை குத்துங்கள் என்று சொன்னால்தான் குத்தப்படுகிறதே தவிர, யாரையும் நிர்பந்தப்படுத்தவோ, கட்டாயப்படுத்தவோ இல்லை. அத்தகைய எந்தச் செயலையும் இந்த அரசு செய்யவில்லை, ஆகவே, யாருடைய உரிமையும் பறிக்கப்படவில்லை. அத்தகைய வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கு. பிச்சாண்டி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன பிச்சாண்டி? உட்காருங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கக்கூடிய கருத்தில், அவர் சொல்லியிருப்பது உண்மை என்று சொன்னால், மாவட்ட அளவில் நேரடியாக நாங்கள் பார்க்கிறோம், அதிகாரிகள், அதிகாரிகளுடைய கூட்டங்களில் மக்கள் பிரதிநிதிகளைக்கூட அழைக்காமல்....

***மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்லிய குற்றச்சாட்டு தவறான குற்றச்சாட்டு. இங்கே அரசு ஆணையிடப்பட்டிருக்கிறது எப்படி





என்று சொன்னால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டபடி, அவர்களே தானாக வந்துதான் அந்தக் கார்டிலே 'எச்' முத்திரை குத்திக்கொள்ளவேண்டும் என்பதுதான் அரசினுடைய நிலைப்பாடு. அதேபோன்று சென்னையிலே 14 மையங்களில் அந்தந்த வட்ட அலுவலகங்களிலேதான் சென்று குத்தப்படவேண்டும். அதேபோன்று மாவட்டங்களிலேயும் அந்த வட்ட வழங்கல் அலுவலகத்திலேதான் சென்று குத்திக்கொள்ள வேண்டும் என்பதுதான் அரசினுடைய நிலைப்பாடு, ஆணை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாலபாரதி உட்காருங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** என்னுடைய திருவண்ணாமலை நகரத்திலேகூட தாலுகா அலுவலகத்திலே இருக்கிற அதிகாரிகள் வீடு, வீடாக வந்து அங்கே 'எச்' முத்திரையை குத்தாதவர்களுக்கு குத்திவிட்டுச் செல்லக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. அவர்கள் சொன்னதுபோல voluntary-ஆக செய்யக்கூடிய நிலை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வீடு வீடாக வந்து எப்படிக் குத்துவார்கள்?

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் வீட்டுக்குச் சென்றிருக்கிறார்களா என்பது எல்லாம் எனக்கு தெரியாது. பொதுவாக அரசு ஆணை இப்படித்தான் இடப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் தனியாக எடுத்துச் சென்று குத்துவதற்கே அனுமதி கிடையாது. அந்த 'சீல்கள்' எல்லாம் வட்டாட்சியர் அலுவலகத்திலேதான் வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அட்டைகள் அதிகமாக இருக்கிற இடங்களிலே எல்லாம், பல்கலைக்கழகம், கல்லூரி போன்ற இடங்களிலே எல்லாம் அவர்களாக honorary card-ஆக மாற்றிக்கொள்ளவேண்டுமென்று அவர்கள் விரும்பியதற்கிணங்க, அவர்களிடத்திலே சென்று அவர்களுடைய அந்த விண்ணப்பங்களையெல்லாம் பெற்று அலுவலகத்திற்குக் கொண்டு வந்துதான் அந்த முத்திரைகளும் குத்தப்பட்டன என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'எச்' முத்திரை குத்தப்பட்ட நடுத்தர மக்களுக்கு கோதுமை, ரவை, மண்ணெண்ணெய், சர்க்கரை இதுபோன்ற பொருட்களாவது இனி கிடைக்கும் என்பதையாவது இந்த அரசாங்கம் உத்தரவாதப்படுத்த வேண்டும். அதை ஓர் அறிவிப்பாக நீங்கள் செய்தால் நல்லது என்று நான் கருதுகின்றேன். காரணம் ஏழையெளிய மக்கள்....

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும், மேலும் இந்த அவைக்குத் தவறான தகவலைத் தந்திடுதல் கூடாது என்பதை நான் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன். இந்த முறையாலே ஏழை எளியவர்கள் நிச்சயமாக பாதிக்கப்படக் கூடாது என்பதுதான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய விருப்பம். அந்த விருப்பத்திற்கு இணங்கத்தான் இன்றைக்கு இந்த நடைமுறைகள் நடந்துகொண்டு இருக்கின்றன என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (குறுக்கீடு)

**திரு. கே.சி. கருணாகரன்:** 'எச்' முத்திரை குத்தியவர்களுக்குச் சர்க்கரை கிடைக்குமா என்பதுதான் கேள்வி.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பாலபாரதி அவர்களும், மாண்புமிகு கருணாகரன் அவர்களும் தவறான ஓர் அணுகுமுறையை மேற்கொண்டிருக்கிறார்கள் என்றே நான் கருதுகிறேன். அரசு எத்தகைய கொள்கையை நடைமுறைப்படுத்துகிறது என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவி முதல்வர் அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-50*

Voluntary-ஆக, பணம் படைத்தவர்கள் எங்களுக்கு ரேஷன் மூலமாக அரிசி, கோதுமை, சர்க்கரை எதுவுமே வேண்டாம் என்று எண்ணக்கூடியவர்கள், அவர்களாகவே வந்து (குறுக்கீடு) கவனியுங்கள், அவர்களாகவே வந்து, அந்த 'எச்' முத்திரையைக் குத்திக்கொள்ள வேண்டும். இதில் கட்டாயம் எதுவும் இல்லை. தானாகவே வந்து 'எச்' முத்திரை குத்திக்கொள்கிற அந்தப் பணம் படைத்தவர்கள் (குறுக்கீடு) தாமாகவே வந்து அந்த 'எச்' முத்திரையைக் குத்திக்கொள்கின்ற அந்தப்





(குறுக்கீடுகள்) பணக்காரர்களுக்காக சி.பி.எம். இயக்கத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் வாதாடுவது விந்தையாக இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இந்த 'எச்' முத்திரை குத்தும் முறை ஏன் கொண்டுவரப்பட்டது என்பதை மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஏற்கெனவே, கிட்டத்தட்ட ஒரு கோடியே 61 இலட்சம் பேர் இந்த ரேஷன் கார்டுகளை வைத்திருந்தார்கள். எல்லோருக்கும் மானிய விலையில் ரேஷன் பொருட்களும் அரிசியும் வழங்கப்பட்டு வந்தன. இவர்களில் பலபேர் நல்ல வருமானம் உடையவர்கள். இவர்களில் பலபேர் பணக்காரர்கள். இவர்களில் பலபேர் இந்த ரேஷன் அரிசியை வாங்குவதே கிடையாது. இருப்பினும் இந்தக் கார்டுகளை வைத்திருந்தார்கள். அந்தக் கார்டுகளை அவர்களுடைய வீட்டு வேலைக்காரர்களுக்குக் கொடுத்துவிடுவார்கள். வேறு யாராவது அந்தக் கார்டுகளை துஷ்பிரயோகம் செய்வார்கள். இதையெல்லாம் ஒரு முடிவிற்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் இந்த ஒரு யோசனையை முடிவு செய்தோம். இந்த ஆலோசனையை மேற்கொண்டோம்.

பொதுவாக, பணக்காரர்களும், மேல்தட்டு மக்களும் எதற்காக இந்த ரேஷன் கார்டுகளை விடாமல் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்? அது அவர்களுக்கு ஓர் அடையாள அட்டையாக, ஒரு Identification Card-ஆகப் பயன்படுகிறது. தேர்தலில் நிற்க வேண்டுமென்றாலும், அல்லது வேறு பல காரணங்களுக்காகவும் இந்த ரேஷன் கார்டு அவர்களுக்குத் தேவைப்படுகிறது. அவர்கள் யார் என்பதை அடையாளம் காண அது அவர்களுக்கு உதவிகரமாக இருக்கிறது. ஆகவே, அந்தக் கார்டு அவர்களுக்குத் தேவைப்படுகிறதே தவிர, அந்தக் கார்டின் மூலம் பெறக்கூடிய ரேஷன் பொருட்கள், அரிசியோ, கோதுமையோ, சர்க்கரையோ, மண்ணெண்ணெய்யோ அவர்களுக்குத் தேவையில்லை. அதனால்தான் அரசு இத்தகைய கார்டுகளை வெறும் Identity purpose-க்காக வைத்துக்கொள்ள விரும்புகிறவர்கள் தாங்களாக முன் வந்து, எங்களுக்கு ரேஷன் அரிசியோ, மற்ற ரேஷன் பொருட்களோ தேவையில்லை என்று தாங்களாகவே முன்வந்து சொன்னால், அத்தகைய கார்டுகளுக்கு மட்டும் இந்த 'எச்' முத்திரை குத்தப்பட்டுள்ளது. அப்படி அந்த வகையில் 18 இலட்சம் பேர்

தாங்களாக முன்வந்து தங்கள் கார்டுகளைக் காட்டி இந்த 'எச்' முத்திரையைக் குத்திக்கொண்டு சென்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆஃப ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி பாலபாரதி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) திரு. பழனிசாமி, அடுத்து நீங்கள் பேசப் போகிறீர்கள்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. ஜி. பழனிசாமி:** தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி பாலபாரதி பேசி முடிக்கட்டும்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆலோசித்த திட்டம் என்று சொல்கிறார்கள். உள்ளபடியே அவர்கள் ஆலோசனை செய்திருந்தால் இந்தத் திட்டம் இவ்வாறு இருந்திருக்காது. இது உலக வங்கியினுடைய—இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளில் பொது விநியோக முறையைச் சீரழிப்பதற்கு, உலக வங்கியும், மத்திய அரசாங்கமும் சேர்ந்து செய்யக்கூடிய ஒரு சதித் திட்டம். அதற்கு நம்முடைய தமிழக அரசு....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின்மீது பழியைப் போட்டுவிட்டு சி.பி.எம். இயக்கத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த 'எச்' கார்டு மூலமாகப் பணக்காரர்களுக்காக வாதாடுகிறார்கள் என்பதே இதிலிருந்து தெளிவாகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**செல்வி க. பாலபாரதி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் டாட்டாவுக்காகவோ, பிர்லாவுக்காகவோ வாதாடவில்லை. நடுத்தர மக்களெல்லாம் அவர்களுடைய வாரிசுகளா?

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழுக்க முழுக்கத் தவறான தகவலை இந்த அவையிலே பேசக் கூடாது.



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் கட்டளைக்கு அடிபணிந்து நாங்கள் இந்த முறையை மேற்கொண்டிருக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். உலக வங்கிக்கு நாங்கள் பயப்படுவதாக இருந்தால் எப்படி ரூபாய் 3.50 என்ற விலைக்கு நாங்கள் அரிசி வழங்க முடியும்? இதுவே, சி.பி.எம்., சி.பி.ஐ., இந்தக் கூட்டணிகள் எல்லாம் ஆளுகின்ற மேற்கு வங்காள மாநிலத்தில்* B.P.L. *6 ரூபாய் என்றும்* A.P.L. *9 ரூபாய் என்றும் அரிசியைக் கொடுக்கிறார்களே, அப்போது அந்த மேற்கு வங்காள அரசு, உலக வங்கியின் கட்டளைக்குக் கட்டுப்பட்டுத்தான், அடிபணிந்துதான் இந்த அதிகமான விலைக்கு அரிசியை (மேசையைத் தட்டும் ஒலி) வழங்கிக் கொண்டிருக்கின்றதா?*

**திரு. கே.சி. கருணாகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) ஒரு நிமிஷம் இருங்கள். மேற்கு வங்க மாநிலம் ரேஷன் கடைகளில், அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் பண்ணிக் கொண்டிருக்கிறது. இப்போது நீங்கள் போட்டிருக்கிற இந்த உத்தரவின் மூலமாக ரூபாய் 5 ஆயிரத்திற்குக்கீழ் உள்ளவர்களுக்குத்தான் இனி ரேஷன் பொருட்கள் கிடைக்கும். 5001 ரூபாய், அதாவது ஒரு ரூபாய் கூடுதல் வருமானம் உள்ளவர்களுக்கு, 'எச்' முத்திரை உள்ளவர்களுக்கு கோதுமை, இவையெல்லாம் கிடைக்காது....*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. கருணாகரன், ஏற்கெனவே முதலமைச்சர் இதுபற்றி. எவ்வளவோ விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) செல்வி பாலபாரதி பேசி முடியுங்கள்.*

**செல்வி க. பாலபாரதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று கூப்பன் கார்டு முறையை நாங்கள் ஆரம்பத்திலேயே, சட்டமன்றக் கூட்டத் தொடரில் வேண்டாம் என்று வெகுவாக வலியுறுத்தினோம். ஆனால், இந்தக் கூப்பன் கார்டு முறையில் தகுதிவாய்ந்த மக்களுக்குக்கூட கூப்பன் கார்டு இன்றைக்கு வழங்கப்படவில்லை. அந்த நேரத்தில் கூப்பன் கார்டு வழங்குவதற்குரிய காலத்தில் அவர்கள் மருத்துவமனையில் இருந்தாலோ, துக்க காரியத்திற்குச் சென்றிருந்தாலோ, அலுவலகத்திற்குச் செல்லாமல் இருந்தாலோ, அவர்களுக்கெல்லாம்கூடக் கூப்பன் கார்டு வழங்கப்படவில்லை. ஒரு தாழ்த்தப்பட்ட பெரியவர் அவருடைய*

மனைவி இறந்ததற்காக சென்றதால் கூப்பன் கார்டு கிடைக்காமல் ரேஷன் கடைக்கே செல்ல முடியாமல் இருந்தார். அந்த மனுவை நான் நமது மாண்புமிகு பொது விநியோகத் துறை அமைச்சரிடம் சொல்லியபோது அவர்கள் இரக்க உணர்வோடு கேட்டுக்கொண்டார்கள். கலெக்டர் வரை பேசிப் பார்த்துவிட்டேன். அந்த ஒரு தனிப்பட்ட தாழ்த்தப்பட்ட பெரியவருக்கு கூப்பன் கார்டு தர மறுக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று கேட்கிறபோது வாய்மொழி உத்தரவாகக் கூப்பன் கொடுக்க வேண்டாம் என்று எங்களுக்கு இருக்கிறது. ஆகவே, நாங்கள் கூப்பனைக் கொடுக்க மாட்டோம் என்று சொல்கிறார்கள். இவ்வாறு சில இலட்சம் பேர்களுக்கு...

*பிற்பகல் 12-55*

***மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு் பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து தவறான தகவல்களை அவைக்குத் தந்து கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்வது, கூப்பன் முறை வந்ததற்குப் பின்னாலேதான் இந்தப் பொது விநியோக முறை மிகச் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் திட்டத்தின் மூலமாக 23 இலட்சம் கார்டுகள் போலி கார்டுகளாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கூப்பன் முறை வந்ததற்குப் பின்னாலேதான் இப்படிப்பட்ட நிலைமைகள் உருமாறி இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஓரிரு இடங்களிலே அப்படிப்பட்ட நிலைமை இருக்குமேயானால் சுட்டிக்காட்டுங்கள். அவற்றுக்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி பாலபாரதி, ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** பதிலுரைக்கு நன்றி. ஒன்றிரண்டு உதாரணங்களைச் சுட்டிக்காட்டிக்கூட ஒரு நபருக்கு என்னால் கூப்பன் கார்டு வாங்க முடியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, அமைச்சர்தான் சொல்லிவிட்டாரே! ஏதாவது இருந்தது என்று சொன்னால் நீங்கள்



அவருக்கு எழுதிக் கொடுங்கள்; நடவடிக்கை எடுப்பார்கள். திரு. பழனிசாமி (குறுக்கீடுகள்) சிவபுண்ணியமா? (குறுக்கீடுகள்)

**செல்வி க. பாலபாரதி:** ஒரே ஒரு செகண்ட் மட்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதாவது தகுதி வாய்ந்த ஏழைகளுக்கு, கூப்பன் கார்டு வாங்காமல் விடுபட்டுப் போனவர்களுக்கு ரேஷன் கார்டுகளுக்குத் தருகிறோம் என்று ஓர் எழுத்துபூர்வமான உத்தரவுப் பிறப்பித்தால் அது உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற பட்ஜெட்டில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம். (குறுக்கீடுகள்) சிவபுண்ணியத்தைப் பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) செல்வி பாலபாரதி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கார்டு கையிலே வைத்திருக்கக் கூடியவர் அவருடைய குடும்பத்தினுடைய வருமானம் அதிலே பதியப்பட்டிருக்கிறது. நான் அரசுப் பணியிலே இருக்கிறபோது எனக்கு 5,000 ரூபாய் என்று அதிலே என்னுடைய குடும்பத்தினுடைய வருமானம் இருந்தால், நான் ஓய்வு பெற்ற பின்னர், எனக்கு 2,500 ரூபாய் 3,000 ரூபாய்தான் வருமானம் வருகிறது. ஆனால், ரேஷன் கார்டை எடுத்துப் போகிறபோது, என்ன சொல்கிறார்கள் என்றால் உங்களுக்கு 5,000 ரூபாய் வருமானம் இருக்கிறது. ஆகவே, 'எச்' முத்திரை குத்திப் பதிவு செய்து வாருங்கள் என்று இன்று திருப்பி அனுப்பப்படுகிறார்கள். இதற்கு யார் என்ன செய்ய முடியும்? அவர்கள், பென்ஷன் வாங்கக்கூடிய அந்தக் கார்டைக்கூட திரும்பக் கொண்டு கொடுத்தால்கூட இதில் 5,000 ரூபாய் என்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால், உங்களுக்குப் பொருட்களே கிடையாது என்கிறார்கள். அரசாங்கம் தெளிவான ஓர் உத்தரவைக் கொடுக்க வேண்டும். 'எச்' முத்திரை என்பது .... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். நீங்கள் சொல்வதற்கு நான் சொல்ல வேண்டும் அல்லவா? பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இவர்கள் சொல்கிறபோது, ஒரு பென்ஷன் வாங்குகிறவர் என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் 2,000 ரூபாய் மட்டுமே பெறுகிறோம் என்று சொல்கிறார்கள். அரசு ஊழியர்களாக இருக்கிறபோது ஒரு 10,000 ரூபாயோ, ஒரு 7,000 ரூபாயோ

வாங்குகிறவர்களுக்கு 'எச்' முத்திரை குத்தப்படும். ஆனால், அதற்குப் பின்னாலே அவர்கள் ஓய்வு பெற்றதற்குப் பின்னால், மிகச் சிறப்பாக இந்த அரசு நல்ல முடிவை எடுத்திருக்கிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். ஓர் இதயபூர்வமாக அம்மா அவர்கள் நல் உத்தரவு இட்டிருக்கிறார்கள். அப்படி 'எச்' முத்திரை குத்தப்பட்டிருக்குமேயானாலும்கூட அவர்கள் அப்படி ரிடையர்மெண்ட் ஆனதற்குப் பின்னாலே அவர்கள் தொடர்ந்து அந்தச் சலுகை பெற வேண்டும் என்று விரும்பினால், உரிய முறையிலே அவர்களால் மனு செய்யப்படுமேயானால் அவர்களுடைய மனுக்கள் பரிசீலிக்கப்படும் என்று அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை நான் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பழனிசாமி. (குறுக்கீடுகள்) இனி என்ன பேசப்போகிறார்கள்? அதுதான் கேட்டு விட்டார்களே? முடிந்து போய்விட்டது. திரு. சந்தானம், பேசுங்கள். நீங்கள் சொல்லி முடித்து விடுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இது ஒரு முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முக்கியமான பிரச்சினைதான்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இதிலே நீங்கள் கேள்வி கேட்க அனுமதி கொடுக்க மாட்டேன் என்றால் எப்படி?

*பிற்பகல் 1-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முக்கியமான பிரச்சினையை எடுத்திருக்கும்போது, ஏன் கோபித்துக் கொண்டு போனீர்கள்?

**செல்வி க. பாலபாரதி:** பட்ஜெட்டில் உணவு மானியத்திற்கான ஒதுக்கீடு 1,200 கோடி ரூபாயிலிருந்து ரூ.600 கோடியாக வெட்டப்பட்டு, சுருக்கப்பட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி பாலபாரதி, நீங்கள் பேச்சை முடித்து ரொம்ப நேரமாகிவிட்டது. நீங்கள் மறுபடியும் வாசித்துக்கொண்டே இருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) திரு. மணி, என்ன? கேளுங்கள்.





**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் குறிப்பிடுகின்ற நேரத்திலே தானாக முன்வந்து 'எச்' முத்திரையைப் பதித்துக்கொள்ள வேண்டும்; பதித்துக்கொண்டவர்கள் 18 இலட்சம் பேர்; இதற்குமேல் பதியப்படாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, 18 இலட்சம் பேரைத் தவிர மற்றவர்களுக்கெல்லாம் மானிய விலையிலே அரிசி கிடைக்குமா? 5,000 ரூபாய் என்ற வரம்பு கிடையாதா? அதைத் தெளிவாக அறிவிக்க வேண்டும். சிலருடைய வருமானம் 5,000-க்கு மேல் இருந்தாலும், 8,000 இருந்தாலும், 7,500 இருந்தாலும், 'எச்' முத்திரை குத்தவில்லை என்றால் அவர்களுக்கு மானிய விலையிலே அரிசி கிடைக்குமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், 2 மணித்துளிகளில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இந்த 18 இலட்சம் பேர்களுக்கு ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, உட்காருங்கள். திரு. சிவபுண்ணியம், பேசுங்கள்.

சென்னை-600 008

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் கடைசியில் விளக்கம் சொல்வார். (குறுக்கீடுகள்) அமைச்சர் கடைசியாக விளக்கம் சொல்வார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ....

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி இருந்தால் ....

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ....

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது சிறப்புக் கவன ஈர்ப்பு. மாண்புமிகு துரைமுருகன் அவர்கள், உட்காருங்கள். சிறப்புக் கவன ஈர்ப்பிலே எந்த உறுப்பினரைப் பேச அழைக்கிறோமோ அவரைப் பேச அனுமதித்தால்தான் நல்லது. இதைப் பொது விவாதத்தைப் போல் ஆக்கி, நேரத்தை ஏராளமாக எடுத்துக்கொண்டால், மற்ற நிகழ்ச்சிகள் தடைப்பட்டுப் போய்விடும். (குறுக்கீடுகள்) செல்வி பாலபாரதி பேசினார். சிவபுண்ணியம் அடுத்துப் பேச வேண்டும். இடையிலே நீங்கள் மாறி, மாறி விளக்கம் கேட்டுக் கொண்டேயிருந்தால், அந்த விளக்கத்திற்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தால், விவாதம் நீண்டு போகும். ஆஞ்சநேயர் வால் போலப் போய்க் கொண்டே இருந்தால் மற்ற நிகழ்ச்சிகள் நடக்க முடியாது. ஆகவே, பாலபாரதி பேசிமுடித்துவிட்டார். திரு. சிவபுண்ணியம், பேசுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** பேச்சை முடிக்கவில்லை. ஒரேயொரு நிமிடம் மட்டும் கொடுங்கள். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம். 1,200 கோடி ரூபாயிலிருந்து .... (குறுக்கீடுகள்)

***திரு. துரைமுருகன்:** நீங்கள் சொல்வதை ஏற்றுக்கொள்கிறேன். விரிவாகப் பேச முடியாது. சில பிரச்சினைகளின் முக்கியத்துவத்தைக் கருதி கேள்வி கேட்கிறார்கள். மாண்புமிகு மணி அவர்கள் ஒரு சந்தேகத்தைக் கிளப்பினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார் என்றால் நல்லது. நல்ல கேள்வி அது–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இறுதியாக விளக்கம் சொல்வார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் எழுப்பிய சந்தேகத்திற்கு இப்போது நான் விளக்கம் தருகிறேன். செப்டம்பர் மாதத்திலும், அக்டோபர் மாதத்திலும் யாரெல்லாம் தங்கள் ரேஷன் கார்டுகளில் 'எச்' முத்திரை குத்திக்கொள்ள விரும்புகிறார்களோ அவர்களுக்கெல்லாம் வாய்ப்பளிக்கப்பட்டது. இது முற்றிலும் ஒரு voluntary basis அதாவது voluntary அடிப்படையில் செய்யப்பட்ட ஒரு திட்டமாகும். அரசாங்கம் மேலும் தெளிவுபடுத்தியிருந்தது. யாரெல்லாம் மாதத்திற்கு 5,000 ரூபாய் மற்றும் 5,000 ரூபாய்க்கு மேல் வருமானம் பெறுகிறார்களோ அவர்களுக்கெல்லாம் கார்டுகளில் 'எச்' முத்திரைதான் குத்தப்படும் என்று அறிவித்திருந்தது. ஆகவே, யாரெல்லாம் தங்கள் கார்டுகளில் 'எச்' முத்திரை குத்திக்கொள்ள



வேண்டும் என்று விரும்பினார்களோ, அவர்களுக்கெல்லாம் போதிய அவகாசம் செப்டம்பர் மாதத்திலும், அக்டோபர் மாதத்திலும் வழங்கப்பட்டது. தற்போது பொதுவான கார்டுகளைப் புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இது நவம்பர் மாதம் 30 ஆம் தேதி முடிவடையும். நவம்பர் மாதம் 30 ஆம் தேதிக்குள் யாரெல்லாம் ரேஷன் கார்டுகளைப் புதுப்பித்துக்கொள்ள விரும்புகிறார்களோ அவர்களெல்லாம் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். இந்தக் கார்டுகளைப் புதுப்பித்துக்கொள்ள அலுவலகத்திற்கு வருகின்றபோது அவர்களுடைய மாத வருமானம் என்ன என்பதைப் பற்றி அவர்களே அங்கே ஒரு 'self declaration' கொடுக்க வேண்டும். அதைத் தாக்கல் செய்ய வேண்டும். ஆகவே, யார் எல்லாம் கார்டுகளைப் புதுப்பிக்க வரும்போது, தங்களுடைய மாத வருமானம் 5,000 ரூபாய்க்குக் குறைவாக இருக்கிறது என்று அங்கே 'declaration' கொடுக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் ரேஷன் கார்டுகள் புதுப்பித்துத் தரப்படும். ஆகவே, நவம்பர் மாதத்தைப் பொறுத்தவரை, நவம்பர் மாதம் 30 ஆம் தேதி வரை, மேலும் யாருக்கும் 'எச்' முத்திரை கார்டில் குத்தப்பட மாட்டாது. ஆகவே, நவம்பர் மாதத்தில் மீண்டும் 'எச்' முத்திரை குத்தப்படும், கட்டாயப்படுத்தப்படுவார்கள் என்ற கேள்வியே எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம். (குறுக்கீடுகள்) திரு. சிவபுண்ணியம். (குறுக்கீடுகள்) திரு. ஜி.கே. மணி. திரு. சிவபுண்ணியம், பேசுங்கள். பேச்சை முடியுங்கள். திரு. சிவபுண்ணியம், பேசுங்கள் (குறுக்கீடுகள்) திரு. சிவபுண்ணியம், பேசுங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போதுதான் தெளிவாக விளக்கினேன். நவம்பர் மாதம் முழுவதும் 30 ஆம் தேதி வரை ரேஷன் கார்டுகளைப் புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது. யாரெல்லாம் கார்டுகளைப் புதுப்பித்துக்கொள்ள விரும்புகிறார்களோ, அவர்கள் எல்லாம் அந்தந்த அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டும். அப்போது புதுப்பித்துக்கொள்ள வருகின்றபோது, தங்கள் மாத வருமானம் எவ்வளவு என்பதை அவர்கள் குறிப்பிட்டு, ஒரு self-declaration-ஐ அவர்கள் தாக்கல் செய்யவேண்டும். ஆக, யாரெல்லாம் தங்கள் மாத வருமானம் 5,000 ரூபாய்க்குக் குறைவாக உள்ளது என்று declaration கொடுக்கிறார்களோ, அவர்களுக்கு ரேஷன் கார்டுகள் புதுப்பித்துத் தரப்படும்.

*பிற்பகல் 1-05*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடும்ப அட்டைகளைப் புதுப்பிக்கிற பணிகளைப் பற்றி இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே விளக்கத்தைச் சொன்னார்கள். இதிலிருந்து நான் தெரிந்து கொண்டது என்னவென்றால், இந்த கௌரவ குடும்ப அட்டைதாரர்களுக்கான முத்திரை போடப்படுகிற இந்த நிகழ்ச்சி என்பது நிர்பந்தப்படுத்தப்பட்டு நடைபெற்றது என்பதுதான் இன்று காலையிலே வரை நடைபெற்ற சம்பவங்கள். ஆகவே, இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதன் மூலமாக நிர்பந்தம் இல்லாமல், அவர்கள் விருப்பபூர்வமாக இப்படி பதிவு செய்துகொண்டார்கள் என்று சொல்வது, இப்போது ஒரு கணிசமான அளவிற்கு மக்கள் மத்தியிலே எதிர்ப்பு வந்துவிட்டது என்ற காரணத்தினாலேதான், இப்போது அதைச் சமாளித்து இங்கே சொல்கிறார்கள் என்பதுதான் உண்மையேதவிர வேறல்ல. வெளியிலே இருக்கிற நிலைமை என்பது நிர்பந்தப்படுத்தப்பட்டதன் காரணத்தினாலேதான் அப்படி அந்த முத்திரை குத்தப்பட்டது என்பதுதான் உண்மை. இதன் காரணத்தினாலே, பல தொல்லைகள் வரும் என்பதை உணர்ந்த காரணத்தினாலேதான் இப்படி முத்திரைகள் குத்துவதற்கான முயற்சிகளை எடுத்தார்கள். அப்படி எடுத்ததினுடைய விளைவாகத்தான் இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியதைப்போல, அப்படி இருக்குமானால் மாற்றிக்கொள்ளலாம் என்று சொல்வதற்குரிய வாய்ப்பே, மக்களிடமிருந்து எதிர்ப்பு வந்துவிட்ட காரணத்தினாலே அப்படி சொல்லப்படுகிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கற்பனையிலே ஒரு கதையே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அரசாணை என்ன என்பதைத் தெளிவாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படித்தார்; மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதைத் தெளிவுபடுத்தினார். அரசாணை தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அதைப் படித்துப் புரிந்துகொள்ளக்கூடிய சக்தி மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதில் அரசு எந்தவித



மாற்றுக் கருத்தையோ, மாற்றுக் கொள்கையையோ தற்போது கடைப்பிடிக்கவில்லை. உங்களுக்கு அது புரியவில்லை. அல்லது புரியக்கூடிய சக்தி இல்லாமல் போனதால் இப்படி குழப்பமாக நீங்கள் பேசுகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்கிற கூற்று, அதாவது, குடும்பக் கார்டை பற்றியே புரிந்து கொள்ள முடியாமல் எந்த உறுப்பினரும் இந்த அவைக்கு வரவில்லை. நான் சொல்வதெல்லாம், இந்த விஷயத்திலே குளறுபடிகளை நீங்கள் செய்துகொண்டிருக்கிறீர்கள். அதுதான் இதிலேயிருக்கிற உண்மை. இந்தக் குளறுபடி இருக்கிற காரணத்தினாலேதான், வருகிற 30 ஆம் தேதி வரையிலும் வாய்ப்பைப் பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்வதாக நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இந்தக் கௌரவ குடும்ப அட்டைகள் என்று வந்திருக்கிற விஷயங்களிலிருந்து நான் உணர்ந்து கொள்வது, அனேகமாக, படிப்படியாக, இந்தப் பொது விநியோகத் திட்டத்தை கைவிடுவதற்கான ஓர் அபாயம் வந்துவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன். இந்த விஷயத்திற்காக உத்தரவாதத்தை....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கடைகளில் வழங்கப்படும் 20 கிலோ அரிசியும் 3 ரூபாய் 50 பைசா என்ற விலைக்கே வழங்கப்படும் என்று அறிவித்த பிறகு, தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியத்தால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை என்பது தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, கற்பனையாக, அரசியல் ரீதியாக அவர் எதையெல்லாம் கற்பனை செய்து வைத்திருக்கிறாரோ, எப்படியெல்லாம் நடக்கவேண்டுமென்று அவர் ஆசைப்படுகிறாரோ, அதையெல்லாம் இங்கே பேசிக் கொண்டிருக்கிறார். இது ஏற்கெனவே வழங்கப்பட்ட அரசாணை. அந்த அரசாணையில் என்ன கூறப்பட்டுள்ளதோ, அதைத்தான் இப்போது நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். இதில் எந்தவிதமான குளறுபடியும் இல்லை; எந்தவிதமான குழப்பமும் இல்லை.

குளறுபடியும், குழப்பமும் உங்கள் மனதில் வேண்டுமானால் இருக்கலாம். இந்த அரசிடம் எந்தக் குளறுபடியும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) தெளிவாகச் சொல்கிறோம்; இதில் என்ன குளறுபடி? யாரெல்லாம் எங்களுக்கு ரேஷன் அரிசியும், மற்ற ரேஷன் பொருட்களும் தேவையில்லை என்று தாங்களாக முன்வந்து சொல்கிறார்களோ, அவர்களுடைய கார்டுகளில் மட்டும் 'எச்' முத்திரை குத்தப்பட்டுள்ளது. மற்றபடி நவம்பர் 30 வரை யாரெல்லாம் தங்கள் கார்டுகளைப் புதுப்பித்துக் கொள்ள முன்வந்து, எங்களுடைய மாத வருமானம் 5,000 ரூபாய்க்குக்கீழ் என்று சொல்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் புதுப்பித்துத் தரப்படும். மிகத் தெளிவாகச் சொல்கிறோம். இதில் எங்கே வந்தது குளறுபடி?

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்லதைச் செய்வேன் என்று சொல்கிறார்கள்; நம்புகிறோம். ஆனால், பின்னால் இப்படி ஓர் அபாயம் இருப்பதாக உணர்கிற காரணத்தினாலே நான் அதைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய எந்த அபாயமும் இல்லை. அப்படியொரு அபாயம் வராது. அதனால்தான் ஏற்கெனவே சொன்னேன். அரசியல் ரீதியாக எப்படியெல்லாம் நடந்தால் தங்களுக்குச் சாதகமாக இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் ஆசைப்படுகிறாரோ, அதையெல்லாம் இங்கே பேசிக்கொண்டிருக்கிறார். இது வெறும் கற்பனையான குற்றச்சாட்டு. அப்படி எந்தவிதமான ஒரு நிகழ்வும் ஏற்படாது.

பிற்பகல் 1-10

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியானால் ஒரு செய்தியை நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பத்திரிகைகளிலே, அதுவும் வேண்டாத பத்திரிகைகளின் மூலமாக வந்த செய்தி என்று. அநேகமாக தமிழகத்தினுடைய அனைத்துப் பத்திரிகைகளிலும் அந்தச் செய்தி வந்தது. வருகிற 30-தோடு கெடு முடிந்தது, கெடு முடிந்தது என்று. கெடு முடிந்தது என்றால், அது ஏதோ மறுநாள் சிறைச்சாலைக்குச் செல்வதைப்போல, அறிவிப்புப் போலத்தான் பத்திரிகைகளில் செய்தி வந்ததே தவிர வேறல்ல. அப்படியானால் எந்தப் பத்திரிகையுமே



உங்களுக்கு ஆதரவான பத்திரிகை இல்லையா? எல்லாப் பத்திரிகையிலும் அந்தச் செய்தி வந்ததே? அப்படியானால் பத்திரிகையில் செய்தி வெளியிட்டதைக்கூட தவறாகச் சொல்கிற போக்கு—இங்கே நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால் இந்த நடவடிக்கை, செயல்பாடு என்பதிலே ஏதோ அவசரக் கோலத்திலே, ஏதோ ஓர் உணர்வு நிலையிலே எடுக்கப்பட்ட நடவடிக்கையாகத்தான் நான் கருதுகிறேன். இந்த உணவு விநியோக முறை...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இயக்கம், சி.பி.ஐ. இயக்கம் தமிழகத்தில் எத்தகைய அரசியல் குழப்பத்தை உருவாக்க வேண்டுமென்று திட்டம் தீட்டிச் செயல்படுகிறது என்பதை நாட்டு மக்கள் அறிவார்கள். மிகத் தெளிவாக, இந்தவொரு நல்ல உன்னதக் கொள்கையை, ஏழைகளுக்குப் பொது விநியோகத்தில் அரிசி வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்டிருக்கிற கொள்கையை கொச்சைப்படுத்துவதற்காக, திட்டம் தீட்டி உங்களைப் போன்ற எதிர்க்கட்சிகளும் உங்களது ஆதரவுப் பத்திரிகைகளும் இதை வெளியிட்டன என்றுதான் நான் கூறினேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு பத்திரிகைகளில் இந்தத் தேதியோடு கெடு முடிகிறது, கெடு முடிகிறது என்று செய்திகள் வந்தால் அதற்கு அரசு எப்படி பொறுப்பு ஏற்க முடியும்? பத்திரிகைகள் செய்திகளை வெளியிடுகிறார்கள். அரசு ஏற்கெனவே ஒரு கெடுவை நிர்ணயித்தது. அதைப் பத்திரிகைகள் தெரிவித்திருக்கிறார்கள். எந்தத் திட்டமானாலும் அதற்கு ஒரு காலக்கெடுவை நிர்ணயித்தால்தான் அதைச் செயல்படுத்த முடியும். இப்போது பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளை வகுப்பில் சேர்க்கிறார்கள். கல்வியாண்டின் ஆரம்பத்தில்தான் பிள்ளைகளைச் சேர்க்கிறார்கள். அதற்கு ஒரு காலக்கெடுவை நிர்ணயிக்கிறார்கள். ஆண்டு முழுவதும் பிள்ளைகளைச் சேர்த்துக் கொண்டு இருப்பார்களா? அப்படியானால், எப்படி வகுப்பை நடத்த முடியும்? அதுபோலத்தான் குறிப்பிட்ட தேதிக்குள் ரேஷன் கார்டுகளைப் புதுப்பித்துக் கொடுத்தால்தான் அந்தக் கார்டுகளுக்கு முறையாக ரேஷன் பொருட்களை வழங்க முடியும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே நிலைமையிலே இந்த 5,000 ரூபாய் வருமானத்திற்கு மேற்பட்டவர்களுக்கு, இங்கே கேட்கப்படுகின்ற கேள்வி என்னவென்றால், இதர உணவுப் பொருட்கள் வழங்கப்படுமா, இல்லையா என்பதைப் பற்றிய அழுத்தமான கேள்வி வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஏற்கெனவே அதற்கு விளக்கம் சொல்லிவிட்டார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்குப் புரியவில்லை என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியத்திற்குக் கோபம் வருகிறது. பலமுறை இந்த விளக்கத்தை இங்கே ஏற்கெனவே தெரிவித்து விட்டேன். யாரெல்லாம் தங்களுக்கு ரேஷன் பொருட்கள் தேவையே இல்லை என்று சொல்லி, வெறும் identity purpose-க்காக ரேஷன் கார்டை வைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்களோ அப்படிப்பட்டவர்கள் தாங்களாக முன்வந்து தங்கள் கார்டுகளில் 'எச்' முத்திரையைக் குத்திக்கொண்டு சென்றிருக்கிறார்கள். அவர்களாகவே எந்த ரேஷன் பொருளும் தேவையில்லை என்று சொல்லிவிட்டுத்தான் அந்த 'எச்' முத்திரையைக் குத்திக் கொண்டிருக்கிறார்கள். மற்றபடி, யாரெல்லாம் இனிமேல் வந்து, தங்களுக்கு மாத வருமானம் ரூ.5,000/-க்கும் கீழ் என்று சொல்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் கார்டை புதுப்பித்துத் தரப்போகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, முடியுங்கள். திரு. சிவபுண்ணியம், பேச்சை முடியுங்கள். (குறுக்கீடு) திரு. அரசன்.

**டாக்டர் க. பொன்முடி:** ஒரு clarification.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி ஒரு professor என்று கருதுகிறேன். சொல்வதைப் புரிந்து கொள்ள வேண்டும். யாரெல்லாம் வந்து, என்னுடைய மாத வருமானம், 5,000/- ரூபாய்க்கும் கீழ் என்று சொல்கிறார்களோ அவர்களுக்குக் கார்டுகள் புதுப்பித்துத் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன். (குறுக்கீடு)



**டாக்டர் க. பொன்முடி:** ஒரு clarification. 5,000/- ரூபாய்க்கு மேலே வருமானம் உள்ளவர்களுக்குக் கார்டு உண்டா, இல்லையா? அதைத்தான் நாங்கள் கேட்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன். (குறுக்கீடு) பொன்முடி, உட்காருங்கள். (குறுக்கீடு) பொன்முடி, உட்காருங்கள், (குறுக்கீடு) சிவபுண்ணியம், என்ன? கடைசி வாக்கியத்தோடு முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5,000/- ரூபாய் வருமானத்திற்குக் குறைவாக உள்ளவர்களுக்கு அட்டை வழங்கப்படும் என்று சொல்கிறபொழுது, ரூ.5,000/-க்கு மேலே உள்ளவர்களுக்குக் குடும்ப அட்டை வழங்கப்படுமா இல்லையா என்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். அதுதான் கேள்வி.

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள்மீது நம்பிக்கை வைத்து, இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறோம். மீண்டும் தெளிவுபடச் சொல்கிறேன். புரிந்துகொள்பவர்கள் புரிந்து கொள்ளலாம். யார் எல்லாம் வந்து, எங்கள் மாத வருமானம், 5,000/- ரூபாய்க்குக் கீழ் என்று சொல்கிறார்களோ, அவர்களுக்கு ரேஷன் கார்டு புதுப்பித்துத் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துக்கொள்ளுங்கள், முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) அரசன், நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) பேசி முடியுங்கள், அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அரசன்.

[2003 நவம்பர் 5

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசன், பேசுங்கள். (குறுக்கீடு) பேசுங்கள், அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசன், நீங்கள் பேசாவிட்டால் அடுத்த உறுப்பினரை அழைப்பேன். (குறுக்கீடு) திரு. அப்பாவு.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. சிவபுண்ணியம், முடிந்தது. (குறுக்கீடு) இன்னொரு சிறப்புக் கவன ஈர்ப்பு இருக்கிறது.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. வை. சிவபுண்ணியம்:** தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. உட்காருங்கள்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நடக்கிற **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) திரு. அரசன். (குறுக்கீடுகள்) திரு. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டை பிரச்சினையைப் பொறுத்தவரைக்கும் அரசு தெளிவாக இருக்கிறது. பத்திரிகைகள்தான் பொய்த்து விட்டது என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். எங்களுக்கும், மக்களுக்கும் இருக்கின்ற ஒரே வழி—பத்திரிகைகளைப் பார்த்துத்தான் மக்கள் என்ன நடக்கிறது என்று தெரிந்து

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2003 நவம்பர் 5] [திரு. ப. அரசன்]

கொள்கிறார்கள். அதிலே தேதியைச் சொல்கிறார்கள். செப்டம்பர் 30 என்று சொல்கிறார்கள். பிறகு அக்டோபர் 30 என்று சொல்கிறார்கள். ஆக, இப்படி இவர்களுக்கெல்லாம் கார்டு இல்லையென்று சொல்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் கார்டு உண்டு என்று சொல்கிறார்கள். இதிலே குழப்பத்திற்கு முக்கிய காரணம் மாண்புமிகு உணவு அமைச்சர் என்று சொன்னால் அவர்கள் கோபித்துக்கொள்ள மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். ஏனென்று சொன்னால்....

***மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் மீண்டும் குழப்புவதாகவே எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். தெளிவாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே என்ன குழப்பம் இருக்கிறது என்பதுதான் தெரியவில்லை. தெளிவாக அவர்கள் இதைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த, இந்தத் தேதிகளில் புதுப்பிக்கப்படும். 5,000/- ரூபாய்க்கு குறைவாக வருமானம் உள்ளவர்கள் என்று அந்த மனுவிலே குறிப்பிடுவார்களேயானால், அவர்களுக்கு அந்தக் குடும்ப அட்டைகள் புதுப்பித்துத் தரப்படும் என்று தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மீண்டும், மீண்டும் பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் பத்திரிகைகளைப் பற்றியே குறிப்பிட்டுப் பேசுகிறார்கள். இந்த மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பத்திரிகைகளைப் படிப்பதால்தான் அவர்களுக்கு இந்தக் குழப்பம். ஆனால், மக்களுக்குக் குழப்பமேயில்லை. காரணம் மக்கள் பத்திரிகைகளை தற்போது படிப்பதேயில்லை. மக்கள் தொலைக்காட்சியைப் பார்க்கிறார்கள். இந்த நிகழ்ச்சியை எல்லாம் மக்கள் தொலைக்காட்சியில் பார்க்கத்தான் போகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லா விவரங்களையும் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறேன். ஆகவே, மக்களுக்கு எந்தக் குழப்பமும் இல்லை, இருக்காது என்று தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன், ஒரு நிமிடத்திலே பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

***திரு. கோ.சி. மணி:** முதலமைச்சர் அவர்கள் பத்திரிகைகளைப் படிக்க வேண்டாம் என்கிறார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பத்திரிகைகளைப் படிக்க வேண்டாம் என்றோ, படிக்கக்கூடாது என்றோ நான் சொல்லவில்லை. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பத்திரிகைகளைப் படிப்பதால்தான் அவர்களுக்குக் குழப்பம். ஆனால், பொது மக்கள் பொதுவாக பத்திரிகைகளைப் படிப்பதில்லை. தொலைக்காட்சியைப் பார்க்கிறார்கள். ஆகவே, பொதுமக்களுக்கு எந்தக் குழப்பமும் இல்லை என்பதைத்தான் நான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன், ஒரு மணித் துளியிலே உங்களது பேச்சை முடியுங்கள்.

*பிற்பகல் 1-20*

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையிலேதான் நான் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களுக்கு இந்த வேண்டுகோளை வைத்தேன். அவர்கள் அனைத்துப் பத்திரிகைகளையும் படித்துப் பார்த்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். ஒவ்வொரு பத்திரிகையும் குடும்பக் கார்டுகள் தொடர்பாக, தங்களுக்கு ஏற்றமாதிரி செய்திகளை வெளியிடுகிறபொழுது மக்களிடத்திலே குழப்பம் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட குழப்பத்தை நீக்க வேண்டிய கடமை உணவுத் துறைக்கு இருந்தது. அதைச் செய்யவில்லை, அதனால்தான் பல்வேறு பிரச்சினைகள்.

எப்படி என்று சொன்னால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கையிலே வைத்திருக்கிறேன். ஒன்று, அறந்தாங்கி வட்ட வழங்கல் அலுவலர் அவர்கள் போட்ட உத்தரவு. இன்னொன்று, ஆவுடையார்கோவில் வட்ட வழங்கல் அலுவலர் போட்ட உத்தரவு. இரண்டு உத்தரவுகளிலேயும் நிறைய மாறுபாடுகள் இருக்கின்றன. ஒருவர் சொல்லுகிறார், மாத வருமானம் 5 ஆயிரம் மேல் உள்ள நபர்களுக்கும், வருமான வரி செலுத்துபவர்களுக்கும், விற்பனை வரி செலுத்துபவர்களுக்கும் கௌரவ குடும்ப அட்டை வழங்கப்பட வேண்டுமென்றும், இந்த அட்டைதாரர்களுக்கு பொருட்கள் வழங்கக் கூடாது என்று அரசு உத்தரவிட்டுள்ளதால் கெரசின் மற்றும் சர்க்கரை ஆகியவைகளைப் பெற ஏற்கெனவே விண்ணப்பம் செய்து மஞ்சள்





நிற அட்டை பெற்ற குடும்ப அட்டைதாரர்களின் குடும்ப அட்டையில் Honorary Card-'H' என்று பதிவு செய்ய வேண்டியுள்ளது என்று சொல்லியிருக்கிறார்.

அடுத்து, ஆவுடையார்கோவில் வட்ட வழங்கல் அலுவலர் அவர்கள் சொல்கிறபொழுது, யார் யார் இந்த 5 ஆயிரம் ரூபாய் வருமானம் உள்ளவர்கள் என்று சொல்லுகிறபொழுது, அவர் சொல்லி இருக்கிறார்; கிணறு பம்ப்செட் உள்ளவர்; பெரிய ஓட்டுவீடு உள்ளவர்; மச்சுவீடு உள்ளவர்; (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன், நீங்கள் எதைப் படிக்கிறீர்கள்?

**திரு. ப. அரசன்:** வட்ட வழங்கல் அலுவலர்கள் போட்ட உத்தரவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓர் ஆவணத்தைப் படிக்கிறபோது பேரவைத் தலைவரிடத்திலே காட்டிவிட்டுத்தான் படிக்கவேண்டும். நீங்களாகவே ஒரு வட்ட வழங்கல் அலுவலர் போட்ட உத்தரவு என்று சொல்லி படிக்கக் கூடாது.

**திரு. ப. அரசன்:** ஆதாரத்தை உங்களிடத்திலே தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதாரத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களிடத்திலே கொடுங்கள்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களிடத்திலே கொடுக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உணவு அமைச்சரிடத்திலே ஆதாரத்தைக் கொடுங்கள். அவர் உரிய நடவடிக்கை எடுப்பார். உட்காருங்கள். திரு. அப்பாவு. (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள், திரு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில்.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன், உட்காருங்கள். திரு. அப்பாவு பேசி முடிக்கிறீர்களா?

**திரு. மு. அப்பாவு:** தமிழகத்தில் பொது விநியோகத் திட்டத்தில்.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன், உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** சில நியாயமான திருத்தங்கள் கொண்டுவ
வேண்டுமென்று இந்த அரசு நினைத்து சில நடவடிக்கைகளை
எடுத்துக்கொண்டு இருக்கிறது. பொது விநியோகத் திட்டம் என்றாலே
சற்று எல்லோரும் குழப்பி, குழம்பி அதன்பின்புதான் ஒரு முடிவுக்கு
வருவார்கள். காரணம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் முன்னாள்
முதல்வர் பக்தவச்சலம் அவர்கள் இந்தப் பொது விநியோக
திட்டத்தில் செய்த குளறுபடியால் ஆட்சியையே இழந்தார்கள்
இன்னும் காங்கிரஸ் ஆட்சிக்கே வர முடியவில்லை. அதன்பின்ட
இதற்கு முன்னால் இருந்த அரசு, குடும்ப அட்டைகள் வழங்குவதற்கா
மஞ்சள் கார்டு, பச்சை கார்டு, சிவப்பு கார்டு என்று பலவித
வண்ணங்களைச் சொல்லி இந்தக் குடும்ப அட்டை வழங்குவதிலே
பல குளறுபடிகள். அதன்பின்பு இந்த அரசு இதே பிரச்சினையை
இப்போது கையிலே எடுத்திருக்கிறது. இதிலே குழப்புவதற்காகவோ
இல்லை இதைப் பாராட்டுவதற்காகவோ சொல்லவில்லை
உண்மையான கருத்துகளை நான் சொல்ல இருக்கின்றேன்.

தமிழகத்தில் 12 இலட்சம் அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள்
சுமார் 10 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் வருமான வரி
செலுத்துகின்றார்கள். வணிக வரி செலுத்துகின்றவர்கள் சுமார் 20
25 இலட்சம் பேர் இருக்கிறார்கள். அவர்கள் இந்தக் குடும்ப
அட்டையைக் கொண்டுபோய் நிச்சயமாக ரேஷன் கடையிலே அரிசி
வேண்டுமென்று கேட்பதில்லை, கேட்கப்போவதும் இல்லை. ஆகவே
நிச்சயமாக, அவர்களுக்காக இந்தக் குடும்ப அட்டையிலே
இருக்கக்கூடிய சீனி, மண்ணெண்ணெய், அரிசி கொடுக்க
வேண்டுமென்று யாருமே வாதாடுவது எனக்கு நியாயமாகத்
தெரியவில்லை. காரணம், ஒவ்வொரு ரேஷன் கடையிலேயும் நான்
பார்த்திருக்கிறேன். நான் குறிப்பிட்ட இந்தத் தரப்பினர், Income Tax
கட்டுகிறவர்கள், Sales Tax கட்டுகிறவர்கள், அரசு ஊழியர்களாக
இருக்கின்றவர்கள். 12 இலட்சம் பேர் அரசு ஊழியர்கள் என்றால்,
எலக்ட்ரிசிட்டி போர்டு மற்றும் மாசுக் கட்டுப்பாடு வாரியம்,
டிரான்ஸ்போர்ட் என்று இவற்றிலே இருப்பவர்களே மொத்தம் சுமார்
20 ஆயிரம் பேர் சேர்வார்கள். (குறுக்கீடு) 20 இலட்சம் பேர் சேர்வார்கள்.
ஆக, இவர்கள் எல்லோரும், ஒருபோதும் யாருமே போய் அரிசி
வேண்டும்; மண்ணெண்ணெய் வேண்டும் என்று போவதில்லை.
அவர்களுடைய குடும்ப அட்டைகளிலேயுள்ள நம்பரை எடுத்து, அங்கே
ரேஷன் கடைகளிலே இருக்கிறவர்கள், அவர்களாகவே எழுதி,





கிட்டத்தட்ட 100 மூட்டை அரிசி ஒரு ரேஷன் கடைக்கு வருமானால், 10 மூட்டை, 20 மூட்டை அரிசியைத் தவறான வழியிலேதான் விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பல உதாரணங்கள் இருக்கின்றன. ஆகவே, இவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்தி, ஒழுங்குபடுத்துவதில் எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை என்பதே என்னுடைய கருத்து. ஆனால், அவற்றை மனதிலே வைத்து கவனத்தோடு அதைச் செய்ய வேண்டும்.

பிற்பகல் 1-25

முதலிலே குடும்ப அட்டை இல்லாதவர்களே இருக்கக்கூடாது என்ற ஒரு நிலை உருவாக வேண்டும். பல பேர் கிராமங்களில் ஐந்தாண்டுகளாக, பத்தாண்டுகளாக குடும்ப அட்டையே பெறவில்லை. இன்னும் சில ஏழைகள், தங்களுடைய வாழ்நாளில், தன் பெயர் பொறிக்கப்பட்ட, தன்னுடைய படம் பொறிக்கப்பட்ட ஒரு குடும்ப அட்டை கிடைத்துவிடுமா என்றுகூட பல பேர் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதுவரை இந்தக் குடும்ப அட்டை பெற வேண்டுமென்றால், இப்போது இருக்கின்ற நடைமுறைப்படி, யாராலும் குடும்ப அட்டை வாங்க முடியாது. காரணம் T.S.O.--எனக்குக் குடும்ப அட்டை வேண்டுமென்றால், நான் எங்களுடைய V.A.O.-வை அணுகி, இதுவரை குடும்ப அட்டை நான் பெறவில்லை என்று எழுத வேண்டும். என்னுடைய மனைவிக்கு இன்னொரு மாவட்டம் என்றால், அந்த மாவட்டத்தினுடைய T.S.O.-விடம் சென்று, அவருடைய பெயர், அவருடைய தகப்பனார் பெயரில் உள்ள குடும்ப அட்டையிலேயிருந்து நீக்கிவிட்டோம் என்று எழுதி வாங்கி, இரண்டையும் கொண்டு வந்து, T.S.O.-விடம் அதற்குரிய ஒரு விண்ணப் படிவத்தை எடுத்து, புகைப்படம் ஒட்டி, 2 புகைப்படத்துடன் கூடிய அந்த விண்ணப்பத்தைக் கொண்டு, தாலுகா சப்ளை ஆபிஸரிடம் கொடுத்தால், அவர் வாங்கி, அதை எங்கே வைக்கிறார் என்று தெரியாது. அதை விசாரிக்கிறாரா என்றும் தெரியவில்லை. கிட்டத்தட்ட விசாரணையே கிடையாது. விசாரிக்கவே முடியாது. காரணம், ஒரு தாலுகா அலுவலகத்திலே ஒரே ஒரு T.S.O.-தான் இருக்கிறார். அவருக்குக் கையாளே கிடையாது. அவர் ஒற்றையிலேதான் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். அதுபோக அவருக்கு நெருக்கடிகள் முற்றியவுடனே 4 நாட்கள், 5 நாட்கள், எம்.எல்.ஏ. எல்லோரும் போய், 'எங்களுக்கு ரேஷன் கார்டு என்ன ஆச்சு?' என்று கேட்டால், அந்த 'போஸ்ட்'-டுக்கே அந்த ஆள் வராமல் லீவ்

போட்டுவிட்டுப் போய் விடுகிறார். அடுத்த முறை போய், 6 மாதத்திற்கு முன்னாலே விண்ணப்பம் கொடுத்தோமே, எங்கே என்று கேட்டால், அது காணவில்லை என்று சொல்வார்கள். புதிதாகக் கொண்டு வாருங்கள் என்று சொல்வார்கள். இப்படி 10 தடவை, 20 தடவை விண்ணப்பித்தவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். இது உண்மையான தகவல். ஆகையினால், குடும்ப அட்டை கொடுக்க வேண்டுமென்றால், தாலுகா அலுவலகம் மூலமாக V.A.O., R.I. மூலமாக எல்லோருக்கும் எளிமையாக, கம்ப்யூட்டர் மூலம் கொடுக்கின்ற ஒரு வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். யாராவது குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பித்தால், ஒரு வாரம், 10 நாட்களுக்குள், உண்டு என்றும், இல்லை என்றால் என்ன காரணம் என்றும்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளிக்குள் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** இல்லையென்றால் என்ன காரணம் என்றும், 'ஆம்' என்றால் என்ன காரணம் என்பதையும் ஒழுங்குமுறைப் படுத்திவிட்டு, அதன் பின்பு யாருக்கெல்லாம் அரிசி வேண்டும்; ரேஷனிலே பொருள் வேண்டும் என்று கேட்டீர்கள் என்றால், கிட்டத்தட்ட ரொம்ப கூடப்போனால், ஒரு கோடி பேர்தான் கேட்பார்கள். இந்த ஒரு கோடி பேருக்கும் 20 கிலோ அரிசி என்று வைத்துக் கொடுத்தோம் என்றால், அது 65 கோடி ரூபாய் அல்லது 70 கோடி ரூபாய்தான் வரும். ஒரு மாதம் 70 கோடி ரூபாய்; வருடத்திற்கு 840 கோடி ரூபாய். வேண்டியவர்கள் எல்லாம் வாங்கிக் கொண்டு போகலாம். அப்படி எல்லோருமே வந்தால், நிச்சயமாக ஒரு கோடி கார்டு கூட வராது; குறைவாகத்தான் வரும். இலவசமாகக் கொடுத்தால், 840 கோடி ரூபாய் வரும். 3 ரூபாய் 50 பைசா வைத்து வாங்கினால், 400 கோடி ரூபாய், 500 கோடி ரூபாய் வரை மானியம் வழங்க வேண்டிய நிலைமை ஏற்படும். காரணம், மத்திய அரசிடமிருந்து வாங்குவது 5 ரூபாய் 65 பைசா B.P.L.-க்கு. A.P.L.-க்கு 8 ரூபாய் 15 காசு. நாமே கொள்முதல் செய்து, ரேஷனிலே நாமே கொள்முதல் செய்து, நாமே அரிசியெல்லாம் உற்பத்தி செய்கிறோம்; அதனுடைய விலை எந்த அளவுக்கு இருக்குமோ என்று எனக்குத் தெரியவில்லை. அது என்ன விலை என்று எனக்குத் தெரியவில்லை. அந்த அளவுக்கு... (குறுக்கீடு)



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமே கொள்முதல் செய்தால், அதனுடைய விலை 12 ரூபாய் அடக்கம் ஆகிறது. அதனால் இதைவிட அதிக செலவாகும்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு முதலமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைத் தனியாரிடம் சொல்லி, இந்த அரிசியைத் தயார் செய்து தாருங்கள் என்று சொன்னால், 6 ரூபாய், 7 ரூபாய்க்கெல்லாம் அருமையான அரிசி வழங்குவார்கள். ஏனென்றால், ஒரு மூட்டை நெல் 500 ரூபாய்க்குத்தான் வாங்குகிறார்கள். அதற்கு மேலே விலை இல்லை. 500 ரூபாய்க்கு வாங்கும்போது, ஒரு மூட்டை அரிசி 500 ரூபாய்க்குத்தான் வருகிறது. தாராளமாக 6 ரூபாய், 7 ரூபாய்க்கு டெண்டர் விட்டாலும் சரிதான். (குறுக்கீடுகள்) ஒரு கோட்டை நெல் 112 படி, 2 மூட்டையிலே இருக்கும். இதனுடைய விலை, அறுவடை நேரத்திலே 500 ரூபாய்க்கு மேலே எங்கள் ஊரிலே எல்லாம் இதுவரைக்கும் விற்றதில்லை. 500 ரூபாய்க்கு மேலே விற்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு, பேச்சை முடியுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர். (குறுக்கீடு)

அவையின் அனுமதியோடு பேரவை அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. (குறுக்கீடு) திரு. அப்பாவு, போதும்; உட்காருங்கள், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாட்டில் 1 கோடியே 60 இலட்சத்து 70 ஆயிரம் குடும்ப அட்டைகள் புழக்கத்திலே இருக்கின்றன. அப்படி இருக்கின்ற அந்தக் கார்டுகளை எல்லாம், — சரியாக பொருட்கள் வாங்காதவர்களும் உண்டு; அதை — சீரிய முறையிலே சீர்திருத்த வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல் நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான், கடத்தப்பட்ட அரிசி எல்லாம், நியாய விலைக் கடைகளிலே இருக்கிற பொருட்கள் எல்லாம் சிறப்பாக ஏழை எளியவர்களுக்கு பயன்பட்டிட வேண்டும் என்று விரும்பி ஒரு நல் நடவடிக்கை எடுத்தார்கள். அதிலேதான் கூப்பன் திட்டத்தை

கொண்டுவந்தார்கள். அந்தத் திட்டத்தின் மூலமாக நல்ல பலன் கிடைத்து இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

பொருட்களை வாங்காத குடும்ப அட்டைதாரர்களின் அந்தப் பொருட்களை கடைக்காரர்கள் தவறாகப் பயன்படுத்தினார்கள் என்பதாலும், அவர்கள் கள்ளக் கடத்தலிலே அதை ஈடுபடுத்தினார்கள் என்பதாலும்தான், நம்முடைய அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால், இப்படி ஒரு சீர்திருத்த நல் நடவடிக்கை எடுத்து, அதன் மூலமாக, இப்படி தவறான வழியிலே செல்கிற அந்தப் பொருட்களை தடுக்க வேண்டும் என்பதற்காக நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்தத் திட்டங்களைக் கொண்டு வந்தது. அதன் மூலமாகத்தான் 'எச்' கார்டுகள் கொண்டுவந்து, அந்த நடவடிக்கையின் மூலமாக ஏழை எளியவர்கள் பாதிக்காத வகையிலே, யார் யாரெல்லாம் விரும்புகிறார்களோ, அவர்கள் விருப்பத்திற்கேற்ப, மாத வருமானம் 5 ஆயிரமும், 5 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள், வருமானம் வரி விற்பனை வரி செலுத்தக்கூடியவர்கள் எல்லாம், அவர்களாகவே வந்து அந்த நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டு, சுமார் 18 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் அதிலே தங்களை இணைத்துக்கொண்டு, அந்தக் குடும்ப அட்டைகளை அவர்கள் 'எச்' கார்டுகளாக பதிந்து கொண்டார்கள். அந்த அடிப்படையிலேதான், இன்றைக்கு மேலும் அந்தக் குடும்ப அட்டைகளினுடைய வரம்பு 31-12-2003-உடன் முடிய இருக்கிறது. அதை மேலும் புதுப்பிக்கின்ற வகையிலேதான் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஒரு திட்டத்தை கொண்டுவந்து, அதற்கேற்ப கார்டை ஓராண்டுக்கு புதுப்பித்துக்கொள்ளலாம் என்கின்ற வகையிலேதான் இன்றைக்கு ஓர் அரசாணை வெளியிடப்பட்டு இருக்கிறது. அதற்காகத்தான் இந்த மாதம் முடிய சனி, ஞாயிறு இரண்டு தினங்களில் அந்தப் பணிகளை 10 ஆயிரத்து 998 மையங்களில், 21 ஆயிரத்து 936 பணியாளர்கள் அந்தப் பணியிலே ஈடுபடுத்தப்பட்டு, நவம்பர் முழுவதும் இந்த அட்டைகளை எல்லாம் புதுப்பிக்கின்ற பணிகளிலே இன்றைக்கு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் படிவங்கள் அந்தந்த மையங்களிலே தரப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த மையங்களிலே விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து, வருமானம் ரூ. 5 ஆயிரத்துக்கு குறைவாக உள்ளவர்கள் என்று பதிவு செய்பவர்களுக்கு மேலும் ஓராண்டு காலத்திற்கு இந்த அட்டைகளைப்



புதுப்பிக்கின்ற ஒரு நல் முயற்சி ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டிட விரும்புகிறேன்.

அது மாத்திரமல்ல, பல்வேறு வறட்சி காலங்களிலேகூட நம்முடைய அரசு மிகச் சிறப்பான நல் நடவடிக்கை எடுத்ததன் காரணமாக அரிசியினுடைய விலை ஏறாமல் பார்த்துக்கொண்டது. அதுமாத்திரமல்ல, தரமான அரிசி தமிழகம் முழுவதும் தந்தது இந்த அரசு என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதுமாத்திரமல்லாமல், சோதனைச் சாவடிகளை எல்லாம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அகற்றியதன் விளைவாக நம்முடைய பொது விநியோகத் திட்டம் மிகச் சிறப்பாக நம்முடைய தமிழகத்திலே இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டிட விரும்புகிறேன். பல்வேறு வகையில் வறட்சி நிலவிய நேரத்திலேகூட, நம்முடைய அரசு அரிசியின் விலையை 3 ரூபாய் 50 காசுக்கு இங்கே விற்கக்கூடிய நிலையை ஏற்படுத்தித் தந்தது. பல்வேறு மாநிலங்களில், ஆந்திரா போன்ற மாநிலங்களில் எல்லாம் அது 5 ரூபாய் 25 காசுக்கு விற்கப்படுகிறது. கேரளா போன்ற பகுதிகளிலே 6 ரூபாய் 20 காசுக்கு விற்கப்படுகிறது. மகாராஷ்டிரா, மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் எல்லாம் 6 ரூபாய், 6 ரூபாய் 15 காசுக்கு விற்கப்படுகிறது என்கின்ற நிலையை எல்லாம் மாற்றி, நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் நல்ல நடவடிக்கையின் காரணமாக இன்றைக்குப் பொது விநியோகத் திட்டம் மிகச் சிறப்பாக தமிழகத்திலே நடைபெறுகிறது என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 1-35*

## 4. கவன ஈர்ப்பு

### (ஆ) வேலூர் நகர், சைதாப்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் அரியூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.

[2003 நவம்பர் 5

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், வேலூர் நகரிலுள்ள சைதாப்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளி, அரியூர் அரசு உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றில் ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருப்பதால் மாணவர்கள் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்த விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

**அறிக்கை**

வேலூர் மாவட்டம், வேலூர், சைதாப்பேட்டை, கோடையிடி குப்புசாமி முதலியார் நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டுள்ளன. காலியாக உள்ள தலைமை ஆசிரியர் பணியிடம், முதுகலை இயற்பியல், முதுகலை வேதியியல் மற்றும் முதுகலை வரலாறு ஆசிரியர் பணியிடங்கள் 10 நாட்களுக்குள் நடைபெறவுள்ள ஆசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வின் போது நிரப்பப்படும்.

வேலூர் மாவட்டம், அரியூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் ஓர் இடைநிலை ஆசிரியர் பணியிடம் EVRN அரசு (பெண்கள்) மேல்நிலைப் பள்ளியில் உபரியாக இருந்த ஒரு இடைநிலை ஆசிரியரை மாறுதல் மூலம் நியமித்து நிரப்பப்பட்டது. இதைத்தவிர, இப்பள்ளியில் காலியாகவுள்ள கணக்குப் பட்டதாரி ஆசிரியர் பணியிடம் ஒன்றும், இடைநிலை ஆசிரியர் பணியிடம் இரண்டும், 10 நாட்களுக்குள் நடைபெறவுள்ள ஆசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வின்போது நிரப்பப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், ஒரே கேள்வி.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர், சைதாப்பேட்டை, கோடையிடி குப்புசாமி முதலியார் மேல்நிலைப் பள்ளியில் ஒரு Headmaster பதவி பல மாதங்களாக காலியாக இருக்கிறது. இன்னும் H.M. போடவில்லை. அதேபோல, Physics P.G., Chemistry P.G., History P.G. Teacher இன்னும் போடப்படாமல் இருக்கிறது. இதை உடனடியாக fill-up செய்ய வேண்டுமென்று நான்



C.E.O.-விடம் கேட்டவுடன் C.E.O. என்ன செய்தார் என்று சொன்ன... பக்கத்தில் இருக்கக்கூடிய தோட்டப்பாளையம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலிருந்து அங்கு இருக்கிற ஆசிரியரைக் கொண்டு வந்து இங்கு போட்டவுடன், அங்கு இருக்கக்கூடிய மாணவர்கள், ஆசிரியர்கள் எல்லாம் என்னிடம் வந்து விட்டார்கள். அந்தப் பள்ளி என்ன ஆவது? அங்கே இருக்கக்கூடிய டீச்சரைக் கொண்டுவந்து நீங்கள் இப்போது டெபுடேஷனில் போட்டு விட்டால் அங்கே மாணவர்களின் படிப்பு பாதிக்கப்படுகிறது என்ற ஒரு குறையை அவர்கள தெரிவித்தார்கள்.

அதேபோல அரியூர் பள்ளியை எடுத்துக்கொண்டால், புதிதாக இப்போதுதான் அது ஓர் உயர்நிலைப் பள்ளியாக மாற்றப்பட்ட ஒரு இடம். அந்தப் பள்ளியிலே பட்டதாரி ஆசிரியர்கள், கணக்குப் பட்டதாரி ஆசிரியர் பணியிடம் இன்னும் காலியாக இருக்கிறது. இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் இன்னும் இரண்டு காலியாக இருக்கின்றன. அங்கேயும் அந்த மாதிரி பக்கத்தில் இருக்கக்கூடிய பள்ளியில் இருந்து ஆசிரியர்களை டெபுடேஷனில் போட்டு விடுகிறார்கள். இந்த கலந்தாய்வு என்ற ஒன்றை ...த்துக் கொண்டிருக்கக்கூடிய காரணத்தாலேதான் நீங்கள் அதுவரை காத்திருக்க வேண்டிய ஒரு நிலை. பள்ளியில், கடைசியாக Examination time இப்போது வந்துவிட்டது. இந்த நேரத்தில் கூட இன்னும் நாம் Vacancy-.யை fill up செய்யவில்லை என்று சொன்னால், மாணவர்களுக்கு எப்போது பாடத்தைப் போதிப்பது? அவர்கள் எப்போது தேர்வுக்குத் தயார் ஆவது? ஆகவே, இந்தக் கலந்தாய்வுத் திட்டத்தை எல்லாம்கூட.....(மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி மட்டும் கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** முடித்துவிடுகிறேன். உடனடியாக இந்த இரண்டு பள்ளிகளிலும் இருக்கக்கூடிய காலியிடங்களுக்கு 10 நாட்களுக்குள் கலந்தாய்வு செய்வதாக சொல்லி இருக்கிறார்கள். கலந்தாய்விலே ஒருவேளை ஆளே கிடைக்கவில்லை என்று சொன்னால் பிறகு அப்படியே விட்டுவிடப் போகிறீர்கள். ஆகவே, இந்தக் கலந்தாய்வுத் திட்டத்தையெல்லாம் தயவுசெய்து கொஞ்சம் ஓரம் கட்டிவிட்டு உடனடியாக யார் அந்த இடத்தைக் கேட்கிறார்களோ உடனடியாக டைரக்டரே fill-up செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா? 10 நாட்களுக்குள் அந்த Vacancy fill-up செய்யப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல கலந்தாய்வு மூலமாக பணியிடங்கள் நிரப்பப்படுவதில் காலதாமதம் ஏற்படும் என்று சொன்னால், அவர் விருப்பப்படி நிர்வாக மாற்றத்தின் அடிப்படையில் அந்தப் பணியிடங்கள் விரைவாக நிரப்பப்பட்டுவிடும்.

## (ஆ) வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகள் மற்றும் நியாய விலைக் கடைகளை யானைகள் சேதப்படுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகள் மற்றும் நுகர்வோர் நியாயவிலைக் கடைகளை யானைகள் அடிக்கடி சேதப்படுத்துவதால் பொதுமக்களின் உயிருக்கு ஏற்படும் ஆபத்து" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அறிக்கை

வால்பாறை பகுதிகளில் காடுகள் அழிக்கப்பட்டு காபி, தேயிலை போன்ற தோட்டப் பயிர்கள் அதிக அளவில் பயிரிடப்பட்டு அதன் மூலம் பெறும் வேலை வாய்ப்புக்காக தரையிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்து வால்பாறை மலைப்பகுதியில் குடியேறுவது 1930 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது. தற்போது சுமார் 2,50,000 மக்கள் தோட்டங்களை நம்பி இங்கு குடியேறியுள்ளது மட்டுமல்லாமல், வெளியூர்களிலிருந்தும் காபி, பழங்கள் முதிர்ச்சியடையும் காலத்தில் பறிப்பதற்காக வந்து செல்கின்றனர். 1960-க்குப் பின் இப்பகுதியில் மேல் நீரார், கீழ் நீரார், சோலையாறு, காடம்பாறை போன்ற அணைகள் கட்டப்பட்டதாலும், இப்பகுதியில்





யானைகள் சுதந்திரமாக இடம் பெயர முடியாத நிலை உள்ளது. மேலும் குடியிருப்புப் பகுதிகளில் யானைக்கு விருப்ப உணவான வாழை முதலிய பயிர்களும், தேயிலைத் தோட்ட சதுப்புப் பகுதிகளில் தீவனப் பயிரான கவுதிமாலா புல்லும் விளைவிக்கப்படுவது யானைகளைக் கவர்ந்திழுப்பதாக உள்ளது. மேலும் யானைகள் செல்லும் வழித் தடங்களின் அருகில் அரிசி, சர்க்கரை, உப்பு போன்ற உணவுப் பொருட்கள் பெரிய பாதுகாப்பின்றி வைக்கப்படுவதும் யானைகளைக் கவர்வதாக உள்ளது. இவ்வாறு யானை வழித் தடங்களின் அழிவும் மக்கள் தொகை பெருக்கம் மற்றும் தோட்டப் பயிர்கள் வளர்த்தல் போன்ற காரணங்களால் வால்பாறை பகுதிகளில் யானைகள்—மனிதர்கள் இடையில் மோதல்கள் நிகழ்கின்றன.

2. வால்பாறை பகுதியில் யானைகள் நடமாட்டம் அதிகம் உள்ள சுமார் 50 எஸ்டேட் பகுதிகளில் ரேசன் கடைகள் மற்றும் சத்துணவு மையங்களில் வைக்கப்பட்டிருக்கும் அரிசியிலிருந்து ஈரப்பதமான காற்றினால் வருகின்ற ஒருவிதமான வாடையானது காட்டு யானைகளை அரிசி சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் பகுதிகளுக்கு கவர்ந்திழுப்பதால் யானைகள் மேற்படி எஸ்டேட் பகுதியில் உள்ள சில ரேசன் கடைகளை மற்றும் சத்துணவு மையங்களை சிறிது சேதப்படுத்தியுள்ளன. இவ்வாறு காட்டு யானைகள் சேதப்படுத்தும் குடியிருப்புப் பகுதிகளுக்கும், ரேசன் கடைகளுக்கும் பெரும்பாலும் மண் சுவர் மற்றும் தகரங்கள் வேயப்பட்ட கூரைகளையே கொண்டுள்ளதால் எளிதாக சேதத்திற்குள்ளாகின்றன. கடந்த ஒரு மாத காலத்தில் 8 நிகழ்வுகளில் குடியிருப்புகள், சத்துணவுக் கூடங்கள், ரேசன் கடைகள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை அரிசி, சர்க்கரை, உப்பு போன்ற உணவுப் பொருட்கள் சேமித்து வைக்கப்பட்ட இடங்களாகும்.

3. வால்பாறை பகுதிகளில் வருடந்தோறும் அக்டோபர் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை யானைகள் இடம் பெயர்வது வழக்கம். காட்டு யானைகள் குடியிருப்புப் பகுதிகளுக்கு வரும்போது அவற்றை விரட்டியடிக்க வன உயிரினங்களைக் கையாளுவதில் அனுபவம் மற்றும் சாதுரியமிக்க சரகர், வனவர், வனக் காப்பாளர், வனக் காவலர், யானை காவடி, மாவுத்தன் மற்றும் வேட்டைத் தடுப்பு முகாமில் பணியாற்றும் மலை மக்களைக் கொண்டு சிறப்பு அதிரடி நடவடிக்கை குழு அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி குழுவினர் உடன் சம்பந்தப்பட்ட இடங்களுக்குச் சென்று, துரிதமான நடவடிக்கை

[திரு. ஆர். வைத்திலிங்கம்] [2003 நவம்பர் 5

மேற்கொண்டு, பொது, மக்களுக்கு உயிர் சேதம், பொருட் சேதம் ஏதும் ஏற்படாமல் தடுக்கின்றனர். காட்டு யானைகள், வனத் துறை யானைகள் (கும்கி யானைகள்) மூலம் காட்டுக்குள் திருப்பியனுப்பப்படுகின்றன.

4. காட்டு யானைகளால் ஏற்படும் சேதங்களைத் தவிர்க்கும் பொருட்டு எஸ்டேட் தொழிலாளர் குடியிருப்புப் பகுதிகளில் வாழை மற்றும் காய்கறித் தோட்டங்கள் அமைப்பதைத் தவிர்க்கும்படி தக்க அறிவுரைகளை வழங்குமாறு எஸ்டேட் நிர்வாகத்திற்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. குடியிருப்புப் பகுதிகளுக்கு யானைகள் போன்ற வன உயிரினங்கள் வந்தால் உடனடியாக அருகில் உள்ள வனத் துறை பணியாளர்களுக்கும், வன உயிரினக் காப்பாளர்களுக்கும் தகவல் தெரிவிக்கவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

5. யானைகள் தொன்றுதொட்டு ஒரே பாதையில் செல்லும் பழக்கமுள்ளவை. எனவே அவை பாதைகளை மாற்றிக் கொள்வதில்லை. தனியார் எஸ்டேட் மற்றும் தனியார் காடுகள் 200 ச.கி.மீ. பரப்பில் உள்ளதால் அவை அனைத்திற்கும் அரசு செலவில் மின்சார வேலியோ, யானைத் தடுப்புக் குழிகளோ அமைப்பது என்பது சாத்தியமானதாக இல்லை. எனவே, தனியார் எஸ்டேட் நிறுவனத்தினர் தொழிலாளர் குடியிருப்புப் பகுதிகளைச் சுற்றி சூரிய சக்தியில் இயங்கும் மின்சார வேலி அமைத்தும், யானைத் தடுப்புக் குழிகள் அமைத்தும் சேதங்களைத் தவிர்க்கக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

6. இதற்கப்பாற்பட்டு வன உயிரினங்களின் தாக்குதலால் மரணமடையும் நபரது குடும்பத்திற்கு இழப்பீட்டுத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாய், யானைகள் வளர்ப்புத் திட்டம் மற்றும் புலிகள் பாதுகாப்புத் திட்டம் ஆகிய தலைப்புகளில் வழங்கப்பட்டு வருகிறது.

7. வனத் துறையினால் மேற்கொள்ளப்பட்ட சீரிய முயற்சிகள் காரணமாக 2000-2001-ல் 5 ஆக இருந்த யானைகளால் ஆன உயிரிழப்பு, 2001-2002-ல் 2 ஆகவும், 2002-2003-ல் 1 ஆகவும் குறைந்துள்ளது. மேலும், 2003-2004-ல் 31-10-2003 முடிய உயிரிழப்பு ஏதும் இல்லை என்னும் நிலைக்கு வந்துள்ளது.

8. முடிவாக யானைகளின் சொந்த வீடான காட்டிற்குள் மக்கள் தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு பொறுப்புடன் செயல்பட்டால் பெரும்பாலான உயிர்ச்சேதம் மற்றும் பொருட்சேதங்களைத் தவிர்க்கலாம்.



2003 நவம்பர் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், ஒரு கேள்வி கேளுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதில் இஞ்சிப்பாறை, ஸ்டான்மோட், தோணிமுடி, சவரங்காடு, மாணிக்க என்.சி., தாய்முடி என்.சி., பச்சைமலை, வெள்ளைமலை, அப்பர் பரணி, வாட்டர் பால்ஸ், கஜமுடி, காஞ்சமலை, நல்லகாத்து, ஹைபாரஸ்ட், கருமலை, ஊசிமலை, சிறுகுந்தா போன்ற பகுதிகளிலுள்ள எஸ்டேட் பகுதிகளில் வீடுகளையும், சத்துணவுக் கூடங்களையும், பள்ளிக்கூடங்களில் உள்ள சில வகுப்பறைகளையும் யானைகள் தொடர்ந்து இடித்து வருகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அறிக்கையில் உள்ளபடி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேயிலைத் தோட்ட நிர்வாகத்திடம் கூறி, மின் வேலி போடவும், அதேசமயத்தில் யானைத் தடுப்புக் குழி அமைக்கவும், நிர்வாகத்தை வற்புறுத்தி, அங்கேயிருக்கிற மக்களை பாதுகாப்பதற்கு ஏற்பாடு செய்வாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-40*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானைகள் தொன்றுதொட்டு ஒரே பாதையில் செல்லும் பழக்கம் உள்ளவை. தனியார் எஸ்டேட்கள் 200 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ளதால், அவை அனைத்திற்கும் அரசு செலவில் மின்சார வேலியோ, யானைத் தடுப்புக் குழிகளோ அமைப்பது என்பது சாத்தியமானதாக இல்லை. எனவே, தனியார் எஸ்டேட் நிறுவனத்தினர் தொழிலாளர் குடியிருப்புப் பகுதிகளைச் சுற்றி, சூரிய சக்தியால் இயங்கும் மின்சார வேலி அமைத்தும், யானைத் தடுப்புக் குழிகள் அமைத்தும் சேதங்களைத் தவிர்க்க வனத் துறையினர் மூலமாக கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். இதற்கு அப்பாற்பட்டு, வன விலங்குகளால் தாக்கப்பட்டு மரணம் அடையும் நபரது குடும்பத்திற்கு இழப்பீட்டுத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வந்துகொண்டிருக்கிறது. ஆனால், இந்த வருடம் எந்தவிதமான இழப்பும் ஏற்படவில்லை. வனத் துறை, யானைகள் வராமல் தடுப்பதற்கு, வனத் துறை யானைகள் மூலமாக காட்டு யானைகளை விரட்டி மக்களைப் பாதுகாத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2003 நவம்பர் 5

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திரு. ப. இராஜரெத்தினம்.

**திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தையும், நன்றியையும் சமர்ப்பித்து, 2003-2004 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஏழாவது, எட்டாவது, ஒன்பதாவது மற்றும் பத்தாவது அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன்.

### (ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி வளர்மதி ஜெபராஜ்.

***திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2004 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பத்து ஒன்பது முதல் நாற்பத்து இரண்டாவது வரையிலான நான்கு அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.



2003 நவம்பர் 5]

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்*"

எனக் கோருகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை ஆரம்ப நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2003* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(6-11-2003)* காலை *10-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *1-43* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*24. 2002-2003* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் ஆண்டறிக்கை. [*1956*-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)



### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*30.* சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஏழாவது அறிக்கை *(2003-2004)*

*31.* சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் எட்டாவது அறிக்கை *(2003-2004)*

*32.* சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஒன்பதாவது அறிக்கை. *(2003-2004).*

*33.* சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பத்தாவது அறிக்கை *(2003-2004)*

*34.* பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பத்து ஒன்பதாவது அறிக்கை. *(2003-2004)*

*35.* பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நாற்பதாவது அறிக்கை. *(2003-2004)*

*36.* பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நாற்பத்து ஒன்றாவது அறிக்கை. *(2003-2004)*

*37.* பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நாற்பத்து இரண்டாவது அறிக்கை. *(2003-2004)*

18584

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.